


கற்றது கைம்மண்ணளவு
கல்லாதது உலகளவு

**நியூ செஞ்சுரியின்**

# உங்கள் நூலகம்

**மாத இதழ்**

*திருவள்ளுவராண்டு 2053*

*மலர் - 15 இதழ் - 04 - ஜூலை 2023*

ஆசிரியர்

**த.ஸ்டாலின் குணசேகரன்**

பொறுப்பாசிரியர்

**சண்முகம் சரவணன்**



ஆசிரியர் குழு

பேராசிரியர் ஆ.சிவசுப்பிரமணியன்
முனைவர் ச.சுபாஷ் சந்திரபோஸ்
முனைவர் ந.முத்துமோகன்
முனைவர் மு.இராமசுவாமி
முனைவர் நா.இராமச்சந்திரன்
முனைவர் பா.ஆனந்தகுமார்
முனைவர் ஞா.ஸ்டீபன்
ப.குராஜன்
முனைவர் இரா.அறவேந்தன்
முனைவர் இரா.காமராசு
முனைவர் உ.அலிபாவா

இதழ் வடிவமைப்பு

*கா. குணசேகரன்*



நியூ செஞ்சுரி வாசகர் சங்கம்
பதிவு எண் : 21/2005/ 11/2/2005
16 (142). ஜானி ஜான்கான் ரோடு.
இராயப்பேட்டை. சென்னை - 600 014
ungalnoolagam@gmail.com
இணைய தள முகவரி: www.ncbhpublisher.in

தனி இதழ் ₹ 45.00. ஆண்டு சந்தா ₹ 540.00
மாணவர்களுக்கு ₹ 500.00
ஆயுள் சந்தா ₹ 5400.00
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ 4050.00

*சந்தா தொகையை*
**New Century Reader's Sangam**
**Central Bank of India**
**Ambattur Branch. Chennai - 600 050**
**A/c.No. 1035249018**
**IFSC Code : CBIN0282161**
*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*

---

உங்கள் நூலகம் பற்றிய விமர்சனக் கடிதங்கள்,
உங்கள் நூலகத்திற்கான படைப்புகள், கட்டுரைகள்,
நூல் விமர்சனங்கள், மதிப்புரைக்கான நூல்கள்
ஆகியவற்றைக் கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்புமாறு வேண்டுகிறோம்.

**பொறுப்பாசிரியர்**
**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி. சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்.**
**அம்பத்தூர். சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**


## உள்ளே...


**1** தஞ்சை சரசுவதி மகால் நூலக வளர்ச்சியும் வரலாறும்
டாக்டர். சு. நரேந்திரன்............................................04

**2** கள்ளி நற் குழலாள் மூத்தாள் கணவனைக் கருதிப் பாராள்
அ.கா.பெருமாள்......................................................09

**3** பொதுவிவாதத்திற்கான அடிப்படைக் கேள்விகள்
க.பழனித்துரை.......................................................15

**4** கவிஞர் தமிழ் ஒளியின் குழந்தை இலக்கியம்
சுகுமாரன்...........................................................21

**5** கிழக்கில் 'மூலதனம்' மார்க்ஸ் பற்றி சில சிந்தனைகள்
மா.சிவகுமார்.......................................................27

**6** இந்திய கம்யூனிஸ்டுகள் பரிசீலிக்க வேண்டிய அகநிலை காரணங்கள்
ச.நிதீஷ் குமார்.....................................................33

**7** டாக்டர் அம்பேத்கரின் தலித் விடுதலைக் கருத்தியலும் இன்றைய நிலைப்பாடும் தீர்வும்
முனைவர்.செ.ரவிசங்கர்..........................................39

**8** மரபுவழி நோய்களில் இருந்து தப்பிக்க முடியுமா?
மருத்துவர் ப.வைத்திலிங்கம்....................................51

**9** தமிழவன்: கதைகளின் மையத்தைத் தகர்த்த கதைஞன்
சுப்பிரமணி இரமேஷ்...............................................55

**10** நீட்டலும் மழித்தலும்
முனைவர் நா.சுலோசனா...........................................62

**11** தொல்காப்பியமும் வரருசி இலக்கணமும்: ஓர் அறிமுகம்
ஆ.கார்த்திகேயன்...................................................66

**12** DECODING OF WOMEN IN CHITRA BANERJEE'S THE MISTRESS OF SPICES
Dr. M. Premavathy..............................................70

கட்டுரை




# தஞ்சை சரசுவதி மகால்
## நூலக வளர்ச்சியும் வரலாறும்

**டாக்டர். சு. நரேந்திரன்**

*இந்தியாவில் காசி, தட்சசீலம், பாஞ்சாலம், காஞ்சி போன்ற இடங்களிலிருந்த பல்கலைக்கழகங்களில் சிறந்த நூலகங்கள் இயங்கி வந்ததாக குறிப்புகள் மூலம் அறிய முடிகிறது. கி.பி. இரண்டாம் நூற்றாண்டில் ஆந்திரப் பிரதேசம் குண்டூரிலிருந்து நாகார்ஜுன் பல்கலைக் கழக நூலகமும், கி.பி. மூன்றாம் நூற்றாண்டில் மிகவும் புகழ் பெற்றிருந்த நாளந்தா பல்கலைக் கழக நூலகமும் மிகவும் பழமையான நூல்களைக் கொண்டிருந்ததாக யுவான் சுவாங் போன்ற ஆய்வாளர்களின் குறிப்புகளிலிருந்து அறிய முடிகிறது. இது போன்று இந்தியாவிலிருந்த புத்த விகாரங்களிலும், ஜைன மடங்களிலும் நூலகங்கள் இருந்தமைக்கு சான்றுகள் கிடைக்கின்றன. இந்தியாவிலிருந்த நூலகங்கள் கிரந்த கிருதி, ஞானபாண்டார், புஸ்தக பாண்டார், சரஸ்வதி பாண்டார், சரசுவதி மகால், தர்ம கஞ்சா, கிதாப் கானா எனப் பெயரிட்டு அழைக்கப்பட்டன. இவ்வாறு உருவான பல்வேறு நூலகங்கள் அழிவுற்றாலும் நம் பண்டைக்கால கலை. இலக்கண, இலக்கியங்களை பதிவு செய்யப்பட்ட பனை ஓலைச்சுவடிகள், பிற்கால*

காகிதச் சுவடிகள், அரிய நூல்கள், வரைபடங்கள், ஓவியங்களைக் கொண்டு திகழும் தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகம் இன்று இந்தியாவில் உள்ள நூலங்களில் மிகவும் பழமையான நூலகமாகத் திகழ்கிறது. இந்நூலகம் தமிழ், தெலுங்கு, சம்ஸ்கிருதம், மராத்தி போன்ற மொழிகளில் கலை, மருத்துவம், இலக்கியம், இலக்கணம், புராணம், தத்துவம், சமயம் சார்ந்த சுவடிகளைக் கொண்டுள்ளது. இந்நூலகத்தில் உள்ள சுவடி தமிழ்நாட்டு மக்களின் கல்வி, கலை மற்றும் பண்பாட்டை எடுத்துக் கூறும் அறிவுப் பெட்டகமாகத் திகழ்கின்றது.

உலகமெங்கும் கல்வி வளர்ச்சி என்பது ஆற்றங்கரை நாகரிகத்தின் வழி நடைபெற்றது என்பதற்கிணங்க தஞ்சைத் தரணியின் கல்வி, கலை, பண்பாட்டு வளர்ச்சியானது காவிரி தந்த கொடை என்றால் அது மிகையாகாது.

மேலும் சைவ, வைணவ சமய வளர்ச்சியுடன் கலை வளர்ச்சியும் மேன்மையடைந்ததால் காவிரிக் கரையின் இரு பக்கமும் கோயில்கள் உருவாக்கப்பட்டன. ஆரம்ப காலங்களில் நூலகங்கள் மக்கள் கூடுமிடமான கோயில்களில் வைத்து பாதுகாக்கப்பட்டன. இவ்வாறு சுவடிகள் பாதுகாக்கப்பட்ட அறையினைத் திருக்கை கோட்டி என்று கூறப்பட்டது. கற்றறிந்த மக்களால் மற்றவர்கள் அறிந்து கொள்ள சுவடிகள் வாசிக்கப்பட்டன. அவ்வாறு கோயில்களில் வாசிக்கப்பட்ட மண்டபம் "பட்டண மண்டபம்" என்று குறிப்பிடப்பட்டன. கோயில் நூலகங்களை பராமரிக்கும் நூலகருக்கான ஊதியம் வழங்குவதற்கான நில மானிய விபரம் போன்ற தகவல்களை கோயில் கல்வெட்டுகளில் காண முடிகிறது. தஞ்சை சரசுவதி மகால் நூலகம் தஞ்சைப் பெரிய கோயிலிலிருந்த நூலகத்தின் தொடர்ச்சி என சில அறிஞர்கள் குறிப்பிட்டாலும். பிற்காலச் சோழர் காலத்திய சில சுவடிகளின் பிரதிகளைத் தவிர வேறு எந்தவித வரலாற்றுச் சான்றுகளும் கிடைக்கப் பெறாமையால் அதனை உறுதி செய்ய இயலவில்லை. ஆகையால் கிடைத்துள்ள ஆதாரங்களின் அடிப்படையில் இந்நூலகம் தஞ்சையை ஆண்ட நாயக்க மன்னர்களின் காலத்திலிருந்து இருந்துள்ளது என அறிய முடிகிறது.

தஞ்சையை ஆட்சி செய்த மன்னர்களின் வரிசையில் விஜயநகர மன்னர்களுக்குப் பின் அவர்களது தளபதியாக இருந்து பின் மன்னர்களான நாயக்க மன்னர்கள் நூலகத்தைப் போற்றி வளர்த்தனர். நாயக்க மன்னர்களுக்குப் பின் மராத்திய மன்னர்கள் ஆட்சிபுரிந்தனர்.

1675 முதல் 1855 வரை 10 மன்னர்களுக்குப் பின் மராத்திய மன்னர்கள் ஆட்சிபுரிந்தனர். அனைவரும் கல்வி, கலையில் ஆர்வமிக்கவர்களாகவே இருந்துள்ளனர். இருப்பினும் மிகச் சிறந்த கல்வியாளராகத் திகழ்ந்தவர் ஏகோஜி மன்னரின் மூத்த மகன் ஷாஜி மன்னராவார். இவர் சிறந்த கல்வியாளராகவும். இசை வல்லுநராகவும் தெலுங்கு மொழியில் வல்லுநராகவும் திகழ்ந்துள்ளார். தெலுங்கு மொழியில் இவர் இயற்றிய திருவாரூர் தியாகராசரைப் பற்றிப் பாடிய தியாகேச கீர்த்தனைகள் மிகவும் குறிப்பிடத் தக்கவையாகும். இவர் காலத்தில் தமிழ், தெலுங்கு, சமஸ்கிருதம், மராட்டி ஆகிய மொழிகளின் புலவர்களை ஆதரித்து எண்ணற்ற இலக்கியங்கள் வெளிவர வழிகோலினார். இதனால் இவர் 18 ஆம் நூற்றாண்டின் போஜன் என்று அழைக்கப்பட்டார். இவருக்குப் பின் வந்த மராத்திய மன்னர்களுள் குறிப்பிடத்தக்கவர் இரண்டாம் சரபோஜி மன்னராவார். அவருடைய காலத்தில் அதிக நூல்களும். சுவடிகளும் நூலகத்திற்கு சேர்க்கப்பட்டன.

**இரண்டாம் சரபோஜி மன்னர் (கி.பி. 17981832)**

சரசுவதி மகால் நூலகம் நாயக்கர் காலத்தில் ஆரம்பிக்கப்பட்டு இருப்பினும் அங்கு உள்ள சுவடிகளுக்கு சரியான அட்டவணை இல்லாமையால் சரபோஜி மன்னர் ஆட்சிக்கு வந்தவுடன் அவருடைய உத்தரவின்படி அட்டவணை தயாரிக்கப்பட்டது. ஓலைச் சுவடிகளுக்கான அட்டவணை கி.பி. 1801 ஆம் ஆண்டும் காகிதச் சுவடிகளுக்கான அட்டவணை கி.பி. 1807 லும் தயாரிக்கப்பட்டுள்ளன. ஓலைச்சுவடி அட்டவணையின் முதல் ஏட்டில் கீழே குறிப்பிட்டுள்ள தகவல் தெலுங்கு மொழியில் எழுதப்பட்டுள்ளது.

"சரபோஜி மகாராஜாவிற்கு பட்டம் கட்டுவதற்கு முன்பு இந்த சரசுவதி மகால் நூலகத்திற்கு விவரமான அட்டவணை இல்லை." 1720 ஆம் ஆண்டு காளயுக்தி சம்வத்ரம் சரபோஜி மகாராஜாவிற்கு பட்டம் கட்டிய பின் மன்னியம் பட்டராக இருக்கிற கங்காதரபட் சதாசிவபட்க்கு அதிகாரம் கொடுத்தபின் இந்த சரசுவதி மகால் ஓலைச்சுவடிகளுக்கும். காகித சுவடிகளுக்கும் சரியான நபர்களை நியமித்து சரிபார்த்து இந்த அட்டவணை சாலிவாகன சக வருடம் 1722. ஆங்கில வருடம் 1801ல் அட்டவணை செய்யப்பட்டது எனக் குறிப்பிடப்பட்டுள்ளது. இதன் மூலம் சரபோஜி மன்னர் நூலகத்தின் வளர்ச்சியின்பால் கொண்ட ஆர்வத்தை காணமுடிகிறது.

நூலகத்தில் உள்ள நூல்கள் அனைத்தையும் சரபோஜி படித்தமைக்குச் சான்றாக, ஒவ்வொரு நூலிலும் அவரே தம் கைப்படக் குறிப்புகளை எழுதி வைத்துள்ளார். இவர் தாம் கண்ட காட்சிகளை ஓவியமாக வரையச் செய்து அவற்றை இந்நூலகத்தில் சேர்த்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

சரபோஜி மன்னர் காலத்திலிருந்து திப்புசுல்தானும் ஒரு நல்ல நூலகத்தைத் தம் அரண்மனையில் வைத்திருந்தார். ஆங்கிலேயரின் பகையின் காரணமாக அந்நூலகம் அழிக்கப்பட்டுவிட்டது. ஆனால், சரபோஜி மன்னர் ஆங்கிலேயருடன் நல்லுறவு கொண்டிருந்ததால் சரசுவதி மகால் நூலகம் அழியாமல்



பாதுகாக்கப்பட்டது. பழமையைக் காப்பதிலும் புதுமையை நேசிப்பதிலும் பெரிதும் ஆர்வம் காட்டிய இவர் தலைசிறந்த நூல் ஆர்வலராகவும் மாமன்னராகவும் திகழ்ந்துள்ளார் என்பது தெளிவாகின்றது.

சரபோஜி மன்னருக்குப் பின் அவரது மகன் இரண்டாம் சிவாஜி 1832 முதல் 1855 வரை மன்னராக இருந்தார். அவருக்குப் பின் ஆண் வாரிசு இல்லாததால் அரண்மனை சொத்துக்களுடன் நூலகத்தையும் கும்பெனி அரசு எடுத்துக் கொண்டது.

**கும்பெனி அரசிடமிருந்து சரசுவதி மகால் நூலகத்தினைக் காப்பாற்றியதில் ராணி காமாட்சிபாயின் மனைவி பங்கு: சிவாஜி II**

25.09.1856 இல் சரசுவதி மகால் நூலகம் கும்பெனி அரசுக்குச் சொந்தமானது என்று அறிவிக்கப்பட்டது. 18.10.1856 இல் தஞ்சை அரண்மனையின் ஆணையர் எச்.பார்பஸ் நூலகம் மற்றும் அரசுடைமைச் சொத்துக்களுக்குத் தமது பாதுகாப்பில்லை என்றும் சென்னை அரசு காரியதரிசிக்கு கடிதம் எழுதினார். மேலும் இச்செய்தியை ராணி காமாட்சிபாய் அவர்களுக்கும் தெரிவித்தார். ஆனால், இம்முடிவினைக் கைவிடுமாறு ராணி அவர்கள் ஜே.பி. நார்ட்டன் எனும் தமது வழக்கறிஞர் மூலம் அரசுக்குத் தெரிவித்தார். 18-11-1856 இல் சென்னை உச்சநீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து தடையுத்தரவும் பெற்றார்.

11-02-1857 இல் தீர்ப்பளித்த சென்னை உச்சநீதிமன்றம் பட்டத்து ராணியே அரசின் வாரிசு என்றும் டிகும்பெனி அரசின் செயல் கண்டிக்கத்தக்கது என்று அறிவித்தது. இதனை எதிர்த்து கும்பெனி அரசு இலண்டன் மகாராணியின் உயர்நீதிமன்றத்தில் (privy council) மேல் முறையீடு செய்தது. 27-07-1859 இல் தீர்ப்பளித்த நீதிபதி கும்பெனி அரசின் செயல் கண்டிக்கத்தக்கதே என்றும், இந்த வழக்கைப்பற்றி விசாரித்துத் தீர்ப்பளிக்க எந்த உள்நாட்டு நீதிமன்றத்திற்கும் அதிகாரம் இல்லை என்று மன்னரின் சொத்துக்களைச் சென்னை அரசிடம் சேர்க்கும் படியும் உத்தரவிட்டது. நார்ட்டன் அவர்களின் பெருமுயற்சியின் பயனாய், இங்கிலாந்து பாராளுமன்றம் இது தொடர்பாக விவாதித்து, சிவாஜி மன்னரின் சொந்த சொத்துக்கள் அனைத்தையும் மூத்த பட்டத்தரசி காமாட்சிபாய் மற்றும் மன்னரின் மகள் முக்தாம்பாள்பாயிடம் அளிக்கச் செய்தது. இது தொடர்பாக 21-08-1862 சென்னை அரசினால் ஆணை பிறப்பிக்கப்பட்டது.

கும்பெனி அரசு 21-09-1862 மற்றும் கடித எண் 336/26-09-1862 ஆகிய நாளிட்ட கடிதங்களின்படி சரசுவதி மகால் நூலகத்தினைச் சென்னை நூலகச் சங்கத்துடன் இணைக்கும் எண்ணத்துடன் தமக்கு விலைக்குக் கொடுக்குமாறு வேண்டியது. இம்முடிவை ராணி நிராகரித்தார். இந்நிலையில் இவரது சுவீகாரபுத்திரனால் நூலகம் நன்கு பராமரிக்கப்பட்டுச் செயல்பட்டு வந்தது.

மன்னரின் சொத்துக்களை நிர்வகிக்கும் விதத்தில் ராணிகளுக்கிடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டு தஞ்சை நீதிமன்றத்தில் 1867இல் வழக்கு தொடரப்பட்டது.


1912 இல் கடைசி ராணியின் மறைவிற்குப் பின், அவர்கள் கட்டுப்பாட்டில் இருந்த நூலகமும், அரண்மனை சொத்துக்களும் நீதிமன்றத்தின் கட்டுப்பாட்டிற்குட்பட்டது. நீதிமன்றம் சீனிவாசம் பிள்ளை அவர்களைத் தலைவராகவும், பி. ஆர். நடேசய்யர், பி.உமா மகேசுவரம்பிள்ளை, டி.

சாம்பமூர்த்திராவ் ஆகியோரை உறுப்பினராகவும் கொண்ட குழுவை அமைத்து நூலகத்தை பராமரித்தது.

இந்நூலகத்தின் முதல் கௌரவ செயலாளராக மராத்தி மொழி அறிஞரும் வழக்குரைஞருமான திரு. டி.சாம்பசிவ மூர்த்திராவ் நியமிக்கப்பட்டார். அவர் 20 ஆண்டுகள் கௌரவ செயலாளராக இருந்தார். இவரது காலத்தில் சுவடிகள் மற்றும் அரிய நூல்களுக்கு அட்டவணைப்படுத்தும் பணி செய்யப்பட்டது. திரு. சாம்பசிவ மூர்த்திராவுக்குப் பின் திரு. எஸ். கோபாலன் கௌரவச் செயலாளராக 25 ஆண்டுகள் பணியாற்றினார். இவருடைய காலத்தில் அட்டவணைப்படுத்தும் பணிகளுடன் நூல்கள் வெளியிடும் பணியும் செய்யப்பட்டது.

தமிழ்நாடு அரசால் திரு. நாராயணசாமிப் பிள்ளை தலைமையில் பல மொழி வல்லுநர்களைக் கொண்டு குழு அமைத்து இந்நூலகச் சுவடிகள் மற்றும் சென்னையில் உள்ள அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்திலிருந்து 1000 சுவடிகளைத் தேர்வு செய்து பதிப்பித்து நூல்கள் வெளியிடப்பட்டன. அவ்வகையில் "முத்ரக்ச நாடக கதா" என்னும் வடமொழி சுவடி திரு.வி.ராகவனால் பதிப்பித்து வெளியிடப்பட்டது. அதுவே இந்நூலகத்தின் முதல் வெளியீட்டு நூலாகும். மேலும் கௌரவ செயலரின் முயற்சியில் சிறிய சுவடிகள் மற்றும் இதரத் தகவல்களை வெளியிடுவதற்காக பருவ இதழ் ஆரம்பிக்கப்பட்டது. இவருக்குப்பின் திரு. ஓ.ஏ.நாராயணசாமி அய்யர் ஐந்து ஆண்டு காலம் செயலாளராகப் பணியாற்றினார். அவருடைய காலத்தில் மத்திய அரசிடமிருந்து நிதியுதவி பெறுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டார். மேலும் மத்திய அரசின் தகவல் ஒலிபரப்புத்துறை அமைச்சராக இருந்த திருமதி இந்திரா காந்தி அம்மையாரை நூலகத்தை பார்வையிடச் செய்து இந்நூலகத்தை மேம்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகளை மேற்கொண்டார். அதன்படி இந்நூலகத்தினை மேம்படுத்துவதற்கு இந்திய நூலகவியல் தந்தை திரு.எஸ்.ஆர். ரங்கநாதன் தலைமையில் குழு அமைத்து 1969 இல் தன் அறிக்கையை சமர்ப்பித்தது. திரு.ஒ.ஏ. நாராயணசாமிக்குப் பின் தமிழ்ப் பேராசிரியர் திரு.நீ. கந்தசாமிப்பிள்ளை செயலாளராக ஐந்தாண்டுகள் பணிபுரிந்தார். அவர் முன்பு நடைபெற்ற பணிகளைத் தொடர்ந்ததுடன் அதிகமான தமிழ் நூல்கள் வெளிவரச் செய்தார். அவருக்குப்பின் திரு.அ.வடிவேலன் கௌரவ செயலராகப் பணியாற்றினார். அவருடைய காலத்தில் மத்திய அரசின் நிதி உதவியுடன் 22 பணியிடங்கள் தோற்றுவிக்கப்பட்டன. மேலும் நுண்படப்பிரிவு ஆரம்பிக்கப்பட்டது.

1979 இல் கௌரவச் செயலாளருக்கு இணையான நிருவாக அலுவலர் பணியிடம் உருவாக்கப்பட்டது. 1982இல் இந்நூலகத்தை மேம்படுத்தும் நோக்கில் ஐந்து பேர் கொண்ட நிருவாகக் குழுவைக் கலைத்துவிட்டு தமிழக அரசின் பள்ளிக்கல்வி அமைச்சரைத் தலைவராகவும், மத்திய மாநில அலுவலர்கள் மற்றும் அரச குடும்பப் பிரதிநிதி என 13 பேர் கொண்ட ஆளுமைக்குழு ஏற்படுத்தப்பட்டது. இந்நூலகத்தை தமிழக அரசின் பதிவுச் சட்டம் 1975- ன் படி பதிவு செய்யப்பட்டது. 1982 இல் ஏற்படுத்தப்பட்ட ஒப்பந்தப்படி மத்திய அரசு வளர்ச்சி நிதியையும், தமிழக அரசு பராமரிப்பு நிதியாக பணியாளர்களுக்கு சம்பளம் மற்றும் சில்லறைச் செலவினங்களுக்காக வழங்குகிறது. இந்நூலகம் சுவடிகளைப் பாதுகாத்தல், அட்டவணைப் படுத்துதல், நூல்களாக வெளியிடுதல் மற்றும் ஆய்வாளர்களுக்கு தேவையான நூல்கள்



வழங்குதல் போன்ற பணிகளைச் செய்து வருகிறது. மேலும் பயிலரங்கம் மற்றும் கருத்தரங்குகள் நடத்தி தகவல்களை வெளியுலகிற்கு எடுத்துரைக்கின்றது.


உலகின் பல நாடுகளிலிருந்தும் இந்தியாவின் அனைத்தும் மாநிலங்களிலிருந்தும் ஆராய்ச்சியாளர்கள் இந்நூலகத்தால் சிறப்பான பயன்பெற்று வருகின்றனர். பல்கலைக்கழகம், கல்லூரி மற்றும் ஆய்வு நிறுவனங்களிலிருந்து ஆய்வாளர்கள் பலர் தினமும் இந்நூலகத்திற்கு வந்து பயன்படுத்துகின்றனர். பிரிட்டிஷ் மியூசியம் காப்பாளராக இருந்த பானிஸ்ஸியின் கருத்துப்படியே இந்நூலகம் இந்திய நாட்டின் பண்பாடு தொடர்பான பல இந்திய மொழிகளின் இலக்கியங்களை உள்ளடக்கிய ஒரு தேசிய நூலகமாக விளங்கி வருவது குறிப்பிடத்தக்கது. பண்டார்க்கர் நூலகம் இந்தியாவில் பெரிய நூலகமாகும். ஆயினும், வரலாற்றுக் காரணங்களால் தஞ்சை சரசுவதி மகால் நூலகமே மிக முக்கியமானதாகக் கருதப்படுகின்றது.

●

கட்டுரையாளர், எழுத்தாளர், சென்னை டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக்கழக சிறப்புநிலைப் பேராசிரியர்.

# என்.சி.பி.எச் சிறுநூல் வரிசையில்...

## மார்ச் 2023 வெளியீடு




**இந்திய அரசமைப்பு அவையில்**

# அண்ணல் பி.ஆர்.அம்பேத்கர் ஆற்றிய இறுதி உரை

(நவம்பர் 25, 1949)

**தமிழாக்கம்**

**எஸ்.வி.ராஜதுரை**

இந்திய அரசமைப்பு அவையில் 1949 நவம்பர் 25 அன்று அண்ணல் பி.ஆர்.அம்பேத்கர் ஆற்றிய இறுதி உரையின் தமிழாக்கம் இந்தக் குறுநூலில் தரப்படுகிறது. அந்த உரையில் எவை முக்கியமானவை, எவை சரியாகப் புரிந்துகொள்ளப்படகூடியவை, எவை அவரது எண்ணத்திற்கும் இலட்சியத்திற்கும் எதிராகப் பயன்படுத்தப்படக்கூடிய வாய்ப்பைத் தருபவை என்பதை தமிழ் வாசகர்களும், ஆய்வறிஞர்களும், சமூக, அரசியல் இயக்கக் களப்பணியாளர்களும், அவர்களது தலைவர்களும் தீர்மானித்துக் கொள்ளும் வகையில் அண்ணலின் உரையின் எந்தப் பகுதியும் இங்கு முன்னிலைப்படுத்தப்படவில்லை.

## வாழ்த்துகள்



ஆதனின் பொம்மை என்ற நூலை எழுதிய எழுத்தாளர் **உதயசங்கருக்கு** பால சாகித்ய புரஸ்கார் விருது வழங்கப்பட்டுள்ளது. திருக்கார்த்தியல் என்ற சிறுகதை தொகுப்பை எழுதிய எழுத்தாளர் **ராம்** தங்கத்திற்கு சாகித்ய யுவ புரஸ்கார் விருது வழங்கப்பட்டுள்ளது. விருது பெற்ற எழுத்தாளர்களுக்கு **நியூ செஞ்சுரியின் உங்கள் நூலகம்** வாழ்த்துகளைத் தெரிவித்துக்கொள்கிறது.

கட்டுரை



# கள்ளி நற் குழலாள் மூத்தாள் கணவனைக் கருதிப் பாராள்

அ.கா.பெருமாள்

கொரோனா வியாதியின் பாதிப்பு ஆரம்பித்து மூன்று மாதம் கடந்திருக்கும். ஒரு நாள் மாலையில் தோல் பாவைக்கூத்து கலைஞர் கலைமாமணி பரமசிவராவ் தொலைபேசியில் அழைத்தார். அவரை நான் சந்தித்த 45 வருடங்களில் அப்படிப் பேசியதில்லை. அவர் பசியும் பட்டினியையும் அனுபவித்தவர் தான். ஆனால் என்னிடம் பகிர்ந்து கொள்ள மாட்டார் கலைஞர் என்ற திமிர் அவருக்கு உண்டு.

எனக்குத் தெரிந்து தோல்பாவைக்கூத்து கலைஞர்களில் உச்சத்தைத் தொட்ட உன்னதமான கலைஞர் பரமசிவராவ். அந்தக் கலை மரபில் கடைசி கண்ணி அவர். செல்பேசியில் "சார் நாளையுடன் வீட்டில் அரிசி தீர்ந்துவிடும். கையில் பணம் இல்லை; கடன் கேட்க ஆள் இல்லை; உயிரை விடவும்

துணிவில்லை" என்று சொன்னார். அவரது மனைவி கோமதி பாய் இன்னும் கொஞ்சம் சற்று இரங்கிப் பேசினாள். நான் அவரிடம் "எப்படியும் நாளை யாரையாவது அனுப்புகிறேன் உதவ வருவார்கள் பேசிப் பார்க்கலாம் தைரியமாக இருங்கள்" என்று சொன்னேன்.

நாகர்கோவில் இந்துக் கல்லூரி பேராசிரியர் ஜெகதீசனிடம் பேசினேன். அவர் ஒரு அமைப்பு நிர்வாகியிடம் கலந்தார். அடுத்த நாளே ஒரு மாதத்திற்குரிய அரிசி. பலசரக்கு பொருட்களை அவருடைய வீட்டிற்குக் கொண்டு சேர்ப்பதற்கு ஏற்பாடு செய்தார். இன்னொருவர் காய்கறி பழம் கொடுத்தார். அன்று இரவு பரமசிவராவ் குரல் தழுக்க என்னிடம் பேசினார். பழைய விஷயங்களைப் பகிர்ந்து கொண்டார்.

தோல்பாவைக் கூத்து நிகழ்வில் அதிகமான பார்வையாளர்கள் நல்லதங்காள் கூத்துக்குத்தான். சில ஊர்களில் பார்வையாளர்களின் வேண்டுகோளுக்காக இந்தக் கூத்தை இரண்டாம் நாளும் நடத்தப்படுவதுண்டு. நல்ல தங்காளுக்கும் அவளது அண்ணிக்கும் நடக்கும் உரையாடல் பார்வையாளர்களிடம் சலனத்தை உண்டாக்கி விடும். அதில் சமகால குடும்பப் பிரச்சனைகள் உண்டு. வயதான பெண்கள் தங்கள் அனுபவத்தை அதில் இணைத்து பார்த்துக் கொள்வார்கள்.

அண்ணனின் மனைவி அலங்காரியால் அவமானப்படுத்தப்பட்டு தன் ஏழு குழந்தைகளுடன் அண்ணனின் வீட்டை விட்டு வெளியேறுவாள். காட்டு வழி செல்லுகிறாள். அவள் குழந்தைகளுடன் சேர்ந்து தற்கொலை செய்ய முடிவு செய்கிறாள். காட்டு வழி போகிறாள். குழந்தைகளுக்கும் பசி. ஏழு குழந்தைகளும் அழுகின்றன.

மூத்த மகன்.

**பசிக்குதே அம்மா பசிக்குதே**
**வாழும் வயிறு துடிக்குது**

என்று பாடுகிறான். நல்லதங்காள்

**பசித்த மக்களா பொறுத்துக் கொள்ளுங்கள்**
**பழுத்த கனிகளைப் பறித்து தருகிறேன்**
**மக்களா என் மக்களா**

என்று பாடுகிறாள். பரமசிவராவ் நல்லதங்காள் கூத்தை நடத்தும்போது ஒவ்வொரு முறையும் இந்தக் காட்சியை உருக்கமாகப் பாடுவதாகச் சொன்னார். அவர் சொல்லிவிட்டு ஆரம்ப காலத்தில் இந்தக் கூத்தின் காட்சிகளை உணர்ந்துதான் பாடினேன். என் மக்களில் ஒருத்தி அலுமினிய வாளியை எடுத்துக்கொண்டு பகலில் வீடு வீடாக பழைய சாதம் கேட்டு வாங்கி வந்த நிகழ்ச்சியை மறக்க முடியவில்லை. அப்போது படாத பாட்டை இந்த கொரோனா பட வைத்து விட்டது என்றார்.

பரமசிவராவ் தோல்பாவைக் கூத்து நிகழ்ச்சியை நடத்துவதை. 2002 லேயே விட்டுவிட்டார். ஒரு காலத்தில் கூத்து தன் ஜீவனத்துக்காக மட்டுமல்ல ஆத்ம திருப்திக்காகவும் என்று சொல்லியிருக்கிறார். அப்போது அவருக்கு ஆனந்தமும் பெருமிதமும் இருந்தது. ராமன் பேரைச் சொல்லி ஊரு ஊராகச் செல்வது எங்களுக்கு புண்ணியம் தான் என்றார். கூத்தைவிடும்போது அவருக்கு வயது 67 தான். 75 வயதிலும் கூத்து நடத்தும் மராட்டிய கலைஞர்களை நான் அறிவேன்.

பரமசிவராவின் அண்ணன் சுப்பையா ராவ் 80 வயதிலும் தோல்பாவைக் கூத்துப் பாடல்களை அடி பிசறாமல் பாடுவார். எண்பதுகளில் கூட பாவைக் கூத்து பாடல்களை ராகவிஸ்தாரம் பாட்டின் ஏற்ற இறக்கம் என்ற தன்மையுடன் பாடி. காட்டினார் தோல்பாவைக்கூத்திலும் சங்கீத மரபு இருந்தது என்பதற்கு அவர் கடைசி அடையாளம் ஆக இருந்தார்.



பரமசிவராவ் 50 வயதில் படித்த ஜோதிடம் 65 வயதிற்குப் பின்னர் அவருக்குக் கை கொடுத்தது. அவரிடம் ஜோதிடம் பார்க்க வருகின்றவர்களிடம் ஜோதிட மொழியில் பேசி தன்னை அந்நியனாக காட்டிக் கொள்ள மாட்டார். சாதாரண மொழியில் உண்மையைச் சொல்லி பரிகாரமும் சொல்லுவார். அந்தப் பரிகாரம் பொதுவான கடவுள் பக்தி சார்ந்ததாகத் தான் இருக்கும்.

பரமசிவராவிற்கு குலசேகரப்பட்டினம் முத்தாரம்மனிடம் அதிக பக்தி உண்டு. அவரது ஜாதிக்காரர்கள் எல்லோருக்குமே அவள் குலதெய்வமாக இருந்தாள். அது அண்மையில் உருவானது. அந்த தெய்வத்தின் அருளும் சக்தியும் தனக்கு இருப்பதாக தனிப்பட்ட முறையில் என்னிடம் சொல்லி இருக்கிறார். ஆனால் ஜோதிடம் பார்க்க வருகின்றவர்களிடம் அப்படி ஒரு சக்தி தனக்கு இருப்பதாக சொல்லவே மாட்டார். ஜோதிடத்தை ஒரு கலையாக மட்டுமே அவர் பார்த்தார்.

அவர் அடிக்கடி என்னிடம் சொல்லுவார் " உங்க முயற்சியால் அரசு ஓய்வூதியம் எனக்கு வருகிறது; மக்கள் எல்லோரும் செட்டில் ஆகி விட்டார்கள்; வசதியான சொந்த வீடு; எனக்கு இது போதும்; ராமனின் பெயரைச் சொல்லி ஊர் ஊராக கதை பாடி வாழ்ந்த காலம் எல்லாம் போய்விட்டது; அந்த ஒரு குறை தான் எனக்கு" என்று சொல்லுவார்.

ஒருமுறை ஆங்கில இந்து நாளிதழ் சென்னை நகரின் மூத்த நிருபர் கோலப்பனைப் பரமசிவராவிடம் அழைத்துச் சென்றேன்; முன் ஏற்பாடு இல்லை பரமசிவராவ் வீட்டில் இருந்தார்; நான் ஆங்கில இந்து நாளிதழ்; கோலப்பன் கவர் ஸ்டோரி; என்பதெல்லாம் விவரமாய் சொல்லிவிட்டு சில கேள்விகளுக்கு மட்டும் பதில் சொன்னால் போதும்" என்றேன்.

எந்தச் சலனமும் இல்லாமல் பேசினார். "எனக்கு அதெல்லாம் எதற்கு? என் படமோ பேரோ பேப்பர்ல வர்றதுல எனக்கு என்ன வந்து சேரப் போகிறது ஒன்றும் வேண்டாம் சார்" என்றார். வெறுப்பும் விரக்தியும் கலந்து பேசினார். நான் மீண்டும் மீண்டும் கேட்டுக் கொண்டதால் கொஞ்சம் பேசினார். படம் எடுக்கவும் இணங்கினார். நானே அவரைப் பற்றி பேசி பேட்டியை முடித்தேன்.

தனிப்பட்ட வாழ்க்கையிலும் அவர் கலை நிகழ்த்த சென்றபோதும் ஏற்பட்ட அனுபவத்தாலும் அவருக்கு மனக்கசப்பு உண்டு. முக்கியமாக அவரது மனைவியால் அவருக்கு பாதிப்பு அதிகம். மனைவி அவரைப் படுத்திய பாட்டை அடிக்கடி சொல்லுவார். தெருக்கூத்துக் கலைஞர் புரிசை கண்ணப்ப தம்பிரானின் மறைவுக்குப் பின்னர் வந்த அவரது நினைவு மலரில் படித்த ஒரு கட்டுரை பரமசிவராவுக்கு பொருந்தும் என்று தோன்றியது. ஒரு வகையில் பரமசிவராவ் கலையின் உச்சத்தை அடையாததற்கு அவரது குடும்பச் சூழல் காரணமாக இருந்திருக்கலாம்.

தோல்பாவைக் கூத்து நிகழ்ச்சியில் மூன்றாம் நாள் பரதன் பட்டாபிஷேக நிகழ்ச்சி ராமனை காட்டுக்கு அனுப்பாதே என்று தசரதன் கைகேயியிடம் கெஞ்சி கெஞ்சி பேசுவான். இந்த காட்சி தோல்பாவை கூத்தில் விரிவாகவே காட்டப்படும். இந்த உரையாடலில் சமகாலப் பிரச்சனையின் சாயல் இருக்கும். தசரதன் கையேயிடம் உருக்கமாகப் பேசும் பேச்சை பரமசிவராவ் உணர்ந்தே பேசுவார். கொஞ்சம் கொஞ்சமாக உருக்கம் கோபமாகும்.

தசரதன் கைகேயியைப் பழித்து பேசுவான். அந்தப் பேச்சும் வேகமும் படிப்படியாக கூடும். பேச்சின் உச்சத்தில் பரமசிவராவ் தன் மனைவியை பார்த்து பேசுவது மாதிரி தோற்றத்தை உருவாக்கி விடுவார். நன்றாகத் தெரிந்தவர்களுக்கு அது தெரியும். பாதகி வஞ்சகி சண்டாளி பிறந்ததுமே நாக்கில் விஷத்தை உனக்குத் தடவி விட்டார்களா? ஒரு மொழியில் நல்ல வார்த்தைகள் உண்டு என்பது அறிய மாட்டாயா? என்று சொல்லிக் கொண்டே போவார் அப்போது.

**ஆலகால விஷத்தை நம்பலாம்**
**ஆற்றையும் பெரும் காற்றையும் நம்பலாம்**
**கோலை மா மத யானையை நம்பலாம்**
**கொல்லும் வேங்கைப் புலியை நம்பலாம்**
**காலனார் விடுதூதரை நம்பலாம்**
**கள்ள வேடர் மறவரை நம்பலாம்**
**சேலை கட்டிய மாதரை நம்பினால்**
**தெருவினில் நின்று தயங்கி தவிப்பாரே**

என்று பாடுவார்.

இந்தப் பாடல் அவரது அடிமனத்தில் இருந்து வருவது. இதே பாடலை அவரது அப்பா கோபாலராவும் பாடினாராம். இது விவேக சிந்தாமணியில் உள்ள பாடல் என்பதை பிறகு நான் கண்டுபிடித்தேன்.

பரமசிவராவின் மூத்த அண்ணன் சுப்பராவ் பற்றி காலச்சுவடு இதழுக்கு ஒரு கட்டுரை எழுத செய்தி சேகரித்த போது பரமசிவராவ் தகவலாளியாக என்னிடம் நிறையப் பேசினார். அப்போது அவர் தன்னைப் பற்றிப் பல விஷயங்களை என்னிடம் சொன்னார்.

பரமசிவ ராவ் தன் தந்தை கோபால் ராவிடம் தங்களின் பூர்வீகம் குடிப்பெயர்ச்சி பற்றி நிறைய கேட்டிருக்கிறார். தென்திருவிதாங்கூர் பகுதியில்



தோல்பாவைக் கூத்துக்காரர்கள் பதினெட்டாம் நூற்றாண்டில் குடியேறினர். அது சுவாதித்திருநாள் என்ற அரசர் திரு.விதாங்கூரில் அரசராய் இருந்த காலமாய் இருக்கலாம்.

இங்கு முதலில் குடியேறியவர் கிருஷ்ணராவ் (1800- 1882) அவரது மகன் சாமிராவ் (1830 1900) இவரது மகன் கிருஷ்ணராவ் (1860 - 1940) இவரது மகன் கோபாலராவ் 1882 - 1976) இவரது மகன் பரமசிவராவ், (1945---) கோபாலராவின் மூத்த மகன் சுப்பையா ராவ் (1908 - 1999) எனக்கு அவர் மரபு! வழியாக கேட்ட நிறைய விஷயங்களை சொல்லி இருக்கிறார். பரமசிவராவ் இவரிடம் பாடுவதற்கும் மிருதங்கம் அடிப்பதற்கும் கற்றிருக்கிறார். கோபாலராவ் கடைசியாக கன்னியாகுமரி அருகே உள்ள பஞ்சலிங்கபுரம் என்னும் சிறு கிராமத்தில் இருந்தார். கோபாலராவுக்கு 11 குழந்தைகள். பரமசிவராவ் ஐந்தாவது மகன்.

பரமசிவம் படித்தது கொட்டாரம் ஊரில் பள்ளி இறுதி படிப்பு வரை படித்தார். பள்ளிப்படிப்பு முடிந்ததும் திருமணம். மனைவிக்கு வயது 14 சொந்த அக்காள் மகள். இதன் பிறகு நிகழ்ச்சி நடத்த ஆரம்பித்து விட்டார். பரமசிவராவின் அண்ணன்மார்கள் ராமச்சந்திரன் கணபதி சுப்பையா ராவ் என மூன்று பேரும் கோவில்பட்டி மதுரை திருநெல்வேலி இன்னும் இடங்களுக்குக் குடி பெயர்ந்து விட்டனர். அதனால் அப்பாவுக்கு உதவியாகவோ தனியாகவோ நிகழ்ச்சி நடத்தினார்.

அறுபதுகளின் ஆரம்ப காலத்தில் நாஞ்சில் நாட்டு கிராமங்களில் கோபால் ராவ் நிகழ்ச்சி நடத்தி இருந்திருக்கிறார். அப்போது பரமசிவராவ் துணைப்பாடகர். 60களின் பாதியில் பரமசிவராவ் தனியாக கதை நடத்த ஆரம்பித்தார். அப்போது கோபாலராவ் துணைப்பாடகர் எல்லாம் 1973 வரை தான். இதன் பிறகு கோபால் ராவினுடைய உடல் தளர்ந்து விட்டது.

பரமசிவராவ் என்னிடம் நான் கூத்து நடத்துவதை விட்டுவிடுவேன் என்று அடிக்கடி சொல்லுவார் ஜோதிடம் பார்ப்பதில் கிடைக்கும் வருமானமே எனக்கு போதும் என்றார். நான் அவரது நிகழ்ச்சிகளை முழுதும் பதிவு செய்ய வேண்டும் என்று முடிவு செய்தேன் அதற்கான நேரத்திற்கு காத்திருந்தேன். என்பதுகளில் (பெரும்பாலும் 1988 ஆக இருக்கலாம்) நாகர்கோவிலில் ராமன்புதூர் என்ற இடத்தில் ஒரு சிறு கிராமத்தில் பத்து நாள் நிகழ்ச்சி நடத்தப் போவதாக என்னிடம் சொன்னார். நான் முன் தயாரிப்புடன் பதிவு செய்யப் போனேன் அப்போது சுப்பையா ராவ் துணையாகப் பாடினார். இதற்குப் பிறகும் சில ஊர்களிலேயே நிகழ்ச்சி நடத்தினார்.

2017ல் அவரைச் சந்தித்தபோது மனம் நொந்து பேசினார். ஜோதிடம் பார்ப்பதால் வருமானம் நிறையவே வந்தது. ஆனால் உறவில் விரிசல். அவரை வாட்டியெடுத்த மனைவியுடனான உறவு மோசமானது ஒருமுறை நான் அவரிடம் விடைபெறும் போது ஒரு பாடலைப் பாடினார். அது ராமாயணக் கூத்து மூன்றாம் நிகழ்ச்சியில் பாடப்பட்ட பாடல். தசரதனுக்கு வயதாகிவிட்டது. ராமனுக்கு பட்டாபிஷேகம் நடத்த வேண்டும் என்கிறான் தசரதன். வசிட்டன் அது சரி மகனிடம் நாட்டை கொடுத்துவிட்டு வானப்பிரஸ்தம் சென்று விடு என்று சொல்லுகிறான். அப்போது ஒரு அசரீரிப்பாடல் கேட்கிறது.

**பிள்ளை தான்வயதில் மூத்தால்**
**பிதாவின் சொல் புத்தி கேளான்**
**கள்ளி நற் குழலால் மூத்தாள்**
**கணவனை கருதிப் பாராள்**
**தெள்ளற வித்தை கற்றால்**
**சீடனும் குருவைத் தேடான்**
**உள்ள நோய் பிணி தீர்ந்தால்**
**உலகோர் பண்டிதரை நாடார்**

என்ற அந்தப் பாடலை ராகவிஸ்தாரத்தோடு பாடினார் இதுவும் விவேக சிந்தாமணியில் உள்ள பாடல் என்பதை பின்னர் அறிந்தேன்.

●

கட்டுரையாளர், ஓய்வுபெற்ற பேராசிரியர். நாட்டார் வழக்காற்றியல் மற்றும் சமூகப் பண்பாட்டு ஆய்வாளர்.

## நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் மகத்தான படைப்பு விரைவில்...

# சங்க இலக்கிய உரைவேறுபாட்டுக் களஞ்சியம்

### ஒரு நூற்றாண்டு வாசிப்புப் பின்புலத்தில்

பாடல் - பாடவேறுபாடு - உரைவேறுபாட்டு விளக்கங்கள் - பாடற்கருத்து - அருஞ்சொற்பொருள் - விரிவான ஆய்வு முன்னுரை எனும் அமைப்பில்

எண்மரின் பத்தாண்டுகாலக் கடும் உழைப்பில்

20 தொகுதிகள், 8000 பக்கங்கள்

உயர்ந்த கட்டமைப்பில்

தமிழக வரலாற்றில் முதல்முறையாக

நற்றிணை - க.பாலாஜி,
குறுந்தொகை - இரா.அறவேந்தன்,
ஐங்குறுநூறு - ம.லோகேஸ்வரன்,
பதிற்றுப்பத்து - இரா.மகிழேந்தி,
பரிபாடல் - ம.லோகேஸ்வரன்,
கலித்தொகை - மு.முனீஸ்மூர்த்தி,
அகநானூறு - மா.பரமசிவன்,
புறநானூறு - அ.செல்வராசு,
திருமுருகாற்றுப்படை - நித்தியா அறவேந்தன் & இரா.அறவேந்தன்,
பொருநராற்றுப்படை - அ.செல்வராசு,
சிறுபாணாற்றுப்படை - அ.செல்வராசு,
பெரும்பாணாற்றுப்படை - இரா.அறவேந்தன்,
முல்லைப்பாட்டு - நித்தியா அறவேந்தன்,
மதுரைக்காஞ்சி - அ.செல்வராசு,
நெடுநல்வாடை - இரா.மகிழேந்தி,
குறிஞ்சிப்பாட்டு - நித்தியா அறவேந்தன்,
பட்டினப்பாலை - இரா.மகிழேந்தி,
மலைபடுகடாம் - மு.முனீஸ்மூர்த்தி,

27 – 7– 2023 அன்று சென்னை பாரதீய வித்யா பவன், கிருஷ்ணா ஸ்வீட்ஸ் மற்றும் உறவுச் சுரங்கம் இணைந்து நடத்திய விழாவில் பாவை பப்ளிகேஷன்ஸ் பொது மேலாளர் ஆ.சிவக்குமார் அவர்கள் பாராட்டிச் சிறப்பிக்கப்பட்டார். இந்நிகழ்வில் மேனாள் மாவட்ட ஆட்சித்தலைவர் ரா.கற்பூரசுந்தரபாண்டியன் ஐஏஎஸ், மேனாள் தமிழ் வளர்ச்சித்துறை இயக்குநர் கூ.வ.எழிலரசு, தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழக கட்டடக்கலைத் தலைவர் பேராசிரியர் முனைவர் க.திலகவதி, பேராசிரியர் முனைவர் உலகநாயகி பழனி மற்றும் கிருஷ்ணா ஸ்வீட்ஸ் ஸ்ரீதர் ஆகியோர் கலந்துகொண்டனர்.



1983 ஆம் ஆண்டு நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் சகோதர நிறுவனமாக பாவை பிரிண்டர்ஸ் (பி) லிட் எனும் அச்சகம் உருவாக்கப்பட்டது. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் நிறுவனம் வெளியிடும் அனைத்துப் புத்தகங்களையும் அச்சிடுவதோடு புத்தக வடிவமாக்கி வழங்கி வருகிறது. மேலும் ஜனசக்தி, உங்கள் நூலகம், சமூக விஞ்ஞானம் உள்ளிட்ட பத்திரிகைகளை அச்சிடுவது போன்ற பணிகளை பாவை பிரிண்டர்ஸ் மேற்கொண்டு வருகிறது.

இதன் தரம் கருதி மத்திய – மாநில அரசு நிறுவனங்களும் சென்னைப் பல்கலைக்கழகம், அண்ணா பல்கலைக்கழகம் உள்ளிட்ட பல பல்கலைக்கழகங்களுக்கும், வங்கிகளுக்கும் அச்சுப்பணிகள் செய்து வருவது குறிப்பிடத்தக்கது.

அச்சகத்துக்கான அச்சு வேலைகளை மட்டும் செய்துவந்த பாவை பிரிண்டர்ஸ் பாவை பப்ளிகேஷன்ஸ் எனும் பதிப்பகத்தையும் நடத்தி வருகிறது. நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் நிறுவனத்துடன் இணைந்து டாக்டர் அம்பேத்கர் நூல் தொகுப்புகள் 37 தொகுதிகளை மொழிபெயர்த்து அச்சாக்கம் செய்து நூலாக வெளிக் கொண்டு வந்ததில் பாவை பிரிண்டர்ஸ் மற்றும் பாவை பப்ளிகேஷன்ஸின் பணி குறிப்பிடத்தக்கது.

40 ஆண்டுகளாக சென்னையில் இயங்கி வரும் பாவை பிரிண்டர்ஸ் நிறுவனம் தமிழகத்தில் குறிப்பிட்டு சொல்லத்தக்க அச்சகங்களில் ஒன்றாகத் திகழ்ந்து வருகிறது


கட்டுரை

# பொதுவிவாதத்திற்கான அடிப்படைக் கேள்விகள்



க.பழனித்துரை

நான் நீண்ட காலமாக ஒரு கேள்வியை பல அரசியல்வாதிகளிடமும் அறிவு ஜீவிகளிடமும் கேட்டு வருகிறேன். எனக்குச் சரியான பதில் அந்தக் கேள்விக்குக் கிடைக்கவில்லை. பொதுவாக லாபம் ஈட்டுதல் என்பது தொழிலில் வணிகத்தில் நடைபெறும் நிகழ்வுதான். அது ஒன்றும் தவறல்ல. மனிதத்திறமையை செயல்பட அனுமதிக்கும்போது அதற்கு ஊக்குவிப்பு தேவையாகிறது. எனவே அந்த ஊக்குவிப்பு என்பது லாபத்தின் மூலம்தான் நடைபெறும். இந்தக் கோட்பாட்டைக் கோடிட்டுக் காட்டிய ஆடம் ஸ்மித், அவர் எழுதிய "தேசங்களின் செல்வம்" என்ற புத்தகத்தில் கடைசியில் இந்த லாபம் ஈட்டும் செயல்பாடுகள் எப்படி நடைபெறவேண்டும் என்பதற்கு ஒரு "தார்மீக நியதிகள் என்பது அடிப்படையாக்கி அதன் அடிப்படையில் நடைபெற வேண்டும்" என்றார். அதற்கு ஆங்கிலத்தில் *(Moral Sentiments)* மாரல் சென்டிமென்ட்ஸ் என்று விளக்கியிருந்தார். மானுடம் அளப்பரிய செயல்பாடுகளைச் செய்து மிகப்பெரிய மாற்றங்களையும் மேம்பாட்டையும் உருவாக்கியுள்ளது. இந்த 'லாபம் ஈட்டுதல்'



என்ற செயல்பாடு தொழில் புரட்சியில் ஆரம்பித்து இன்று நடைபெற்று வரும் உலகமய பொருளாதாரம் வரை நடைபெற்று வருகிறது. அந்த நிகழ்வு அன்றிலிருந்து இன்றுவரை எந்த வரையறையும் அற்று செயல்பட்டு இன்று உலகத்தில் எல்லையில்லா பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை ஏற்படுத்தி விட்டது. இந்த ஏற்றத்தாழ்வுகள் என்னென்ன தீய விளைவுகளை உலகில் மானுடத்திற்குள் ஏற்படுத்தப் போகிறது என்பதற்கு இன்னும் பொது விவாதம் உருவாக்கப்படவில்லை.

அடுத்து, இந்த எல்லை இல்லா பொருளாதார ஏற்றத்தாழ்வும், சமூக ஏற்றத்தாழ்வுகளும் அதிகமுள்ள நாடுகளில் எல்லையற்ற தீய விளைவுகளை உருவாக்கும் என்று தெரிந்தும் எந்தப் பொது விவாதமும் பொதுத்தளத்தில் எழவில்லை. அதற்கு வித்திட வேண்டிய நடுத்தர வர்க்கம், புதிய பொருளாதாரத்தில் தங்களுக்குக் கிடைத்த லாபத்தை சுவைத்துக் கொண்டுள்ளது. அடுத்து மக்களாட்சி நடைபெறும் நாடுகளில் இதனை மக்களிடம் எடுத்துச் சென்று மக்களுக்கு இதன் தீவிர தீய விளைவுகள் பற்றி விழிப்புணர்வு ஏற்படுத்தி மக்களை இதற்கு எதிராக போராட வைக்கவேண்டிய அரசியல் கட்சிகள், சந்தைப் பணத்தில் அரசியல் நடத்திக் கொண்டிருப்பதால் அந்தப் பணியைச் செய்யவில்லை. அரசியல் கட்சிகள் அவ்வப்போது அரசியல் நிகழ்வுகளை நடத்தி மக்களிடம் தங்கள் இருப்புக்களை நிலைநிறுத்திக் கொண்டுள்ளன. இவற்றைக் கடந்து இந்த சந்தைச் செயல்பாடுகளில் மிகப்பெரிய சீர்திருத்தத்தை முன்னெடுக்க வேண்டும் என்ற எந்தச் சிந்தனையும் அற்று அரசியல் கட்சிகள் உலகம் முழுவதும் செயல்பட்டு வருகின்றன. இதன் மூலப் பிரச்சினை என்பது லாபத்தில் இருக்கிறது என்ற எந்தப் புரிதலையும் சாதாரண மக்களாகிய நாம் பெறவில்லை. இதைத்தான் ஒரு கேள்வியாக என் கட்டுரைகளில் தொடர்ந்து வைத்து வந்தேன். லாபத்திற்கு வரையறை உண்டா இல்லையா என்பதுதான் அந்தக் கேள்வி. இன்று உலகம் முழுதும் ஒரு சிந்தனை ஓட்டம் இருக்கிறது, அதுதான் சந்தைச் சிந்தனை, பொருளாதாரச் சிந்தனை, அதிகாரச் சிந்தனை. பெரும்பான்மை மக்கள் பெயரில் மக்களாட்சி என்று பெரும்பான்மையான நாடுகளில் நடந்தாலும் பெரும்பான்மை மக்களின் வாழ்வுநிலை பற்றிய சிந்தனையோ, உணர்வோ அற்று நாட்டின் தலைவர்கள் நடந்துகொள்வதை நம்மால் உணரமுடிகிறது. அதுமட்டுமல்ல உலகத்தில் தலைமைக்கு பஞ்சம் வந்துவிட்டது என்று பொதுத்தளத்தில் விவாதிக்கின்றனர். அதே நேரத்தில் சந்தையில் மிதமிஞ்சிய தலைமைத்துவம் உருவாகி சந்தையை வலுவாக்கி வருகின்றனர். சந்தைதான் உலகம் என்ற அளவுக்கு சந்தையை பலம்பெறச் செய்துவிட்டனர். இதன் விளைவை குடும்பத்திலிருந்து ஆன்மீகம், அரசியல் என்று எல்லா இடத்திலும் பார்த்து வருகின்றோம்.

ஒரு பொருள் உற்பத்தி செய்ய 10 ரூபாய் செலவாகின்றது. அதை விற்று லாபம் ஈட்டுபவர் எவ்வளவுக்கு லாபம் வைக்கலாம் என்பதற்கு வரையறை செய்ய வேண்டியது அரசின் கடமையா இல்லையா? ரூபாய் 10க்கு தயாரித்த பொருளை 20 ரூபாய்க்கு விற்று 100% லாபம் பெறலாமா? அதே பொருளை ரூ 30க்கு, ரூ 40க்கு விற்கலாமா? அது நியாயமா, தர்மமா? அது எந்த அறத்தைச் சார்ந்தது. இந்த லாபம் ஈட்டுவதை வரையறை செய்யாத நிலையில் எல்லையற்ற வளத்தை ஒருசிலர் கைக்குள் கொண்டு சென்றுவிட்டனர் என்று ஆய்வு அறிக்கைகள் வந்தபின்னும் நாம் வாளா இருப்பது எதைக் காட்டுகிறது? இந்த லாபம் எல்லையற்ற சுரண்டலை இயற்கை வளத்தின் மீதும், மனித வளத்தின் மீதும் நடத்தி வந்தவை என்பது யாரையும் பாதிக்கவில்லையா? இது புரியவில்லையா? என்பதுதான் கேள்விகள்.

இந்த நேரத்தில் ஓர் அறிக்கை வந்துள்ளது. நாம் யாரை குறைகூறிக் கொண்டுள்ளோமோ அவர்களிடமிருந்து தான் அந்த அறிக்கை வெளிவந்துள்ளது. அதைக் கொண்டுவந்தவர் உலக ஊடக முதலாளியாக செல்வத்தைக் குவித்து வைத்துள்ள டிஸ்னே என்பவர்தான். இந்த அறிக்கையில் 12 நாடுகளைச் சேர்ந்த 206 பெரும் செல்வந்தர்கள் கையெழுத்திட்டுள்ளனர். இந்த அறிக்கை கூறுவது இந்த எல்லையற்ற ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்க உலகத் தலைவர்களே உங்கள் அரசாங்கங்களின் மூலம் முடிவுகளை உடனே எடுத்து நடைமுறைப்படுத்துங்கள். இதை எங்கே ஆரம்பிக்க வேண்டுமென்றால் செல்வவரி (Wealth Tax) யில் ஆரம்பிக்க வேண்டும். செல்வவரி போட்டு இந்த ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்க வழிவகை செய்யுங்கள். இவர்களுடைய வேண்டுகோள் என்பது கிரேட்டாதுன்பர்க் உலகத் தலைவர்களை நிமிர்ந்து பார்க்க வைக்கும் ஓர் அறைகூவல் செய்தார் அல்லவா, அதேபோல்தான்.

கடந்த பத்தாண்டில் 103.5% உலக பில்லினியர் செல்வந்தர்கள் வளர்ந்துள்ளனர். இவர்களுடைய சொத்து 5.9 ட்ரில்லியன் டாலர் வளர்ந்துள்ளது. இதில் கையெழுத்திட்டிருப்பவர்கள் உச்சகட்ட வருமானத்தை உலகத்தில் ஈட்டுபவர்கள். தங்களை நாட்டுப்பற்று மிக்க செல்வந்தர்கள் என்று தங்களை வர்ணித்து இந்த அறிக்கையைத் தந்துள்ளனர். இவர்கள் கூறும் முக்கியக்

கருத்து தற்போது நடந்துவரும் பொருளாதார வளர்ச்சி உலகை உயிரோடு விழுங்கிக் கொண்டுள்ளது, இது தடுத்து நிறுத்தப்பட்டு பொருளாதார சீர்திருத்தங்கள் செய்யவில்லை என்றால் உலகப் பொருளாதாரத்தை உடைத்தெறியும், நம் சூழலை நாசமாக்கும், ஒட்டுமொத்த பொருளாதாரத்தை நிலைகுலையச் செய்யும், அடுத்து மக்களை வீதிக்குக் கொண்டுவரும், மக்களாட்சியை மயானத்துக்கு அனுப்பும். எனவே ஒட்டுமொத்த மக்கள் இயக்கத்தை அடியோடு நிறுத்திவிடும், எதிர்காலத்தை சூனியமாக்கும். உடனே செயல்படத் தயாராகுங்கள் என்பதுதான் அந்த அறிக்கை கூறும் முக்கிய கருத்து. ஆனால் உலகம் முழுவதும் சந்தைக்கான சீர்திருத்தம் எனக் கூறி இவர்கள் அடிக்கோடிட்டுக் காட்டும் சீர்திருத்தத்திற்கு நேர் எதிர்மறையான சீர்திருத்தத்தைச் செய்து வைத்துள்ளனர். இது தொடர்பான இன்னொரு கேள்வி இருக்கிறது. அதையும் கேட்டுள்ளேன். ஒரு தொழில் நிறுவனத்தின் தலைவராக இருப்பவர் தனக்கென ஆண்டுக்கு 60 கோடி ரூபாய், 50 கோடி ரூபாய் சம்பளம் தாங்களே நிர்ணயித்துக் கொள்வது என்பது நியாயமானதா?

அந்தக் கம்பெனியின் லாபத்தில்தானே இதனைப் பெறுகிறார் என்று விவாதிக்கக்கூடும். இவருக்கு மூலதனம் வங்கிதானே தருகிறது. அது பொதுமக்கள் பணம்தானே. அதில் வரும் லாபத்தில் ஏன் வங்கிக்கு பங்கு தரக்கூடாது. உழைப்பில்லாமல் லாபம் வரவில்லையே. எனவே லாபத்தில் தொழிலாளர்களுக்கு பங்கு தரவேண்டும் என்பது நியாயமில்லையா? இதைக் கேட்கக்கூடாதா? மூளை உழைப்பிற்கு அதிகப்பணம், உடல் உழைப்பிற்கு குறைவாகத் தரவேண்டும் என நிர்ணயித்தது யார்? இதை விவாதிக்கக்கூடாதா? விவசாயக் கூலித் தொழிலாளர்களை ஆற்றலற்ற தொழிலாளி (Unskilled Labourer) என்று யார் பிரித்தது. உழுவதும், வரப்பு வெட்டுவதும், கதிர் அறுப்பதும், பரம்படிப்பதும், நாற்றுப்பறிப்பதும், நடவு நடுவதும், வைக்கோல் அடிப்பதும், வைக்கோல் போர் போடுவதும், விதை நெல்லைப் பாதுகாக்க கோட்டை கட்டுவதும் திறன் இல்லையா, அதை ஏன் திறனுக்குள் கொண்டுவரவில்லை. கல்வி என்பது மானுடத்தை மேம்படுத்தவா அல்லது மானுடத்தை சுரண்டி வாழும் கலையைக் கற்றுத் தருவதற்கா? கல்வி என்பது சமூக மேம்பாட்டிற்கானதா அல்லது, தனிமனிதர்கள் பணம் சம்பாதிக்கக் கற்றுக்கொள்ளும் யுக்தியா? மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதிகள் மக்களின் சேவகரா? மக்களின் எஜமானர்களா? ஏன் சேவகர்போல் நடந்து கொள்ளாமல் மக்களின் எஜமானர்கள்போல் நடந்துகொள்கிறார்கள். அப்படித்தானே அரசு அதிகாரிகளும், அலுவலர்களும், அவர்கள் அனைவரும் ஏன் மக்களை இவர்கள் போடும் பிச்சைக்காக எதிர்பார்த்து பயனாளிப் பட்டாளமாக வாழ்வதாக நினைத்து மரியாதை இல்லாமல் நடத்துகின்றனர்.

கல்வி வரியை அரசுக்குத் தந்துவிட்டு, தன் குழந்தைகளுக்கு நல்ல கல்வி என தேடி தனியார் வலையில் வீழ்ந்து அதற்கும் தான் உழைத்து சம்பாதித்த பணத்தை கொடுத்துவிட்டு அறியாமையில் மக்களை வாழ அனுமதித்து விட்டோமே, இதை யார் நெறிப்படுத்துவது. வன உரிமைச் சட்டம் கொண்டுவந்து உலகுக்கு அறிவித்து விட்டு பெரும் முதலாளிகளை காடுகளில் உள்ள கனிம வளங்களைச் சூறையாட ஆதிவாசிகளை அப்புறப்படுத்துவதை யார் கேட்பது? தகவல் உரிமைச் சட்டம், கல்வி உரிமைச் சட்டம், உணவு உரிமைச் சட்டம், தெருவணிகர் பாதுகாப்புச் சட்டம், துப்புரவுப் பணியாளர் மேம்பாட்டுக்கான சட்டம், வேலை உரிமைச் சட்டம் என கட்டுக்கட்டாக உரிமைகளை கொடுத்ததாக அறிவிக்கும் அரசாங்கம் அவைகளை மக்கள் பயன்படுத்திட மக்களிடம் விழிப்புணர்வை ஏன் ஏற்படுத்தவில்லை. சட்டங்கள் அனைத்தும் ஐ.நாவிற்கும் உலக நாடுகளுக்கும் கூற மட்டும்தானா? மக்களுக்கு இல்லையா?

இந் நாட்டில் ஊழல் என்பது ஆறாய் பெருக்கெடுத்து ஓடுவது யாருக்கும் தெரியவில்லையா? ஊழல் இன்று கோடிகளில் நடைபெறுகின்றது என்பது யார் கண்ணுக்கும் படவில்லையா? மக்கள் இனாம் கேட்கிறார்கள், வாக்குக்குப் பணம் கேட்கிறார்கள் என்று கொச்சைப்படுத்த தெரிந்த அரசுக்கு அவர்களை மரியாதையுடைய வாழ்வை வாழ வழிவகை செய்யத் தெரியவில்லை என்பது யாருக்கும் புலப்படவில்லையா? மக்களாட்சியில் வாக்குகள் விற்பனையாகின்றன என்று பேசுகின்றோமே வாக்குகளை சந்தைப்படுத்தியது மக்களா கட்சிகளா என்று கேட்டால் கட்சிகள்தான் என்பது அனைவருக்கும் தெரிந்தும் மக்களின்மேல் குற்றத்தை சுமத்தி மக்களாட்சியைக் கொச்சைப்படுத்தியது நம் அரசியல்தான். இன்று மக்களாட்சிக்கு ஆபத்து என்று பேசுகின்றோம். நாடு சுதந்திரம் வந்தவுடன் இடதுசாரிகள் கூறினார்கள், இது சாதாரண



மனிதர்களுக்கான சுதந்திரம் கிடையாது, என்றுதான் வாதிட்டனர். அது உண்மை என்பது தற்போது புரிகிறதா? இவ்வளவு மக்கள் விரோத செயல்கள் நடைபெறுவதைப் பார்த்து ஒரு நடுத்தர வர்க்கம் எந்தக் கேள்வியும் இன்றி அமைதியாக நுகர்வில் தோய்ந்து ஆளும் வர்க்கம் கூறுவதைக் கேட்டு நமக்கேன் வம்பு என்று வாழ்கிறது. உலகமயப் பொருளாதாரம் நடுத்தரவர்க்கத்தை உபரி பார்க்க வைத்து விட்டது. சமூகச் சிந்தனையற்றதாக நடுத்தர வர்க்கம் மாற்றப்பட்டுவிட்டது.

நாடு சுதந்திரம் அடைந்தவுடன் மகாத்மாகாந்தி மக்களின் சுயமரியாதையை நிலைநிறுத்துங்கள் எனக் கேட்டார். அடிப்படை மாற்றத்திற்கு பணி செய்யுங்கள் என்றார். சுயராஜ்யம் என்பதற்கு அரசு மக்கள் விரோதப்போக்கைக் கொண்டு செயல்படும்போது அதை எதிர்த்துப் போராடுவது தான் சுயராஜ்யம் என்று விளக்கிப் போராட வேண்டும் என்றார். கடந்த 30 ஆண்டு காலத்தில் நாம் புதிய பொருளாதாரக் கொள்கையில் தோய்ந்து, வளர்ச்சி, மேம்பாடு, பொருளாதாரம் பற்றி பேசுகின்றோம், வறுமையைப் பற்றிப் பேசுவதை நிறுத்திவிட்டோம். அது மட்டுமல்ல எந்தவித அரசியல் போராட்டங்களும் நடைபெறா வண்ணம் அரசியல் கட்சிகளை கார்ப்பரேட் அரசியல் நடத்த கற்றுக் கொடுத்து மக்கள் பிரச்சினைகளுக்கு மக்களே போராட வேண்டிய சூழலுக்குத் தள்ளி, அவர்கள் களைத்து தோற்றுப்போய் அமைதியாகி விட்டனர்.

அரசியல் கட்சிகள் தேர்தலுக்குத் தேர்தல் வாக்குகளை விலைகொடுத்து வாங்குவதும், மக்களுக்கு இனாம்களை அறிவித்து அதை ஓசி என்று அவர்களை அவமானப்படுத்துவதையும் வழக்கமாக்கி சந்தைக்காக செயல்படும் அரசாங்கமாக மாற்றி வைத்துக்கொண்டோம். சூதாட்டத்தில் அரசுக்கு வருமானம் வந்தால் அது விளையாட்டு என்று வகைப்படுத்தி அனுமதிக்கப்படும். மக்கள் தங்களைத் திருத்திக்கொள்ள வேண்டும் என்று அறிவுரை கூறுகிறது. மதுவால் அரசுக்கு பெரும் வருமானம் வருகிறது, மது குடிப்பது தவறுதான், மக்களாக உணர்ந்து கொள்ள வேண்டும். புகைப்பது கொடிய பழக்கம்தான் அதனால் வருமானம் வருகிறது. எனவே அந்த பொட்டலத்தில் அச்சடித்து விட்டோம், அதைப்பார்த்து மக்கள் அதை உபயோகப்படுத்தாமல் இருந்துகொள்ள வேண்டும். சந்தை என்ன கூறுகிறதோ அதைக்கேட்டு அரசு நடந்துகொள்ள வேண்டும். ஏனென்றால் அரசியல் கட்சிகளுக்கு சந்தைதானே நிதி தருகிறது. பெரு முதலாளிகள் கோடிகளில் மக்கள் சேமிப்பை வங்கிகள் மூலம் எடுத்து முதலீடு செய்து தொழிலில் லாபம் ஈட்டும் பொழுது லாபத்தில் பெரும்பகுதியை தனக்கு ஒதுக்குகின்றார்கள். நஷ்டம் வந்தால் கடனை ரத்து செய்து வாங்கிக் கொள்கின்றனர். இல்லையேல் வங்கியை திவாலாக்கிவிட்டு அவர்கள் வெளிநாடு சென்றுவிடுகின்றனர் சுகபோக வாழ்க்கை வாழ்வதற்கு.

கிராமத்தில் விவசாயத்திற்கு வாங்கிய கடனை அடைக்க முடியாமல் அவனே தற்கொலை செய்து கொள்ளுகின்றான். லட்சக் கணக்கில் விவசாயிகள் தற்கொலை செய்யும்போது அந்த விவசாயிகளுக்கு பூச்சி மருந்தும், ரசாயன உரமும் விற்ற கம்பெனிகள் பல மடங்கு லாபத்தை பெருக்கிக் கொண்டன. எவ்வளவு பொறுப்புடன் இந்தக் கம்பெனிகள் நடந்துகொண்டுள்ளன என்பது இதிலிருந்தே நாம் தெரிந்து கொள்ளமுடியும்.


மக்களாட்சி நசுக்கப்படுகிறது என்று பேசும் நாம் யார் மக்களாட்சி நசுக்கப்படுகிறது என்று பேசவேண்டும். தேர்தல் நடத்துவதையே மக்களாட்சியாக்கி இதுவரை அரசியல் நடத்தினோம். மக்களாட்சியின் அடிப்படைக் கூறுகளான சமத்துவம், சகோதரத்துவம், நியதி, நேர்மை, நியாயம், நீதி, கருத்துச் சுதந்திரம், எதிர்கருத்துக்கு மதிப்பளித்தல், கடையனின் கோரிக்கைக்கு செவிசாய்த்தல், அனைத்தும் நம் மக்களாட்சியில் இருக்கின்றனவா? அப்படிப்பட்ட மக்களாட்சியை மக்களிடம் கொண்டு சென்றோமா? அரசியல் சாசனத்தின் மூலம் அரசியல் சமத்துவம் கிடைத்து, அடுத்த நிலையில் 75 ஆண்டுகள் ஆகியும் சமூக சமத்துவம் கிடைத்ததா, பொருளாதார, சமத்துவம் கிடைத்ததா? இந்த இரண்டும் இல்லாத பொருளாதாரச் சமத்துவத்தால் யார் பயனடைந்தார்கள். இவை ஏன் நம் அரசியலில் விவாதிக்கப்படவில்லை. இன்று நமக்குத் தேவை விரிவான விவாதம். இவைகள்தான் மக்கள் மேடைகளில் சாதாரண மக்களிடம் விவாதிக்க வேண்டும். இதைச் செய்யத்தான் நமக்கு இன்று அரசியல் இயக்கங்கள் தேவை. தேர்தல் ஜனநாயகம் நம்மை சிதிலமடைய வைத்துவிட்டது.

இன்று நாம் ஒரு பெரு விவாதத்திற்குத் தயாராக வேண்டும். அந்த விவாதங்கள் சுயநலம் பேணும் நடுத்தர மக்களிடம் செய்ய வேண்டியது அல்ல. சாதாரண மக்களிடம் இன்று இவைகள் அனைத்தும் எடுத்துச்சென்று விவாதிக்கப்பட வேண்டும். இதை சென்னையிலிருந்து அறிக்கைவிட்டு செய்ய இயலாது. கிராமம் கிராமமாகச் சென்று மக்களுடன் அமர்ந்து அவர்களுடன் விவாதிக்க வேண்டும். இதற்கு நூற்றுக்கணக்கான இளைஞர்கள் உருவாக வேண்டும். அதுதான் இன்று தேவையாக இருக்கிறது.

●

கட்டுரையாளர், காந்திகிராமிய பல்கலைக்கழக ராஜீவ் காந்தி பஞ்சாயத்து ராஜ் ஆராய்ச்சி இருக்கைத் தலைவர் (ஓய்வு)

கட்டுரை



# கவிஞர் தமிழ் ஒளியின் குழந்தை இலக்கியம்

சுகுமாரன்

**தமிழ் ஒளி யார்? பாவேந்தர் பாரதிதாசனின் சீடர் கவிஞர் தமிழ் ஒளியின் நூற்றாண்டை ஒட்டி...**

இன்றைய இளந்தலைமுறையினர் தமிழ் ஒளியை அறியாதவர்களே! குவிந்து கிடக்கும் கண்ணாடி கற்களுக்கிடையே கோகினூர் வைரம் போன்றவர் தமிழ் ஒளி. தமிழ்க் கவிஞர்களில் சிறப்பு வாய்ந்தவர்.

மகாகவி பாரதி 39 ஆண்டுகள் வாழ்ந்தார். தமிழ் ஒளியும் 41 ஆண்டுகளே வாழ்ந்தவர். இருவருடைய மரணமும் தமிழ் இலக்கிய உலகிற்கு மிகப் பெரிய இழப்பாகும்.

பாரதியின் கவிதை சித்தர் மரபைச் சேர்ந்தது. பாரதிதாசனின் கவிதை சங்க மரபைச் சேர்ந்தது. தமிழ் ஒளியின் கவிதை காவிய மரபைச் சேர்ந்தது. ஒன்பது காவியங்களைப் படைத்தவர் தமிழ் ஒளி. மாதவி காவியம் அவருடைய தலை சிறந்த படைப்பாகும்.

21-09-1924-ல் தமிழ் ஒளி புதுச்சேரியில் பிறந்தவர். அவருடைய இயற்பெயர் விஜயரங்கம். பெற்றோர் பொ.சின்னையா- திருமதி செங்கேணியம்மாள்.

தமிழ் ஒளி மாணவப் பருவத்திலேயே கவிதை மீது நாட்டம் கொண்டவர். அதனால் அவர் பாரதிதாசனோடு பழகினார். பாரதிதாசனின் உதவியோடு கரந்தை தமிழ்க் கல்லூரியில் புலவர் படிப்பில் சேர்ந்தார். ஆனால் படிப்பை நிறைவு செய்யவில்லை. சென்னைக்கு வந்த அவர் முழு நேரக் கவிஞரானார்.

தமிழ் ஒளி கொள்கைக் கவிஞர். பொதுவுடைமைத் தத்துவம் அவரை ஈர்த்தது. 'மே தினமே வருக!' என்று கவிதை எழுதினார். சோவியத் ரஷ்யாவைப் போற்றி எழுதினார். தமிழ் ஒளி ஏழை மக்களின் கவிஞர் ஆனார்.

தமிழ் ஒளி குழந்தைகளுக்காக எழுதினார். அவரது குழந்தை இலக்கியம் முக்கியத்துவம் வாய்ந்தது. 60 குழந்தைப் பாடல்களை எழுதியுள்ளார். குழந்தைகளின் அறிவைத் தூண்டும் விதத்தில் குட்டிக் கதைகளும் எழுதினார். அவை டால்ஸ்டாயின் குட்டிக் கதைகளுக்கு இணையானவை. அவை 'வனமலர்கள்' என்ற பெயரில் நூலாக வெளிவந்ததுள்ளன.

குட்டிக் கதைகளுக்கும் ஒரு மரபு உள்ளது. பாரதி, மாதவையா, விந்தன், அண்ணா, கலைஞர், கண்ணதாசன் என்று பலரும் குட்டிக் கதைகளை எழுதியுள்ளனர். கவிஞர் தமிழ் ஒளியின் குட்டிக் கதைகள் தனித்துவமும் நுட்பமும் வாய்ந்தவை.

தமிழ் ஒளி 105 குட்டிக் கதைகளை எழுதியுள்ளார். அவை அறிவூட்டல், மகிழ்வூட்டல் என்ற இரு நோக்கங்களைக் கொண்டுள்ளது. இக்குட்டிக்கதைகள் தாமரை, சரஸ்வதி, ஜனசக்தி, அமுதசுரபி ஆகிய பத்திரிகைகளில் வெளிவந்தன. இக்குட்டிக் கதைகளை பதின்ம வயதுக் குழந்தைகள் படித்துப் புரிந்து கொள்ள முடியும்.

இக்குட்டிக்கதைகள் மிகுந்த கற்பனை நயத்துடனும் இனிமையான நடையிலும் அமைந்துள்ளன.

'புல்லாங்குழல்' என்ற கதையைப் பார்ப்போம்:

மூங்கில், குயிலைப் போல் கூவ விரும்புகிறது. ஒரு நாள் அது நடக்கும் என்று காற்று சொல்லுகிறது. ஒரு மனிதன் வருகிறான். மூங்கிலை புல்லாங்குழல் ஆக்கி ஊதுகிறான். புல்லாங்குழலிலிருந்து குயிலின் ஓசை கேட்கிறது.

'ஆகா, நான் குயில் போல் கூவுகிறேன். இதைக் காண்பதற்கு காற்று வரவில்லையே!' என்று வருத்தப்பட்டது.

'புல்லாங்குழலே! நான் தான் உன் இசையாய் மிதந்து செல்கிறேன்' என்று கூறியது காற்று.

இந்த குட்டிக் கதை ஒரு சுவையான, அர்த்தமுள்ள கற்பனை.

'முக்கியமான செய்தி' என்ற ஒரு குட்டிக்கதை முக்கியமானது.

நீண்ட தூரம் பயணம் செய்து வந்த ஆறு கடலில் கலக்கிறது. ஆற்றைப் பார்த்து கடல் கேட்கிறது. 'உன் பயணத்தில் பல ஊர்களைப் பார்த்திருப்பாய். அவ்வூர்களில் நீ கேட்டறிந்த செய்தியைக் கூறு.'

'இப்போது தான் நான் உன்னுடன் சேர்ந்தேன். ஒன்று கலந்து விட்டோம். ஆனால் ஊர் மக்கள் ஒன்று கலந்து வாழ்வதில்லை என்பதுதான் முக்கியமான செய்தி' என்றது ஆறு.

இவ்வாறு தமிழ் ஒளியின் குட்டிக்கதைகள் மகிழ்வூட்டவும் செய்கிறது; அறிவூட்டவும் செய்கிறது.

தமிழ் ஒளி குழந்தைகளுக்காக எழுதிய பாடல்கள் 'பாடு பாப்பா' என்ற தலைப்பில் நூலாக வெளிவந்துள்ளது. தலைப்பிற்கேற்றவாறு குழந்தைகளைப் பாடத் தூண்டுகிறது என்றே சொல்லலாம்.

தமிழ் ஒளியின் குழந்தைப்பாடல்கள் அறிவுப்பாட்டுகள், அழகுப் பாட்டுகள், ஆனந்தப் பாட்டுகள் என்று மூன்று பிரிவுகளாக அமைந்துள்ளன.

முதலில் அறிவுப் பாட்டைப் பார்ப்போம்:

கல்வியின் முக்கியத்துவத்தை திருக்குறளும் நாலடியாரும் ஔவையும் சொல்லி விளக்கியதை 12 வரிகளில் தமிழ் ஒளி எளிய சொற்களில் கூறி விடுகறார்.

'பாடம் படியா ஒரு பையன்
பள்ளி செல்லா ஒரு பையன்
மூடன் ஆனான் முன்னாலே
மூட்டை சுமந்தான் பின்னாலே

சொல்லைக் கேளா ஒரு பையன்
துள்ளித் திரிந்த ஒரு பையன்
கல்லான் ஆனான் முன்னாலே
கட்டை சுமந்தான் பின்னாலே

சோம்பித் திரிந்த ஒரு பையன்
சுற்றித் திரிந்த ஒரு பையன்
தேம்பித் திரிந்தான் முன்னாலே
தெருவில் நின்றான் பின்னாலே'

முற்பகல் செய்யின் பிற்பகல் என்ன விளையும் என்பதைதான் கவிஞர் கன்னத்தில் அறைந்தது போல் சொல்லியிருக்கிறார்.



நகைப் பைத்தியம் என்பது பெண்களை வேதனை அடையச் செய்கிறது. குடும்பத்தில் குழப்பத்தை உண்டாக்குகிறது. சிறுமிகளுக்கு இதைப் பற்றிய அறிவுரையை 'நகை வேண்டாம் பாப்பா' என்று தமிழ் ஒளி பாடுகிறார்.

**"பச்சைக் கிளிக்கு நகையில்லை!**
**பாடுங் குயிலுக்கு அணியில்லை!**
**இச்சை மைனாப் பறவைக்கும்**
**ஏதும் கழுத்தில் நகையில்லை!**
**கச்சை சதங்கை யில்லாமல்**
**காட்டில் ஆடும் மயிலுக்கும்**
**உச்சிக் கொண்டை நகையில்லை**
**உனக்கேன் பாப்பா நகையெல்லாம்!"**

அருமையான பாடல். கருத்தும் கற்பனையும் கைக்கோக்கும் பாடல். எனக்குப் பிடித்த பாடல். என் மகள்களுக்கு நகைப்பைத்தியம் பிடிக்கக் கூடாது என்று வீட்டில் நான் அடிக்கடி சொல்லிய பாடல்.

குழந்தைகள் தெருவில் பிச்சைக்காரர்களைப் பார்க்கிறார்கள். எப்படி பிச்சைக்காரர்கள் உருவானர்கள் என்பது அவர்களுக்குத் தெரியாது. இந்தப் பாடலில் தமிழ் ஒளி காரணத்தைக் கூறுகிறார்.

**"கந்தல் துணி உடுப்பான்**
**கையை ஏந்தி திரிவான்**
............................
............................
**வீடும் கிடையாது**
**வேலை கிடையாது**
**சொந்தக்காரர் இல்லை**
**சோறு துணி இல்லை**
**இந்த விதம் அவனை**
**இழிவு படச் செய்தோர்**
**பெரிய பணக்காரர்**
**பெரிய தீமை செய்தார்"**

குழந்தைகளின் மனதில் இருக்கும் சமூகம் சார்ந்த ஒரு கேள்விக்கு விடையைக் கூறும் பாடல் இது. ஒருவன் ஓட்டாண்டியாக ஆக்கப்படுவது செல்வந்தர்களால்தான் என்பதை பாரதிதாசன் ஆத்திசூடியில் 'கொடுத்தோன் பறித்தோன்' என்று கூறுகிறார். குருவின் கருத்தைத்தான் தமிழ் ஒளியும் இப்பபாடலில் எதிரொலித் திருக்கிறார்.

குழந்தைகளின் குறுகுறுக்கும் விழிகளை விரிய வைக்கும் அழகான காட்சிகளை அழகுப் பாட்டு பிரிவில் தமிழ் ஒளி தந்துள்ளார்.

நிலவில் ஒரு நிழல் பகுதி தெரிகிறது. பாட்டி உட்கார்ந்து வடை சுட்டுக் கொண்டிக்கிறார் என்று அதைப் பற்றி குழந்தைகளுக்குச் சொல்லுவார்கள்.

தமிழ் ஒளி ஒரு புதிய கற்பனையை 'ஆலமரம்' பாட்டில் தந்திருக்கிறார்.

**"நிலவில் உள்ள ஆலமரம்**
**நீண்டு வளர்ந்த ஆலமரம்**
**ஆலமரத்தின் கீழே போய்**
**அவ்வைப் பாட்டி உட்கார்ந்தே**
**உனக்குக் கதைகள் சொல்கின்றாள்**
**ஊஊம் என்றே கேட்பாய் நீ"**

தலை வாரி பூச்சூடிக் கொள்ள பெண்பிள்ளைகளுக்கு ரொம்பப் பிடிக்கும். இந்த உண்மை பூக்களுக்கும் தெரிந்திருக்கிறது.

பூ சொல்வதாக ஓர் அழகுப் பாடலை தமிழ் ஒளி தந்திருக்கிறார்.

"பச்சைக் கொடி வீட்டில்
பக்குவமாகப் பூத்தேன்
இச்சை கொண்ட நங்கை
என்னைக் கிள்ளி மோந்து

கொண்டையின் மேல் வைத்துக்
கொண்டு நடந்தாளே
அண்டையில் உள்ளோர்
ஆசையாய்ப் பார்த்தார்!"

அழகுப் பாட்டையும் அறிவுப்பாட்டையும் தந்த தமிழ் ஒளி குழந்தைகள் மகிழ ஆனந்தப்பாட்டையும் தந்துள்ளார்.

'ஊர் போக வேண்டும்' என்றாலே ஆனந்தம் துள்ளிக் கொண்டு வரும். தம்பியின் ஆனந்தத்தைக் கவிஞர் இங்கே சொல்லுகிறார்.

'ஊரு போக வேண்டும்
ஒரு கல்லுக்கும் அப்பால்
தேரு போல அங்கே
தெரியும் தென்னஞ்சோலை!

ஆறு வரும் தம்பி
அரைக் கல்லுக்கும் அப்பால்
ஏறு தோணி மேலே
ஆட்டுக் குட்டி போலே'

தம்பியை ஆட்டுக்குட்டி போலே என்று கவிஞர் உருவகித்திருப்பது தான் இப்பாடலில் முக்கியமானது. துள்ளினால் ஆனந்தம் தானே!

கிளியைப் பற்றி தமிழ் ஒளியின் இந்தப் பாடலும் ஆனந்தம் தரும் ரகம்.

"அக்கா! அக்கா! கிளிப் பிள்ளை
அது நம் வீட்டு மாப்பிள்ளை!
சொல்லிக் கொடுத்தால் தமிழ் பேசும்
தொல்லை கொடுத்தால் நம்மை ஏசும்!"

என்று பாடுகிறார். இது ஒரு ஆனந்தப் பாட்டு.

கவிஞர் தமிழ் ஒளி 'நாயும் பூனையும்' என்று ஒரே ஒரு கதைப்பாடலை எழுதியிருக்கிறார்.

கவிஞர் அழ.வள்ளியப்பா 'சிறுவர் கதைப்பாடல்கள்' என்று 60 கவிஞர்களின் தொகுப்பை உருவாக்கும் போது தமிழ்ஒளிக்கும் இடம் தந்து சிறப்பு செய்திருக்கிறார்.

**கதைப் பாடலின் கதை இதுதான்:**

ஒரு குடியானவன் வீட்டில் ஒரு நாயும் பூனையும் வளர்கின்றன.

நாய் வீட்டைக் காவல் காக்கும். பூனை இரவில் எலிகளை வேட்டையாடும். பகலில் நன்றாகத் தூங்கும். தூங்கும் பூனையைப் பார்த்து நாய்க்கு பொறாமை வந்தது. சோம்பேறி என்று திட்டியது. பூனையை அடித்து விரட்டியும் விட்டது.

பூனை இல்லாமல் எலித் தொல்லை அதிகமானது. எலிகள் குடியானவனின் துணிகளைக் கடித்து வைத்து விட்டன. அதைப் பார்த்த குடியானவனுக்குக் கோபம் நாய் மேல் வந்தது.

எலியை ஏன் துரத்தவில்லை என்று சொல்லி நாயை அடித்தான்.

பூனையை விரட்டி விட்டது தவறு என்று நாய் உணர்ந்தது. பூனையை சமதானப் படுத்தி அழைத்தது.

'நண்பனே! அவரவர் வேலை அவரவர்க்கு எளிது' என்றது பூனை.

'உணர்ந்தேன். இனி நாம் நண்பர்களாக வாழ்வோம்' என்றது நாய்.

'பூனையும் நாயும்' என்ற கதைப்பாடலை குட்டிக் கதையாகவும் தமிழ் ஒளி எழுதியிருக்கிறார்.

தமிழ்க் குழந்தைகளுக்கு 65 ஆண்டுகளுக்கு முன்பே சுவையான குட்டிக் கதைகளையும் அருமையான பாடல்களையும் தமிழ் ஒளி தந்திருக்கிறார்.


கவிஞர் தமிழ் ஒளியின் படைப்புகளில் தமிழ் ஒளி வீசுகிறது. அது மங்காத ஒளியாய் நிலைத்திருக்கிறது. தமிழ்க் குழந்தைகளுக்கு என்றென்றும் வழிகாட்டும்; மகிழ்வூட்டும்.

**வாழ்க தமிழ் ஒளியின் புகழ்! அவரது நூற்றாண்டில் அவருடைய படைப்புகளைப் படிப்போம், பயன் பெறுவோம்!**

●

கட்டுரையாளர், சிறார் எழுத்தாளர்.

## புதிய நூல் வரவு



## நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் நாகர்கோவில் கிளையின் சார்பாக நடைபெற்ற நிகழ்ச்சிகள்



கேரளப் பல்கலைக்கழகத்தின் ஆய்வாளர்கள் - 2023 திருவிழாவில் புத்தகக் கண்காட்சி அரங்கில் கேரளப் பல்கலைக்கழகம், கேரளக் கல்லூரி தமிழ்த்துறை, கேரளத் தமிழ்ச் சங்கம் மற்றும் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனம் இணைந்து நடத்திய புத்தக வெளியீட்டு விழா 22.06.23 அன்று நடைபெற்றது.

கேரளப் பல்கலைக்கழகத்தின் இந்திய மொழிகள் பள்ளியின் இயக்குநர் முனைவர் ஜெயசந்திரன் அவர்களின் தலைமையில் கேரளப் பல்கலைக்கழக ஆய்வியல் துறைத் தலைவர் முனைவர் சி.அர். பிரசாத் அவர்களின் முன்னிலையில் நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின் புதிய வெளியீடாகிய கன்யூட்ராஜ் அவர்களின் குந்தியின் கதை எனும் நூலை கேரள பல்கலைக்கழத்தின் தமிழ்த் துறைத் தலைவர் முனைவர் ஜெயகிருஷ்ணன் அவர்கள் வெளியிட திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கத்தின் தலைவர் மு.முத்துராமன் அவர்கள் பெற்றுக்கொண்டார்.

பேராசிரியர் அ.கா பெருமாள் அவர்களின் கேரளத்தில் கண்ணகி வழிபாடும் கொடுங்கல்லூர் கோவிலும் எனும் நூலை மொழிபெயர்ப்பாளர் ஜீன் சார்த்தர் அறிமுகம் செய்து பேசினார்.

பல்கலைக்கழகக் கல்லூரியின் தமிழ்த்துறை இணைப் பேராசிரியர் முனைவர் ச. பொ. சீனிவாசன் கேரளப் பல்கலைக்கழகத்தின் மலையாளத் துறைத் தலைவர் முனைவர் சீமா ஜெரோம் தமிழ்த்துறையின் பேராசிரியர் முனைவர் அ.ஹெப்ஸி ரோஸ் மேரி,

திருவனந்தபுரம் தமிழ்ச் சங்கத்தின் பொதுச்செயலாளர் திரு. வீராணம் முருகன், மற்றும் பல்கலைக்கழக பேராசிரியர்கள், தமிழ்த்துறை ஆய்வு மாணவர்கள், நாகர்கோவில் கிளை மேலாளர் இரா.மு.தனசேகரன் ஆகியோர் கலந்து கொண்டனர்.

கட்டுரை



# கிழக்கில் ‘மூலதனம்’ மார்க்ஸ் பற்றி சில சிந்தனைகள்

மா.சிவகுமார்

மார்க்சியத்தின் மூலவர் கார்ல் மார்க்சின் முதன்மை படைப்பான மூலதனம் 1867-ம் ஆண்டில் வெளியிடப்பட்டது. "இங்கிலாந்தை முதலாளித்துவப் பொருளுற்பத்தி முறையின் தூய எடுத்துக்காட்டுக்குரிய நிலைக்களனாகக்" கொண்டு ஜெர்மன் மொழியில் எழுதப்பட்ட அந்த நூல் "அரசியல் பொருளாதார விமர்சனப் பகுப்பாய்வு" என்ற துணைத்தலைப்பைக் கொண்டுள்ளது. முதலாளித்துவத்தின் மீதான மார்க்சின் விமர்சனம், 1917-ம் ஆண்டில் ரஷ்யாவில் முதலாளித்துவத்தைத் தூக்கி எறிந்து கம்யூனிஸ்ட் கட்சியின் ஆட்சி நிறுவப்பட்டதன் மூலம் வெற்றி கண்டது. அதன் பிறகு, சீனாவிலும் வியட்நாமிலும் பிற நாடுகளிலும் காலனிய ஆதிக்கத்தையும் உள்ளூர் பிற்போக்கையும் ஆயுதம் தாங்கி முறியடித்து கம்யூனிஸ்ட் கட்சிகள் அதிகாரத்தைக் கைப்பற்றின. கூடுதலாக, இந்தியாவில் மட்டுமின்றி இந்தோனேஷியா, மலேசியா, தாய்லாந்து, மியான்மர் ஆகிய தென்கிழக்காசிய நாடுகளிலும் வலுவான கம்யூனிஸ்ட் கட்சிகள் தோன்றி காலனிய ஆதிக்கத்தில் இருந்து விடுதலை பெறுவதற்கான போராட்டங்களில் பங்களிப்பு செய்தன.

இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் ரஷ்யாவிலும் பிற சோவியத் குடியரசுகளிலும் கம்யூனிஸ்ட் கட்சி ஆட்சி தூக்கி எறியப்பட்டது. சீனாவும் வியட்நாமும் கூட மேற்கத்திய நவ-தாராளவாத முதலாளித்துவ உலகத்தில் இணைந்தன. மற்ற நாடுகளில் கம்யூனிஸ்ட் கட்சிகள் பலவீனமடைந்துள்ளன அல்லது இல்லாமலே போயிருக்கின்றன. 1990-களில் நவ-தாராளவாதத்தின் எழுச்சிக்குப் பிறகு மூலதனம் நூலின் மீதான கவனம் பின்னுக்குப் போயிருந்தாலும், 2008 முதல் உலக முதலாளித்துவத்தின் தாயகமான மேற்குலகில் வெடித்த அரசியல் பொருளாதார நெருக்கடி மூலதனம் நூலை மீண்டும் தேடிப் படிக்கப்படுவதாக ஆக்கியுள்ளது.

இந்நிலையில்தான் கிழக்குலகில் மூலதனம் - மார்க்ஸ் பற்றி சில சிந்தனைகள் (Capital in the East - Reflections on Marx) என்ற ஆங்கில நூல், 2019-ம் ஆண்டு அசின் சக்ரபோர்த்தி, அஞ்ஜன் சக்ரபோர்த்தி, பைசாதேப் தாஸ்குப்தா, சமிதா சென் ஆகியோரை தொகுப்பாசிரியர்களாகக் கொண்டு வெளியாகியுள்ளது. இந்நூலில், தொகுப்பாசிரியர்களின் அறிமுகத்தோடு கூடவே, நான்கு பிரிவுகளாக 13 கட்டுரைகள் உள்ளன.

முதல் பிரிவில் உள்ள கட்டுரைகள் மூலதனம் நூலும் பொதுவாக மார்க்சியமும் ஆசிய மொழிகளில் பெயர்க்கப்பட்டது பற்றியும், மேற்குலகில் எழுதப்பட்ட இந்த நூலை ஆசிய நாடுகளின் கலாச்சாரத்துக்கு ஏற்றபடி மாற்றுவதில் ஏற்பட்ட சிரமங்கள் பற்றியும் பேசுகின்றன. சீனாவில் மார்க்சியம் சீனமயமாக்கப்பட்டது (sinification) பற்றியும், வங்காள மொழியில் மூலதனம் நூலும் பிற மார்க்சிய படைப்புகளும் பெயர்க்கப்பட்டது பற்றியும், தென்கிழக்கு ஆசிய நாடுகள் பற்றியும், ஜப்பானின் உற்பத்தி முறை சொற்போர் பற்றியும் கட்டுரைகள் வெளியாகியுள்ளன.

இவற்றின் ஊடாக சீன மொழியிலும் (1938), இந்திய மொழிகளிலும் (இந்தி - 1965-1983, மலையாளம் - 1968, மராத்தி - 1970-1980, பஞ்சாபி - 1975, பெங்காலி - 1974-1988), தென்கிழக்காசிய நாடுகளிலும் (பாஷா இந்தோனேஷியா - 2004, தாய் - 1999) மூலதனம் நூலின் மொழிபெயர்ப்புகள் வெளியான விபரங்கள் நமக்குத் தெரிய வருகின்றன. இந்தக் கட்டுரைகளில் குறிப்பிடப்படாத சில பிற இந்திய மொழிகளிலும் (தெலுங்கு - 1996, தமிழ் - 1998, ஒடியா - 2010, கன்னடம் - 2018), வியட்நாமிய மொழியிலும் (1959) மூலதனம் நூல் மொழிபெயர்க்கப்பட்டுள்ளது. கம்யூனிஸ்ட் கட்சிகள் மிகவும் வலுவாக இருந்த மலேசியாவிலும் (மலேயா மொழி), மியான்மரிலும் (பர்மிய மொழி) மூலதனம் நூல் இன்று வரை மொழிபெயர்க்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

"கிழக்குலகில் மூலதனம் பெற்ற வரவேற்பு" என்ற முதல் கட்டுரை சீனா பற்றியது. மார்க்சியத்தை சீன மொழிக்கு மாற்றும் முயற்சியில் சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் அப்போதைய தலைவர் சியோ சியுபாய், பாரம்பரிய சீன எழுத்துமொழி அரசியல் தேவைகளுக்கு பொருத்தமாக இல்லை என்று கருதி, பல்வேறு வட்டார பேச்சு வழக்குகளில் இருந்து "பொதுமொழி" (புதொங்ஹுவா) ஒன்றை உருவாக்க முயற்சித்துள்ளார் என்ற தகவலும், அவருக்குப் பின் கட்சித் தலைமைப் பொறுப்பில் இருந்த மாவோ மார்க்சியத்தை சீன மக்களுக்கான மொழியில் பெயர்த்தது பற்றிய விபரங்களும் கிடைக்கின்றன.

"வங்காளத்தில் மூலதனம்: மார்க்சின் பின்-காலனிய பெயர்ப்பு" என்ற கட்டுரை வங்காள மொழியில் மார்க்சியப் படைப்புகளை மாற்றுவதில் ஏற்பட்ட கலாச்சார சிக்கல்களைப் பற்றி பேசுகிறது. உதாரணமாக, வங்காள மொழியில் கூலி உழைப்பும் மூலதனமும் என்ற மார்க்சின் நூலை மொழிபெயர்த்த சுபாஷ் முகோபாத்யாயா அதற்கு "பூத்தர் பேகார்" என்று தலைப்பு கொடுத்துள்ளார். "பூத்தர் பேகார்" என்பது வங்காள மொழியில் "பலன் இல்லா உழைப்பு" என்பதைக் குறிக்கிறது.

ஆனால், வங்காளத்தைச் சேர்ந்த பல கம்யூனிஸ்ட் கட்சித் தலைவர்களும், கட்சி செய்தித் தாளின் ஆசிரியர் குழுவும் முகோபாத்யாயா பயன்படுத்திய கவித்துவ உரிமைகளைக் கண்டு கடுமையாக அதிருப்தியடைந்தனர். அவர்கள் புரிந்து கொண்ட வகையில் மார்க்சியத்தின் சொல்லாடலை உள்ளூர் பழமொழிகளையும், சொலவடைகளையும் பயன்படுத்தி களங்கப்படுத்தக் கூடாது, அது அபபிரயோக் (தவறான பயன்பாடு) அல்லது வாக்தாரா என்று அவர்கள் கண்டித்தனர். அவர்களைப் பொறுத்தவரை, மார்க்சியத்தை கறாரான அறிவியல்ரீதியான சொல்லாடலாக மட்டுமே கையாள வேண்டுமே தவிர, பிசாசு பூதம் போன்ற மூடநம்பிக்கைகள் அதற்குள் புகுத்தக் கூடாது.

மூலதனம் நூலின் மூன்று பாகங்களையும் வங்காள மொழியில் பெயர்த்த பியூஷ் தாஸ்குப்தா கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்டு விட்டார். அதன் காரணமாகவோ என்னவோ, அவர் மொழிபெயர்த்த மூலதனம் நூலும் வங்காளத்தில் கம்யூனிஸ்ட் கட்சியின் ஆதரவைப் பெறவில்லை என்று வருந்துகிறார், கட்டுரை ஆசிரியர்.


மூலதனம் நூலை பஞ்சாபி மொழியில் மொழிபெயர்த்தவர்களில் ஒருவரான குர்பச்சன் புல்லார், கூட்டாக செய்த இந்த மொழிபெயர்ப்பில் பொருளியல் சொற்களும் எழுத்து நடையும் நூல் முழுவதும் ஒரே மாதிரி இல்லை என்பதை எண்ணி வருந்துகிறார். "நூலின் பெயர் கூட சரியானதா என்று இன்றைக்கும் எங்களுக்கு சந்தேகம் இருக்கிறது. 'சர்மயா' என்பதை விட 'பூஞ்சி' என்பது பொருத்தமானதோ என்று தோன்றுகிறது" என்கிறார் அவர்.

இந்த நூலின் அடுத்த மூன்று பிரிவுகள் மூலதனம் நூலில் மார்க்ஸ் உருவாக்கி விளக்கிய கருத்தினங்களை இன்றைய உலகுக்கு பொருத்துவது தொடர்பான கட்டுரைகளைக் கொண்டுள்ளன.

"மதிப்பு, சரக்கு, மூலதனத்தின் வடிவங்கள்" என்ற இரண்டாவது பிரிவில், சரக்குகளின் பரிவர்த்தனை பற்றிய பகுப்பாய்வில் நவ-செவ்வியல் பொருளியல் பின்பற்றும் அகநிலை சார்ந்த சாரமான பயனீடு (abstract utility) என்ற அணுகுமுறையையும், மார்க்ஸ் பின்பற்றும் சமூகரீதியான சாரமான உழைப்பு (abstract labour) என்ற அணுகுமுறையையும் வேறுபடுத்திக் காட்டும் கட்டுரை இடம் பெற்றுள்ளது.

மார்க்ஸ் குறிப்பிடும் பயன்-மதிப்பு என்பது நவ-செவ்வியல் பொருளியல் குறிப்பிடும் பயனீடு என்பதிலிருந்து வேறுபட்டது. மார்க்சின் பயன்-மதிப்பு திட்டவட்டமான பண்புரீதியில் வேறுபட்ட பயன்-மதிப்புகளைக் குறிக்கிறது. பயனீடு என்பது சாரமான பொதுவான பயனீட்டைக் குறிக்கிறது. சாரமான உழைப்பு என்ற சாரமாக்கலை பயன்படுத்த முடியும் என்றால் சாரமான பயனீடு என்ற சாரமாக்கலையும் பயன்படுத்தலாம். ஆனால், இரண்டில் ஒன்றைத் தேர்ந்தெடுக்க வேண்டியுள்ளது, அதில் கலாச்சார-அரசியல் அர்த்தங்கள் பொதிந்துள்ளன. தேர்ந்தெடுக்க வேண்டியது பருப்பொருளை அல்லது கூருணர்வை. அதாவது, சமூகமயமான அகநிலையை அல்லது சமூகமற்ற தனிநபர் அகநிலையை தேர்ந்தெடுக்க வேண்டியுள்ளது. மார்க்சின் அரசியல் நோக்கம் சுரண்டலின் ஆதாரத்தை வெளிப்படுத்துவது, சுரண்டலுக்கு எதிரான செயல்பாட்டை ஊக்குவிப்பது. சுரண்டல் என்பதை தொழிலாளி வர்க்கத்தின் உபரி-உழைப்பை கையகப்படுத்துவது என்று அவர் வரையறுத்தார்.

நவ-செவ்வியலின் சாரமான பயனீடு (பயனீடு சார்பு என்ற சூத்திரத்தின் மூலம் தெரிவிக்கப்படுகிறது), தனியாகவும் தனிநபர் அளவிலும் மதிப்பிடப்படுகின்றது. எனவே, அதனை இன்னொருவரின் மதிப்பீட்டோடு ஒப்பிட முடியாது.




எனவே, மார்க்சின் பரிவர்த்தனையில் சமூகரீதியான உறவுகளுக்கு இடையேயான பதற்றமும் இழுபறியும் நிச்சயமின்மைகளும் இருக்கின்றன. நவ-செவ்வியல் அணுகுமுறையில் ஒவ்வொரு தனிப்பட்ட பொருண்மையும் தனக்குள்ளாகவே மூடுண்டுள்ளது. அது இதே போல மூடப்பட்ட பிற பொருண்மைகளை பாதிப்பதில்லை. எனவே, அதில் நெருக்கடிகளுக்கான சாத்தியங்கள் இல்லை.

இந்தப் பிரிவில் உள்ள அடுத்த இரண்டு கட்டுரைகள் உலகளாவிய உற்பத்தி வலைப்பின்னலிலும், நிதி மூலதனத்திலும் மார்க்சின் மதிப்புக் கோட்பாட்டின் செயல்பாட்டைப் பற்றி விளக்குகின்றன. உற்பத்தி வலைப்பின்னல்களில் பங்கேற்கும் வளரும் நாடுகளில் பெரும்பாலானவை தமது பொருளாதார நிலையை மேம்படுத்திக் கொள்ள முடியவில்லை என்ற முடிவுக்கு வருகிறது, உற்பத்தி வலைப்பின்னல்கள் பற்றிய கட்டுரை. நிதிமூலதனம் உபரி-உழைப்பிலிருந்து துண்டிக்கப்பட்டுள்ளதா என்ற கேள்வியை எழுப்பி அதற்கான விடையை வழங்க முயற்சிக்கிறது, நிதி மூலதனம் பற்றிய கட்டுரை.

மூன்றாவது பிரிவில், மக்கள்தொகையும் நிலவாரமும் மூலதனம் நூலில் கையாளப்படுவது பற்றிய மூன்று கட்டுரைகள் உள்ளன. மூலதனம்

நூலில் மக்கள்தொகை பற்றிய ஒரு கோட்பாடு உள்ளதா, என்ற கட்டுரையில் ரணபீர் சமாத்தர் மால்தஸின் மக்கள் தொகைக் கோட்பாட்டையும் மார்க்ஸ் உருவாக்கிய முதலாளித்துவ சமூகத்துக்கான மக்கள் தொகைக் கோட்பாட்டையும் ஒப்பிடுகிறார். மால்தஸின் பொதுவான மக்கள்தொகை என்ப-திலிருந்து வேறுபட்டு உழைப்பாளர்கள் எத்தகைய சூழல்களில் உழைக்கின்றனர், எத்தகைய நிலைமைகளில் மறுவுற்பத்தி செய்யப்படுகின்றனர், எத்தகைய நிலைமைகளில் வாழ்கின்றனர் என்று மார்க்ஸ் கோட்பாட்டாக்கம் செய்தார்.

மால்தசுக்கு எதிரான மார்க்சின் வாதங்களும், முதலாளித்துவத்தின் கீழ் மக்கள்தொகைக்கான விதி தொடர்பான அவரது சொந்த பகுப்பாய்வும் (உழைப்பாளர் சேமப்பட்டாளம் அல்லது ஒப்பீட்டு உபரி மக்கள்தொகை என்ற வடிவில்) "முதலாளித்துவத் திரட்டலின் பொது விதி" பற்றிய பகுப்பாய்வின் பகுதியாக இடம் பெறுகின்றன (மூலதனம் முதல் பாகம், பகுதி 7, அத்தியாயம் 25, பிரிவுகள் 3-4). ஆதித் திரட்டல் பற்றிய பகுப்பாய்வுக்கு (பகுதி 8) முன்பே இவை இடம் பெறுகின்றன. ஆதித் திரட்டல் என்ற வரலாற்றுப் போக்கு உலக அளவில் அல்லது ஒரு குறிப்பிட்ட நாட்டில் மக்கள்தொகை உபரியாக ஆகும் பின்புலத்தை நமக்குத் தொடர்ந்து நினைவூட்டிக் கொண்டிருக்கிறது.

இந்தப் பிரிவில் அடுத்த கட்டுரை "ஆதித் திரட்டலும் உபரி மக்கள்தொகையும்: மார்க்சியக் கோட்பாட்டின் மூலதனமையவாதம் மீதான ஒரு விமர்சன பகுப்பாய்வு". இதை எழுதியவர் ராஜேஷ் பட்டசார்யா.

ஆதித் திரட்டல் என்பது மூலதனத்தின் தோற்ற காலத்துடன் மட்டும் வரம்பிடப்பட்டதில்லை. முதலாளித்துவ உற்பத்தி இருப்பதற்கான நிலைமைகள் எப்போதெல்லாம் பலவீனமடைய ஆரம்பிக்கின்றனவோ அப்போதெல்லாம் அது செயல்பாட்டுக்கு வருகிறது. இதை இன்னும் நீட்டிச் சொன்னால், ஆதித் திரட்டல் என்பது முதலாளித்துவ உற்பத்தியை கட்டுவிப்பதாக உள்ளது என்கிறார், ஆசிரியர்.

முதலாளித்துவ சமூகப் படிவம் என்பது பல வேறுபட்ட வர்க்கக் கட்டமைப்புகளைக் கொண்டது. அவற்றில் முதலாளித்துவ வர்க்கக் கட்டமைப்புகளும் உண்டு முதலாளித்துவம் அல்லாத கட்டமைப்புகளும் உண்டு. அவை ஒவ்வொன்றும் தன் இருத்தலுக்கான நிபந்தனைகளைக் கொண்டுள்ளது. ஆனால், இதில் முதலாளித்துவ வர்க்கக் கட்டமைப்பு ஆதிக்கம் செலுத்துகிறது. முதலாளித்துவ சமூகப் படிவம் ஒரு முரண்படும் தொகுப்பாக உள்ளது, ஒவ்வொரு வர்க்கக் கட்டமைப்பும் முரண்படும் திசைகளில் "தள்ளல்களையும் இழுபறிகளையும்" கொண்டுள்ளது என்று முன்வைக்கிறார், ஆசிரியர்.

இமான் மித்ரா எழுதிய "மார்க்சின் வாடகை பற்றிய கோட்பாடு: ஒரு 'ஊகரீதியான' வாசிப்பு" என்பது நிலவாடகையை உழைப்பு மதிப்புக் கோட்பாட்டுடனும் ஆதித் திரட்டலுடனும் இணைக்கிறது. நிலம் என்பது மதிப்பு இல்லாத சரக்கு, அதாவது உழைப்பால் உருவாக்கப்படாத சரக்கு என்ற நிலைமை மீது இந்தக் கட்டுரை கவனம் செலுத்துகிறது.

இந்த நூலின் நான்காவது பிரிவு "மூலதனத்தின் எல்லைகளும் மாற்றி அமைக்கப்படுவதை மீள்பரிசீலிப்பதும்" என்பதில் 3 அத்தியாயங்கள் உள்ளன.

முதல் அத்தியாயம், சமிதா சென் எழுதிய "மறுவுற்பத்தி என்ற பிரச்சினையில் கூலி வேலைக்கும் கூலி அளிக்கப்படாத குடும்ப வேலைக்கும் இடையேயான உறவு"

மார்க்ஸ் உழைப்புச் சக்தியின் மறுவுற்பத்தி பற்றி மிகவும் மேலோட்டமாகவே எழுதியுள்ளார்; ரோசா லக்சம்பர்க் மூலதனத் திரட்டல்/ மறுவுற்பத்தி என்ற காரணியைப் பற்றி விளக்கியுள்ளார். ஆனால், பௌதீக மற்றும் தலைமுறை மறுவுற்பத்தி பற்றிய கேள்விகள் ஃபிரெடெரிக் எங்கெல்சின் படைப்புகளில் மையமான பிரச்சினையாக உள்ளன என்கிறது இந்தக் கட்டுரை.

"அகிம்சா சோசலிசம்: மார்க்சுக்கும் காந்திக்கும் இடையேயான உரையாடல்" என்ற இந்தப் பிரிவின் இரண்டாவது அத்தியாயத்தில், காந்திய சோசலிசம் எனப்படுவதன் "தர்மகர்த்தா" என்ற கருத்தினம் பரிசீலிக்கப்படுகிறது. காந்தியின் எழுத்துக்களில் இருந்து விரிவான மேற்கோள்களைக் காட்டும் ஆசிரியர்கள், சோசலிசம் பற்றிய அந்தப் பார்வையில் உள்ள உள்முரண்களை வெளிப்படுத்துகிறார்கள்.

காந்தி இப்போது இருக்கும் சொத்துடைமை உறவுகளையும் சமூக படிநிலை உறவுகளையும் அப்படியே அங்கீகரித்து, இதிலிருந்து எப்படி முன்னே போவது என்று பார்க்கிறார். அவரது கருத்துப்படி, தொழிலாளர்கள் உழைக்க வேண்டும், முதலாளிகள் உழைப்பின் பலனை கைப்பற்ற வேண்டும், ஆனால் அப்படி கைப்பற்றிய முதலாளிகள் இப்போது இருப்பது போலில்லாமல் அதனை பொது சமூகத்தின் நன்மைக்காக தருமகர்த்தா போல பாதுகாக்க வேண்டும். அப்படியானால், தொழிலாளர்கள் ஏன்

தருமகர்த்தா ஆகக் கூடாதா? அதைத் தடுப்பது எது? உழைப்பின் பலன்கள் முதலாளிகளின் கைகளில் ஏன் குவிகின்றன? முதலாளிகள் தர்மகர்த்தா போல செயல்பட மறுத்தால் தொழிலாளர்கள் வேலை நிறுத்தம் செய்து அவர்களை பணிய வைக்க வேண்டும் என்றால், தினசரி செயல்பாட்டிலேயே தொழிலாளர்கள் அதைச் செய்வதை ஏன் தடுக்க வேண்டும்? முதலாளிகளின் திறனும் சமூகத்துக்குத் தேவை என்றால் அதை அவர்கள் தாமே முன்வந்து தரும்படி எப்படி சம்மதிக்க வைப்பது? இதற்கெல்லாம் காந்தியிடம் விடை இல்லை.

காந்தி உழைப்பாளர்களை உழைப்பின் பலன்களில் இருந்து கட்டாயமாக துண்டிக்கிறார். கம்யூனிச வினியோக நிலைமையின் அடிப்படையில் வினியோகிக்கும் 'உரிமையை' முதலாளிகளுக்கு வழங்குகிறார். உடைமை-இன்மையை பயன்படுத்தி, முதலாவதாக வேலைக்கான அடிப்படையாக வெகுமதிகள் என்ற கொள்கையை மறுப்பதன் மூலம் அதனைச் செய்கிறார். அதற்கு மாறாக, வேலை என்பது தொழிலாளர்களின் சுய-நலமற்ற தியாகமாக (அவர் உணவுக்கான தனது உழைப்பு படைத்த கூடுதல் செல்வத்தின் மீதான தனது உரிமையை விட்டுக் கொடுக்கிறார்) பார்க்கப்படுகிறது. இரண்டாவதாக, உபரியை ஒட்டுமொத்த சமூகத்துக்கும் வினியோகிப்பதை உறுதி செய்யும் தருமகர்த்தாமுறையை மையப்படுத்துவதன் மூலம் (முதலாளிகள் தாம் கையகப்படுத்திய கூடுதல் செல்வத்தின் மீதான தமது உரிமையை விட்டுக் கொடுக்கின்றனர்) காந்தி அதனைச் செய்கிறார்.

உடைமையின்மை என்பது ஒரு சர்வப்பொது கொள்கையாக பார்க்கப்பட்டால், உபரியை வைத்திருப்பது ஏன் முதலாளிகளின் கைகளில் விடப்பட வேண்டும் என்பது தெளிவில்லை. முதலாளிகள் மட்டுமே தருமகர்த்தா பதவிக்கு தகுதி படைத்தவர்களாக ஏன் உள்ளனர்? தொழிலாளர்கள் ஏன் இருக்கக் கூடாது? தொழிலாளர்களையும் சேர்த்துக் கொண்ட ஒரு பெரிய குழுவாக ஏன் இருக்கக் கூடாது? முதலாளிகளுக்கு வித்தியாசமான / மேம்பட்ட திறன்கள் இருப்பதால், அவர்கள் நிறுவனத்தின் நிர்வாகியாக இருப்பதற்கும் அதன் அடிப்படையில் கூடுதல் வருமானத்தை நிர்வகிப்பவராக இருப்பதற்கும் தனி உரிமையைப் பெற்றுள்ளனர் என்று அவர்களுக்கு சாதகமான தர்மகர்த்தா-அடிப்படையிலான எந்த ஒரு வாதமும் அரசியல்-பொருளாதார சமத்துவம் ('யாரும் தாழ்ந்தவர் இல்லை, யாரும் உயர்ந்தவர் இல்லை') என்ற காந்திய சட்டகத்தில் செல்லுபடியாகாது.

முதலாளிகள் 'உடைமையின்மையை' பின்பற்ற வேண்டும் என்ற முக்கியமான அனுமானம் தவறுவதால் ஏற்படும் விளைவுகளை தொழிலாளர்கள் சுமக்கின்றனர், முதலாளிகளே சுமக்கவில்லை. எனவே, பொறுப்புகளிலும் கடமைகளிலும் தவறுவது ஒரே துலாக்கோலில் எடை போடப்படுவதில்லை என்கிறார்கள் ஆசிரியர்கள்.

தருமகர்த்தாவாக இருப்பதற்குப் பதிலாக, இதுவரையில் முதலாளிகளாக இருந்தவர்களை (தொழிலாளர்களுடன் கூடவே) 'உணவுக்கான உழைப்பில்' ஈடுபடும்படி கேட்கலாம். உபரியை கூட்டாக கையகப்படுத்தி வினியோகிக்கும் நிகழ்முறையின் பகுதியாக அவர்கள் ஆக்கப்படலாம். முதலாளிகளையும் ஜமீன்தார்களையும் உணவுக்கான உழைப்பை செலுத்தும்படி கோராமல், தருமகர்த்தாவாக ஆக்குவது ஏன் என்பதை விளக்க காந்தி தவறுகிறார் என்பது தங்கள் கருத்து என்கிறார்கள், ஆசிரியர்கள். நாங்கள் முன்மொழியும் நிறுவன கட்டமைப்போ, 'உணவுக்கான உழைப்பு' என்ற புனிதக் கொள்கையை நிறைவேற்றுவதோடு சுரண்டலையும் ஒழித்துக் கட்டுகிறது என்கிறார்கள்.

இந்தப் பிரிவின் மூன்றாம் அத்தியாயத்தில் கூட்டுறவு வடிவங்கள் பற்றி பேசப்படுகிறது. ஸ்பெயினின் பாஸ்க் பிராந்தியத்தில் 1959-ல் தொடங்கப்பட்ட ஒரு கூட்டுறவு நிறுவனம் பல்கிப் பெருகி வலுவாக இயங்கி வருவது பற்றி அமெரிக்க மார்க்சிய அறிஞரான ரிச்சர்ட் வுல்ஃப் 2012-ல் எழுதிய கட்டுரை இங்கிலாந்தின் த கார்டியன் இதழில் வெளியாகியுள்ளதைச் சுட்டிக் காட்டும் ஆசிரியர், இந்தியாவில் கைத்தறி, தேயிலை தோட்டங்கள், சர்க்கரை ஆலைகள் ஆகியவற்றில் கூட்டுறவு முறை செயல்படுவதை ஆய்வு செய்து அவை ஒவ்வொன்றிலும் உள்ள பிரச்சினைகளை வெளிப்படுத்துகிறார்.

கிழக்கில் 'மூலதனம்' - மார்க்ஸ் பற்றி சில சிந்தனைகள் என்ற இந்த தொகுப்பு நூல், மார்க்சின் மூலதனம் நூலை இன்றைய உலகத்தின் நடைமுறையோடு இணைப்பதற்கு முக்கியமான ஒரு பங்களிப்பை செய்கிறது. மார்க்சிய மாணவர்களும், அரசியல் செயல்பாட்டாளர்களும் தமது நடைமுறையை மேம்படுத்திக் கொள்வதற்கு இந்நூலை வாசித்து விவாதித்து உள்வாங்குவது பயனுள்ளதாக இருக்கும்.

●

கட்டுரையாளர், மார்க்சிய மாணவர்,
அரசியல் செயல்பாட்டாளர்



# இந்திய கம்யூனிஸ்டுகள் பரிசீலிக்க வேண்டிய அகநிலை காரணங்கள்

## - கோபாட் காந்தி

ச.நிதீஷ் குமார்

*செப்டம்பர் 30, 2022 அன்று இந்திய கம்யூனிஸ்ட் கட்சியால் விஷயவாடாவில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கருத்தரங்கத்தில் வாசிக்கப்பட்ட கட்டுரையின் விரிவாக்கப்பட்ட எழுத்து வடிவம்.*

"தொழிலாளி வர்க்கமோ விவசாயி வர்க்கமோ அல்லது இளைஞர்களோ யாராக இருந்தாலும் வெகுமக்கள் மீது, குறிப்பாக மாற்றுக்களை தேடிக் கொண்டிருப்பவர்கள் மீது, செல்வாக்கு செலுத்தக்கூடிய புதிய உத்திகளை கம்யூனிஸ்டுகள் கண்டறிந்தாக வேண்டும்" என்ற நோக்கத்தின் அடிப்படையில் கோபாட் காந்தி எழுதிய நூல்தான் **'அனைத்துலக அளவிலும் இந்திய அளவிலும் இடதுசாரிகள் முன் இருக்கும் சவால்கள்'** என்ற இப்புத்தகம்.

உலகம் முழுவதும், கொரோனா பெருந்தொற்று, பொருளாதார பெருமந்தம், வேலையிழப்பு போன்ற பல்வேறு நெருக்கடிகளால் பெரும்பாலான உழைக்கும் மக்கள் துன்பப்பட்டுக் கொண்டிருக்கின்றனர். இத்தகைய நெருக்கடி காலகட்டங்களை பயன்படுத்தி முதலாளித்துவம் தன்னை மறுகட்டமைத்துக் கொள்ளும் பணியில் ஈடுபட்டுக் கொண்டிருக்கிறது என்பதை பல்வேறு ஆதார தகவல்களுடன் இந்நூலில் கோபாட் காந்தி விவரிக்கிறார்.

உலகம் முழுவதும் உள்ள 2000-க்கும் மேற்பட்ட பெரும் பணக்காரர்கள்தான் இவ்வுலகை ஆள்கிறார்கள் என்பது எந்த அளவிற்கு உண்மையோ, அதே அளவுக்கு அவர்களையே ஆட்டிப் படைக்கும் மிகப்பெரிய முதலாளித்துவ அமைப்புகள் தோன்றியுள்ளன. இத்தகைய மிக பிரம்மாண்டமான கட்டமைப்புகள் 2008-ம் ஆண்டில் உலகம் முழுவதும் ஏற்பட்ட பொருளாதார நெருக்கடிக்குப் பிறகு உருவானவை. ரகசிய ஆதிக்கக் குழு எனும் இக்கட்டமைப்பின் மையம், பெரும் சொத்து நிர்வாகக் குழுக்களில் முதலீடு செய்துள்ளவர்களை உள்ளடக்கிய ஒரு குழுவாகும். இந்தக் குழுக்கள்தான் உலகம் முழுவதையும் ஆக்டோபஸ் போன்ற பிடிப்பைக் கொண்டுள்ள அறக்கட்டளை நிறுவனங்கள், இதர அமைப்புகள் ஆகியவற்றைக் கொண்டு பெரும்பாலான ராட்சச கார்ப்பரேட் நிறுவனங்களை தம் கட்டுப்பாட்டில் வைத்துள்ளன. இந்தக் குழுக்கள்தான் மிக முக்கியமான பொருளாதார கொள்கை முடிவுகளை எடுக்கின்றன. இவற்றின் கட்டுப்பாட்டின் கீழ்தான் பெரும்பான்மையான பில்லியனர்கள் இருக்கின்றனர்.

முதலாளித்துவ நெருக்கடி முன் எப்போதும் இல்லாத வகையில் தீவிரமடைந்து வரும் இந்நிலையில் உலக முதலாளித்துவ பொருளாதார அமைப்பு முழுவதையும் முன் எப்போதும் இல்லாத வகையில் மறு கட்டமைப்பு செய்வதற்காகத்தான் பொருளாதார மீட்பு பெருந்திட்டம் என்ற திட்டத்தை ரகசிய ஆதிக்கக் குழுவினர் செயல்படுத்த முனைகின்றனர். இந்தத் திட்டம் 2008-ம் ஆண்டுக்குப் பிறகு ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியின் போதே தொடங்கப்பட்டது. இத்திட்டம் அண்மையில் ஏற்பட்ட கொரோனா நெருக்கடிக்குப் பிறகு தீவிரமடைந்துள்ளது என்பதை பல்வேறு தகவல்களுடன் இந்நூலில் விவரிக்கிறார் கோபாட் காந்தி. இத்தகைய நெருக்கடியான காலகட்டத்தை உலக அளவிலும் இந்திய அளவிலும் எதிர்கொள்ள கம்யூனிஸ்டுகள் தயாராக உள்ளார்களா? என்றால் மிகவும் பலவீனமான நிலையிலேயே கம்யூனிஸ்ட்கள் இருப்பதாக கோபாட் காந்தி தெரிவிக்கிறார்.

1980-களின் நடுப்பகுதியிலிருந்து இருந்து வரும் நவதாராளவாத கொள்கைகள் அவற்றுடன் சேர்ந்து வந்த நுகர்வு கலாச்சாரம் ஆகியன தொழிலாளி வர்க்கம் சிதறுண்டு போன தன்மைக்கு காரணமாகின. அவை வெகுமக்களின் குறிப்பாக இளைஞர்களின் உணர்வில் ஆழமான பாதிப்புகளை ஏற்படுத்தின. நவ தாராளவாத பொருளாதார கொள்கைகள் தொழிற்சங்கங்களை தகர்த்தன. மூன்றாம் உலக நாடுகளில் உள்ள தொழிலாளர்களிடம் வேலைகளை ஒப்படைத்து அவர்களிடம் இருந்து உழைப்பை கறக்கும் முறை உருவானது. உழைப்பு ஒப்பந்த அடிப்படையில் ஆனதாக்கப்பட்டது. அவற்றின் காரணமாக உலகில் பெரும்பாலான பகுதிகளில் தொழிலாளி வர்க்கம் சிதறுண்டு போய்விட்டது. இவை அனைத்தும் உழைக்கும் மக்களிடையே வேலை செய்யும் கம்யூனிஸ்டுகளின் பின்னடைவுக்கான புறநிலைக் காரணங்கள். ஆனால் இவை மட்டுமே கம்யூனிஸ்டுகளின் பின்னடைவுக்குக் காரணங்கள் அல்ல, இதை விட முக்கியமாக (இந்திய) கம்யூனிஸ்டுகளின் அகநிலை காரணங்களே அவர்களின் பின்னடைவுக்கான முதன்மையான கரணங்கள் என்று கோபாட் காந்தி இந்நூலில் குற்றம் சாட்டுகிறார்.

இந்தியாவில் உள்ள எல்லா கம்யூனிஸ்ட் கட்சிகளும் அரசியல்ரீதியில் மெல்லமெல்ல முடிவை நோக்கிச் செல்லுமளவுக்குச் சரிந்து கொண்டிருக்கின்றன. அவற்றுக்கு ஏற்பட்டுள்ள ஆழமான தேக்கநிலையை எதிர்கொள்வதற்கு புதிய மற்றும் ஆக்கபூர்வமான விஷயங்கள் எதனையும் பரிசீலிக்க இயலாதவையாகி விட்டன. அவை இறுக்கமான நிலைப்பாடு/வறட்டுவாதம் வழக்கமாகச் செய்து வந்ததையே திரும்பத்திரும்பச் செய்தல் அல்லது உலகில் மாற்றம் ஏதும் நிகழாததுபோல செயல்படுகின்றன.


கம்யூனிஸ்ட் கட்சிகள் 'பூசாரி தினந்தோறும்' கோவிலுக்குச் சென்று மணி அடிப்பதுபோல' பழக்கப்பட்டுப்போன அன்றாட வேலைகளைச் செய்துகொண்டு ஒரே வட்டத்துக்குள் சுற்றிச்சுற்றி வருகின்றன. அவை செய்யும் வேலைகள் அவை வகுத்துக்கொண்ட இலக்குகளை நோக்கி அவற்றை முன்னெடுத்துச் செல்கின்றனவா என்பதைப் பார்க்காமல் விளையாட்டு மரக்குதிரையொன்றின் மீது அமர்ந்துகொண்டு பெடலை மேன்மேலும் அழுத்தினாலும், இறுதியில் பத்தாண்டுகளுக்கு முன் எந்த இடத்தில் இருந்தனவோ அதிலிருந்து ஓரடிகூட முன்னே செல்ல முடியாத அதே நிலையில்தான் இருக்கின்றன. மேலும் ஆக்கப்பூர்வமான சிந்தனைகள் என்று அவர்களால் உரிமை கொண்டாடப்படுவதும் சிறுகுழுவுக்கு மட்டுமே புரியக்கூடியதுமான கருத்துகளை மார்க்சியத்தின் பெயரால் மார்க்சியத்தின் சாரமான வர்க்கப் போராட்டம், சோசலிச மாற்றம் ஆகியவற்றைக் களைந்தெறிந்த கருத்துகளை உருவாக்கிக் கொண்டிருக்கின்றன.

கம்யூனிஸ்டுகள் ஆக்கப்பூர்வமானவர்களாகச் செயல்படுவது முடிந்துபோய் பழைய வார்ப்புக்குள்ளேயே இயங்கும் போக்கைக் கொண்டிருப்பதாகத் தோன்றுகிறது. நாடாளுமன்ற

இடதுசாரிகள் சட்ட/நாடாளுமன்றத்தில் அதிக இடங்களைப் பெற வேண்டும் என்ற இலக்கைக் கொண்டிருப்பதைத் தவிர வெகுமக்களுக்கு உள் உந்துதல் தர இயலாதவர்களாகி விட்டனர். நாடாளுமன்றத்துக்குப் புறம்பே இயங்கும் தீவிரச் சக்திகளோ பல பத்தாண்டுகளுக்கு முன் செய்து வந்தவையும், நிகழ்ச்சிகள் நடந்தபின் அவற்றுக்குப் பின்னால் ஓடுவதுமான அதாவது வெகுமக்களை அரசியல்தன்மை பெற்றவர்களாக ஆக்காமல் அவர்களது பிரச்சினைகளை எடுத்துக்கொள்ளும் பழக்கப்பட்டுப்போன அதே வேலைகளையே மேற்கொண்டு ஒரே வட்டங்களுக்குள் சுற்றிச்சுற்றி வந்துகொண்டிருக்கிறார்கள். இளம் மக்களுக்கு உத்வேகம் கொடுக்கக்கூடிய புதியன ஏதும் அவர்களிடம் இல்லை என்கிறார் கோபாட் காந்தி.

கம்யூனிஸ்டுகள் கருத்துநிலை ரீதியாக மார்க்சியத்தை ஏற்றுக் கொண்டாலும், அதன் சாரத்தை அதன் கண்ணோட்டத்தை உள்வாங்கிக் கொள்ள இயலாதவர்களாக உள்ளார்கள் என்று குற்றம் சாட்டும் கோபாட் காந்தி, நாம் மார்க்சியத்தை தர்க்க அளவிலும் அறிவு அளவிலும் ஏற்றுக்கொள்கிறோமேயன்றி நமது பிற்பட்ட சிந்தனையையும் கருத்துகளையும் மாற்றிக் கொள்ள விருப்பமில்லாதவர்களாகவோ, இயலாதவர்களாகவோ இருக்கிறோம் என்கிறார். கம்யூனிஸ்ட் திட்டம் நிலைத்து நிற்கக்கூடியதாகவும் சாத்தியமானதாகவும் இருக்க வேண்டுமானால் சுதந்திரம், மகிழ்ச்சி, புதிய விழுமியங்கள் *(new values)* ஆகியவற்றை இணைத்துக் கொள்கின்றதாக அது இருக்க வேண்டும் என்கிறார் கோபாட் காந்தி. (இதை அவர் அனுராதா மாடல் என்கிறார், அனுராதா காந்தி கோபாட் காந்தியின் வாழ்க்கைத் துணையாகவும் சக அரசியல் செயல்பாட்டாளராகவும் வாழ்ந்தவர், 2008ம் ஆண்டு தனது 54வது வயதில் மலேரியாவால் பாதிக்கப்பட்டு இறந்து போனார்).

நிலப்பிரபுத்துவ மனப்பான்மை நம் சிந்தனையில் மேலாதிக்கம் செலுத்தும் இந்தியா போன்ற நாடுகளில் நமது விழுமியங்கள் அடிப்படையில் பார்ப்பனியத் தன்மையில்தான் உள்ளன. இந்தியாவில் நிலப்பிரபுத்துவக் கண்ணோட்டம் பார்ப்பனிய வடிவத்தை மேற்கொண்டுள்ளது. சாதிய படியமைப்பில் ஒருவர் எந்த நிலையில் இருக்கிறாரோ அதற்கேற்ப அது மேலும் வலுவானதாக உள்ளது. என்றாலும், அது சமூகம் முழுவதிலும் பரவலாக உள்ளது. மேல் சாதி உயர்வு (பார்ப்பனிய) மனப்பான்மை என்பது உடலுழைப்பை அவமதித்தல், குழந்தைகளைப் பெற்றெடுப்பதற்கும் வீட்டு வேலைகளுக்குமான உடைமைகளாகப் பெண்களைப் பார்த்தல் போன்ற ஆண் பெண் அதிகார உறவுகளின் அதே வடிவங்கள்;




**அனைத்துலக அளவிலும் இந்திய அளவிலும் இடதுசாரிகள் முன் இருக்கும் சவால்கள்**
**கோபாட் காந்தி | தமிழாக்கம்: எஸ்.வி.ராஜதுரை**
**வெளியீடு: என்சிபிஎச், சென்னை | விலை: :ரூ.75/-**

மனைவிகளை அடித்தல் (ஏன் அவர்களைக் கொலை செய்தல் கூட); தீண்டாமையைக் கடைப்பிடித்தல் அதன் உச்ச வடிவம்தான் பாலியல் வன்புணர்வும் சித்திரவதை செய்தலும், அதனுடைய மென்மையான வடிவம் சமூகப் புறக்கணிப்பு. இதனுடன், சாதிக்குள்ளேயே அல்லது துணை சாதிக்குள்ளேயே திருமணம் செய்துகொள்ளும் அகமண முறை ஆகிய பண்புகளும் சேர்ந்து கொள்கின்றன.

நாம் மார்க்ஸிஸ்டுகளாக ஆன பிறகு சோசலிச/கம்யூனிச விழுமியங்களை உடகிரகித்துக்கொள்ளக்கூடியது என்பது நமது ஆழ்மனதில் பதிந்துள்ள முதலாளிய/நிலப்பிரபுத்துவ விழுமியங்களையும் அணுகுமுறைகளையும் அகற்றிவிட்டு அவற்றின் இடத்தில் சோசலிச உணர்வை வைக்கும் நீண்ட நிகழ்முறையாகும்.

அப்படியானால், சோசலிசம்/கம்யூனிசம் என்பதற்கான முதன்மையான பண்புகள் யாவை?

எளிமை (அகங்காரம் அல்ல), பாசாங்குகள் மிக மிக அற்ப அளவிலேயே உள்ளதும் வெளிப்படையாகப் பேசுவதுமான நேர்மை, சாதி மற்றும் ஆண் பெண் அதிகார உறவுக் கண்ணோட்டங்களை (அவற்றின் கடுமையான மற்றும் நுட்பமான வடிவங்கள் இரண்டையும்) மறுத்தல், சமபந்தி முறை, கலப்புத் திருமணம், அனைத்து சாதிகளுடனும் அனைத்துப் பரஸ்பரத் தொடர்புகளும் கொள்ளுதல் ஆகியவற்றை ஊக்குவித்தல், மேல்சாதி மனப்பான்மை, அறிவுச்செருக்கு ஆகியவற்றின் அனைத்து வடிவங்களையும் மறுத்தல், உடலுழைப்புக்கு மதிப்பும் மரியாதையும் கொடுத்தல் (குறிப்பாக இல்லங்களில்!), உயர்வு மனப்பான்மை, உடைமை மனப்பான்மை, பொறாமைகள் முதலியன அற்றவையும் அன்பையும் பரஸ்பர மரியாதையையும் அடிப்படையாகக் கொண்டவையுமான உறவுகளை ஊக்குவித்தல், (தனிச்சொத்துடன் இணைப்புள்ள) குடும்ப அமைப்பிலிருந்து கூட்டு வாழ்வுக்கு கம்யூன் வாழ்வுக்குப் படிப்படியாக மாறுதல் போன்ற வழிமுறைகளை கோபாட் காந்தி முன்மொழிகிறார்.

**மேற்கண்ட இந்த மாற்றத்தை எவ்வாறு சாதிப்பது?**

குழு/வட்டம்/கட்சி/அமைப்பு என்பது இந்தத் திசை நோக்கிய முயற்சிகளை மேற்கொள்ளும் அதேவேளை அனைவருக்கும் அதிகபட்ச மகிழ்ச்சி என்பதை நமது இலக்காகக் கொண்டு சுதந்திரம், ஜனநாயகம் ஆகியவற்றின் அடிப்படையில் நாம் நமது உறவுகளைக் கட்டமைக்க முயன்றாக வேண்டும். இதையே திருப்பிச் சொல்வதென்றால். (குறைந்தபட்சம் தொடக்கத்தில் நமது வட்டத்திலாவது) மகிழ்ச்சி என்ற இலக்கு ஒருவரிடம் இருக்குமானால், மேலே குறிப்பிடப்பட்டுள்ள வேறு இரண்டின் (சுதந்திரம், ஜனநாயகம்) பெரும்பகுதியை அடைவது மேலும் எளிதானது. என் தோழர்கள் மகிழ்ச்சியாக இருக்கவேண்டும் என்று நான் விரும்புவேனாகில், அவர்களுக்கு ஊறுவிளைவிக்கும் அல்லது அவர்களைப் புண்படுத்தும் முறைகளை நாடமாட்டேன். சுதந்திரம் என்பதைப் பொருத்தவரை, அனைத்து சுதந்திரத்துக்குமான தொடக்கமுனை, நமக்கு முதலாவதும் முக்கியமானதும் என்னவென்றால் நமக்குள் இருக்கிற சிக்கல்கள், அதாவது முரண்பாடுகள், எடுத்துக்காட்டாக, மனித உறவுகளில் சமத்துவம் இருக்க வேண்டும் என்ற கருத்தைக் கொண்டிருப்பதற்கும் நிலப்பிரபுத்துவ/நுட்பமான ஆணாதிக்க அணுகுமுறைக்கும் உள்ள முரண்பாடு. இந்த முரண்பாடுகளுடன் கணக்குத் தீர்த்துக்கொள்ளப் பலரால் முடிவதில்லை.

இந்தக் கட்டுத்தளைகளிலிருந்து நாம் விடுதலை பெற்றதும், நம் தோழர்களிடம் சாதாரணமான/இயல்பான மனிதப் பிறவிகளாக நடந்துகொள்ளத் தொடங்குவோம். நமது சிந்தனையையும் இயக்கத்தையும் சுதந்திரமும் மகிழ்ச்சியுள்ள சூழலில் கட்டுவோம். ஆனால் நாமே சுதந்திரமற்றவர்களாக இருப்போமேயானால், நமது கூட்டுறவுகளில் சுதந்திரம், மகிழ்ச்சி ஆகியவை உள்ள சூழலை உருவாக்குவது சிந்தித்துப் பார்க்க முடியாததாகும். அந்தச் சூழல் இல்லாவிட்டால் நமது பரஸ்பரத் தொடர்புகள் அனைத்தும் திரிக்கப்பட்டவையாகவே இருக்கும். மற்றவர்கள் மீது நம்மைப் பற்றிய நேர்மறையான மனப்பதிவுகளை உருவாக்க மேலதிக முயற்சி செய்வதாகவே இருக்கும். நமது வட்டத்துக்குள் புதிய விழுமியங்களை, அத்துடன் சேர்த்து சுதந்திரம், மகிழ்ச்சி ஆகியவற்றைக் கொண்டு வரும் முயற்சியாக இருக்காது.

துடிப்பு மிகுந்த எந்தவொரு புதிய கம்யூனிஸ்ட் வட்டமும் இந்தப் பாணியில்தான், கம்யூன் வாழ்க்கையை நோக்கிக் கட்டப்பட வேண்டும் என்று கூறும் கோபாட் காந்தி, இது உலகம் முழுவதிலுமுள்ள கம்யூனிஸ்டுகளுக்கு பொதுவாகப் பொருந்துவதாக இருந்தாலும், இந்தியாவிலுள்ள தனித்துவமான நிலைமைகளைக் கருத்தில் கொள்கையில் நமக்குக் கூடுதலான வேலைகள் உள்ளன என்கிறார்.

இந்தியக் கம்யூனிஸ்டுகள் முதலில் கருத்துநிலைத் தளத்தில் மார்க்சியத்தை இந்தியத்தன்மையாக்க வேண்டும். இந்திய நிலைமைகளுக்கு அவற்றுக்கே உரிய தனித்தன்மை உள்ளது. எனவே, நமக்கான மார்க்சிய கருத்திநிலைத் தளம் பிற நாட்டு நிலைமைகளின் நேரடி நகலாக இருக்க முடியாது.

இங்கு நிலவுகிற மரபுகள், வரலாறு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு மார்க்சியத்தை வளர்த்தெடுக்க வேண்டும். இந்தியாவிற்கு 3000 ஆண்டுகால வலுவான மக்கள் இயக்கம், ஜனநாயக பார்ப்பனிய எதிர்ப்பு இயக்கம் உள்ளது. அது உலகாயதவாதிகளில் தொடங்கியது; பின்னர் பௌத்த மரபு உருவாயிற்று. அதன் பிறகு பக்தித் துறவிகளின் இயக்கங்கள் உருவாயின. இறுதியாக ஜோதிபா ஃபுலே, அம்பேத்கர், பெரியார் இயக்கங்கள் தோன்றின. கம்யூனிசத்தை இந்தியாவில் பிரயோகிப்பது என்பது, இந்த நாட்டின் நெடிய, மாபெரும் மக்கள் வரலாற்றை அடிப்படையாகக் கொண்டு செய்யப்பட வேண்டும். ஒரு வரலாற்றுப் பொருள்முதல்வாத அணுகுமுறை நமக்குத் துல்லியமாகக் கற்பிப்பது இதுதான். அதைப் புறக்கணிப்பதென்பது நமக்கான ஆபத்தை நமக்கு நாமே உருவாக்கிக் கொள்வதாகவே அமையும்.

எனவே, இந்தியாவுக்கான எந்தவொரு உண்மையான கம்யூனிஸ்ட் செயல்திட்டமும் பார்ப்பனிய எதிர்ப்பு நடைமுறையின் இந்த நீண்ட, நெடிய மரபை அடிப்படையாகக் கொண்டிருக்க வேண்டும். அச்செயல்திட்டம் இந்த நாட்டில் நீண்டகாலமாக உள்ள ஜனநாயக மரபின் மீது கட்டியெழுப்பப்பட்டு அதை முன்னெடுத்துச் செல்ல வேண்டும்.

சமுதாயத்தில் அடிப்படையான ஜனநாயக மாற்றத்தைக் கொண்டு வருவதற்காக வெகுமக்களைத் தட்டியெழுப்புவதுதான் முக்கியம். இதன் பொருள், பொருளாதாரப் பிரச்சினைகள் புறக்கணிக்கப்பட வேண்டும் என்பதல்ல; மாறாக இப்போதுள்ள சூழ்நிலைமையையும் நமக்குள்ள அக வலிமைகளையும் (அமைப்புரீதியான வலிமைகளையும்) கருத்தில்கொண்டு எதெதற்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொள்வதுதான்.

அடிப்படையான மாற்றத்தைக் கொண்டுவருகிற அல்லது குறைந்தபட்சம் புதிய நம்பிக்கையைப் பெறுவதற்காக மக்களைத் தட்டியெழுப்புகிற அம்சங்களாக தேசப்பற்றும் அதனுடன் இணைந்த சுதேசி பொருளாதாரமும், நம் சமூகத்தின் ஒவ்வொரு அடுக்கிலும் ஊடுருவியுள்ள பார்ப்பனிய அமைப்பைத் தகர்த்தெறியும் ஜனநாயக கோரிக்கையும் இருக்கும் என்று கோபாட் காந்தி கருதுகிறார்.

சாதி அமைப்பு ஆதிக்கம் செலுத்திவரும் வரையிலும் பார்ப்பனியம் நமது சிந்தனையின் எல்லா அம்சங்களிலும், எல்லா சமூக உறவுகளிலும் ஊடுருவி இருக்கும் வரையிலும் இந்தியா ஒருபோதும் வெற்றிகரமான ஜனநாயக நாடாக இருக்காது. சாதி அமைப்பு மக்களைப் பிளவுபடுத்துவதும், மேல் கீழ் வரிசையைக் கொண்டதும் மட்டுமல்ல. சாதியையும் ஆணாதிக்கத்தையும் பிறப்பிக்கும் பார்ப்பனியம் உள்ளார்ந்த மேற்குடித்தன்மையையும் சகிப்பின்மையையும் மனிதத்தன்மையற்ற தன்மையையும் கொண்டதாகும். கருத்துநிலையும் சாதி அமைப்பின் பிளவுபடுத்தும் தன்மையும் வரலாறு நெடுக ஆளும் வர்க்கங்களுக்கான இலட்சியபூர்வமான கருவிகளாக இருந்து வந்துள்ளதுடன், சமுதாயத்தின் அனைத்து நிலைகளிலும், நமது சமூக, பொருளாதார சொல்லாடல்களின் அனைத்து அம்சங்களிலும் ஊடுருவியுள்ளன. மாநிலங்களுக்கு அதிகாரம் வழங்கப்பட்டு, பிரதேச மொழிகளுக்கு சரிசமமான முக்கியத்துவம் வழங்கப்படும் கூட்டாட்சி முறை ஜனநாயகத்துக்கு இன்றியமையாததாகும்.

நாட்டுப்பற்று என்ற பிரச்சினையைப் பொருத்தவரை, சுதந்திரப் போராட்டத்தின்போது நடந்தது போலவே சுதேசி என்பதைச் சுற்றி மக்கள் அணிதிரள வேண்டும் என்ற அறைகூவல் வெளிநாட்டுப் பொருட்களையும் அமேசான், வால்மார்ட் ஃபிளிப்கார்ட் போன்ற நிறுவனங்களையும் அரசின் சலுகை சார்ந்துள்ள இரு பெரும் முதலாளிகளான அதானி, அம்பானி ஆகியோரையும் புறக்கணிப்பதுடன் இணைக்கப்பட வேண்டும். கிராமியத் தொழில் முனைப்புகளையும் குறு, சிறு, நடுத்தரத் தொழில்களையும் *(MSMEs)* ஊக்குவிக்க வேண்டும்.

பார்ப்பனியம் என்பதைப் பொருத்தவரை, அது கட்டமைப்பு ரீதியானதும் கருத்துநிலை ரீதியானதும் ஆகும். புலேவும் பெரியாரும் வெகுமக்கள் கிளர்ச்சிக்கு இட்டுச் சென்ற சில புதுமையான முறைகளை ஏற்படுத்தினர். அம்பேத்கர் மூலம் தலித் இயக்கம் ஊக்கம் பெற்றது. இன்று சமூகக் களத்தில் பார்ப்பனியத்தின் மீதான தாக்குதல் மேற்சொன்ன மூவரின் போராட்டங்களை முன்னெடுத்துச் செல்வதுடன் அவற்றை பக்தி, உலகாயத மரபுகளுடன் இணைத்து, மரபாகச் செய்யப்பட்டு வந்ததுபோல முதன்மையாக நாட்டார் இசை மூலமும் பல்வேறு நாட்டார் கலைவடிவங்கள் மூலமும் வெகுமக்களிடையே பரவலாகக் கொண்டுசெல்ல வேண்டும். கருத்துநிலை மட்டத்தில் இவை முதன்மையான சாதனமாக இருக்க, கட்டமைப்பு மட்டத்தில் உருவாக்கப்பட வேண்டிய மேடை என்பது பார்ப்பனிய உயர்வு மனப்பான்மையின் வெளிப்படையான மற்றும் நுட்பமான அனைத்து வடிவங்கள், சாதியம், ஆணாதிக்கம் ஆகியவற்றைப் பொது வெளி, குடும்பம் இரண்டிலும் குறிவைத்துத் தாக்கக்கூடியதையும் கலப்பு மணங்கள், பல்சமய உறவுகள் ஆகியவற்றையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும்.

சுட்டிக்காட்டுவதற்கு உலகில் எந்த மாற்றும் இல்லாத நிலையில், நுண் அரசியல் மட்டத்தில் நாம் உருவாக்கும் மாற்று மட்டுமே புதிய சமுதாயத்தைப் படைப்பதற்கான அனைத்து சேர்க்கைப் பொருட்களையும் கொண்டிருக்கும். ஆகவே கம்யூன் வாழ்க்கையை நோக்கி விழுமியங்கள் சுதந்திரம் ஆகியவற்றைக் கொண்ட முறையில் கம்யூனிஸ்ட் கட்சிகள் கட்டப்படுவதும், இந்திய நிலைமைகளுக்கு உகந்த வகையில் மார்க்சியத்தை பயன்படுத்தும்வதுதான் நம்முன் உள்ள உடனடி கடமைகள் என்று இந்நூலை முடிக்கிறார் கோபாட் காந்தி.

●

**கட்டுரையாளர், பொறியியல் இளங்கலைப் பட்டதாரி, ஊடகத்துறையில் பணிபுரிகிறார்.**




கட்டுரை

# டாக்டர் அம்பேத்கரின் தலித் விடுதலைக் கருத்தியலும் இன்றைய நிலைப்பாடும் தீர்வும்

முனைவர்.செ.ரவிசங்கர்

'கற்பி, புரட்சிசெய், ஒன்றுசேர்
முன் செய்து பின் பேசுவது நன்று'

என்று உரத்தக் குரலையும் உருப்படியான சிந்தனையையும் தாழ்த்தப்பட்டவர்களுக்கு வழங்கிய சிந்தனைச் சிற்பி பாபாசாகேப் டாக்டர் அம்பேத்கரின் வாழ்நாளைய எல்லாச் சிந்தனையும், செயல்பாடுகளும் தாழ்த்தப்பட்டவர்களுக்கானதாகவே அமைந்தன. மனிதன் பிறந்தான், வாழ்ந்தான், செத்தான் என்பது பொதுவான கருத்தியல், ஆனால் இவற்றிற்கு மாற்றாக வாழ்ந்தவர் தான் அம்பேத்கர். தனது உயிர் மூச்சு உள்ளவரையில் இன விடுதலையை முன் வைத்திருந்தவர். அம்பேத்கரைப் பொறுத்த வரையில் தலித் விடுதலையை முன் வைத்த தேசிய விடுதலையை விரும்பியவர், அதனையே பல இடங்களில் கூறியவர். இக்கட்டுரை அம்பேத்கரின் தலித் விடுதலைக் கருத்தியலும் இன்றைய நிலைப்பாடும் குறித்து ஆராய்கிறது.

**தாழ்த்தப்பட்டவன் (தலித்)**

இக்கட்டுரையை தாழ்த்தப்பட்டவன் யார் என்ற கேள்வியில் இருந்து தொடங்கலாம். ஏதோ ஒரு காலத்தில், சூத்திரர்கள் என்று சொல்லப்பட்ட நான்காவது வருணத்தின் மிச்சம் தான் தாழ்த்தப்பட்டவர்கள். மிச்சம் என்றால் நான்கு வர்ணத்தில் சூத்திரர்கள் தாழ்த்தப்பட்டவர்களாகக் கருதப்பட்டனர், அதில் பலர் புதிய சத்திரியர்களாகப் பிரிந்து சென்ற பின்னர், தற்போது மீதம் உள்ள சூத்திரர்கள் மட்டுமே தாழ்த்தப்பட்டவர்களாகக் கருதப்படுகின்றனர். இன்று அரசாங்கம் கொண்டு வரப்பெற்ற பட்டியலில் உள்ளவர்கள் தாழ்த்தப்பட்டவர்களாக உள்ளனர்.

அந்த வகையில் தாழ்த்தப்பட்டவர்கள் தொடக்கத்தில் புருஷா கோட்பாட்டில் இருந்து தோன்றியவர்கள். இதனைப் பற்றி அம்பேத்கர் கூறும் போது, சூத்திரர்கள் யார் அவர்கள் எப்படி கீழே நான்காவது வருணத்திற்குத் தள்ளப்பட்டார்கள் என்பதைக் கண்டுபிடிக்க முயலுகையில், இந்தோ ஆரிய சமுதாயத்தின் சதுர்வருணத் தோற்றத்தினை முதலாக வைத்து ஆரம்பிக்கவேண்டும். எனவே சதுர் வருணக் கோட்பாட்டை ஆய்விட எடுத்துக்கொள்ளும் போது ரிக்வேதம் பத்தாவது மண்டலம் தொண்ணூறாவது பாடற்பகுதியிலிருந்து தொடங்க வேண்டும். அது ‘புருஷ சுக்தா’ என்னும் கீர்த்தி வாய்ந்த பெயரால் குறிப்பிடப்படுகிறது என்று கூறியுள்ளார். *(சூத்திரர் யார் - ப.19)* இதன் வழியில் பார்க்கும் போது ஒரு கட்டுக்கதையை வேத நூல்கள் தன்னகத்தே கொண்டுள்ளன. குறிப்பாக புருஷா என்பது ஒரு மனிதன் என்றும் அவன் ஆயிரம் தலைகளையும், ஆயிரம் கண்களையும், ஆயிரம் கால்களையும் கொண்டிருந்தான். அவன் ஒவ்வொரு பக்கத்திலும் பத்து பத்து விரல்களை விரித்து அதற்குள் அடங்க வைத்துள்ள இடமே இப்பரந்த பூமி என்று கதை கூறப்பட்டுள்ளது.

இந்த புருஷா வை கடவுள் வேள்வியில் பலிகொடுக்கும் போது புருஷாவில் இருந்து தான் இந்த உலகில் உள்ள விலங்குகள், மற்றையப் பொருள்கள் தோன்றின. அது போலவே தான், நான்கு வருணங்களும் தோன்றின என்று கதை உள்ளதாக அம்பேத்கர் கூறுகிறார். அந்தக் கதையின் தொடர்ச்சியாகத் தான் பிராமணர்கள் புருஷாவின் வாயிலிருந்தும், ராஜன்யா (சத்திரியர்கள்) அவரது கைகளிலிருந்தும் வைசியர்கள் அவரது தொடை-யிலிருந்தும் சூத்திரர்கள் அவரது பாதங்களிலிருந்தும் தோன்றினார்கள் என்று கூறப்பட்டுள்ளது.

இந்த நான்கு வருணத்தாரும் மனிதர்கள் தான். இங்கு ஒரு வேடிக்கையான கருத்துள்ளது. விலங்குகளைப் பற்றிக் கூறும் கதையில் எங்கிருந்து பிறந்தன என்று கூறவில்லை, ஆனால் மனிதர்களை மட்டும் ஏன் இப்படிப் பிரித்தனர் என்று தெரியவில்லை. அதாவது மக்களை ஏதோ ஒரு வகையில் அன்றைய இந்து தத்துவ வாதிகள் பிரித்த பின்பு இந்த ‘புருஷா’ கதையை வேதத்தில் எழுதியுள்ளனர். என்பது தெளிவாகத் தெரிகின்றது. ஆனால் ஒன்று மட்டும் புரியவில்லை சூத்திரர்கள், தாழ்த்தப்பட்டவர்களாகவும், தீண்டாதவர்களாகவும் எப்படி கட்டமைக்கப்பட்டனர் என்பது புதிரானதாக உள்ளது.

நான்கு வருணங்களின் பிறப்புகளைப் பற்றி புருஷாவிற்குப் பிறகு, அபஸ்தம்பா தர்ம சூத்திரம், வஷிஷ்ட தர்ம சூத்திரம், வேதங்கள், மனுதர்ம சாஸ்திரம் போன்ற அனைத்து இந்து தத்துவ நூல்களும் நான்கு வருண நிலையைத் தொடர்ந்து கூறி வருகின்றன. இது பொய்மையான புனைவு என்பது இதில் இருந்து தெரிகிறது. இப்படி ஏன் எழுதினார்கள் எங்கு மக்களைப் பிரித்தார்கள், குறிப்பாக சூத்திரர்களை ஏன் மற்றவர்களிடம் இருந்து ஒதுக்கி வைத்தார்கள், என்று ஆராயப்பட வேண்டியுள்ளது. அதற்கு அம்பேத்கரின் சிந்தனைகளை முதன்மையாகக் கொள்ள வேண்டும்.

**புறக்கணிப்பிற்கான காரணம்**

முன்பு கூறிய சூத்திரர் பற்றிய கதை ஒரு புறமிருக்க, கதையை எழுதுவதற்கு இந்துத்துவ வாதிகளுக்குப் பயன்பட்ட சூழ்நிலையும், சூத்திரர்களைப் புறக்கணிக்கப்பட்டதற்கான சூழ்நிலையும் ஒன்று தான் அது இன்று வரையில் சமுதாய இந்து தத்துவ வாதிகள் முன்வைக்கிற மாட்டிறைச்சி சாப்பிடுவது தான். எல்லா சமுதாயத்தினரும் தாழ்த்தப்பட்டவர்களை ஒதுக்குவதற்கு மிக முக்கியமான காரணம் ‘மாட்டுக்கறியை’ தலித்கள் உண்பது தான். இதனைப்பற்றி அம்பேத்கர் மிகப் பெரிய விவாதத்தையும் உண்மையையும் தமது சிந்தனைத்தளத்தில் வெளியிட்டுள்ளார்.

அசோகர் காலம் வரையிலும் மாட்டிறைச்சி எல்லாப் பிரிவினருக்கும் பிராமணர்கள், ஷத்திரியர்கள், வைசியர்கள், சூத்திரர்கள் ஆகியோரின் பொதுவான உணவாக இருந்து வந்தது. அதில் விரும்பத்தகாதது ஒன்றுமில்லை. பசுவானது செம்மறியாடு அல்லது வெள்ளாடு அல்லது மான் போன்ற ஒரு பிராணி மட்டுமே. எனவே மக்கள் நான்கு வருணங்களாகப் பிரிக்கப்பட்டிருந்த போதிலும் இந்த நான்கு வருணத்தினரும் அவர்களின் உணவு விஷயத்தில் வேறுபட்டிருக்கவில்லை. குறிப்பாக அனைவரும் மாட்டிறைச்சியை உண்டனர் என்று கூறுகிறார்.

ஆனால் இப்படி இருந்த சூழ்நிலையில் எப்படி தலித் மக்கள் புறக்கணிக்கப்பட்டனர் என்பது கவனிக்கப்பட வேண்டியது அதற்குக் காரணம் எல்லோரும் மாட்டுக்கறியைத் தின்றனர். ஆனால் சூத்திரர்கள் இறந்துபோன மாட்டுக்கறியைத் தின்றனர். மற்றவர்கள் உயிருடன் உள்ள மாட்டினைக் கொண்டு தின்றனர் அவ்வளவு தான் வேறுபாடு. ஒரு காலக்கட்டத்தில் பிராமணர்கள் பசு மாட்டை இறைவனாகக் கருதி வணங்க ஆரம்பித்தனர். அதனை

மற்ற வர்ணத்தார்களும் கடைப்பிடித்தனர். ஆனால் சூத்திரர்கள் அதனைக் கடைப்பிடிக்கவில்லை, எனவே அவர்கள் புறக்கணிக்கப்பட்டனர் என்பது வரலாற்றுச் செய்தி. இங்கு தான் தீண்டாமை தொடங்கியது என்கிறார் அம்பேத்கர். இது காரணமாக பழங்காலத்தில் இருந்திருக்கலாம். ஆனால் இன்று தலித் மக்கள் தவிர இஸ்லாமியர்கள் மற்றும் சிலர் மாட்டுக்கறியைச் சாப்பிடுகின்றனர். அவர்களை ஏற்றுக் கொள்ளும் இந்துத்துவ வாதிகள் ஏன் தலித் மக்களை ஏற்றுக் கொள்ளவில்லை, இது தான் புரிய வில்லை.

மற்றொரு கருத்தும் உள்ளது. அதாவது ஆரியர்களை எதிர்த்தவர்கள், அவர்களிடம் சரணடைந்தவர்கள் இந்த இரண்டு பிரிவினர்களிடையே எதிர்த்தவர்கள் தான் தலித் மக்கள் என்பதும் வரலாறாக உள்ளது. இந்து தத்துவத்திற்கு எதிரான கருத்தியல் எங்கெல்லாம் முளைத்ததோ அங்கெல்லாம் வன்முறையும், வெறியாட்டமும் தலைவிரித்தபடியிருக்கிறது. சமணத்திற்கு எதிராகவும் அந்த வன்முறை வெறியாட்டத்திற்கு அஞ்சி நடுங்கி, பயந்து, சரணடைந்து போனவர்கள் எல்லாம் சாதி இந்து ஆனார்கள். எதிர்த்து நின்றவர்கள் சேரி வாழ் மக்களானார்கள். இந்த வரலாற்றை எவராலும் மறைக்க முடியாது. மறுக்க முடியாது என்கிறார் திருமாவளவர். (அத்து மீறு.ப.104) இதுவும் உண்மையாக இருக்கலாம். ஏனென்றால் எல்லா இடங்களிலும் எல்லா ஊர்களிலும் தலித் மக்களுக்கு எதிராக அனைத்து சாதி இந்துக்களும் வன்முறையில் ஈடுபடுகிறார்கள் அது இதனால் தான் என்பதும் கவனத்தில் கொள்ள வேண்டியுள்ளது.

இவ்வாறாக சூத்திரர்கள் தாழ்த்தப் பட்டவர்களாக மாறி இன்று தலித் மக்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளனர். ஏதோ ஒரு காலத்தில் கதைகள் புனையப்பட்டு அதிலிருந்து இந்த தலித் இனம் தாழ்ந்த இனமாகக் கருதப்பட்டு வருகின்றது. இந்த மாதிரியான சூழ்நிலையின் போது தான் அம்பேத்கர் தலித் மக்களுக்காக குரல் கொடுத்தார்.

**அம்பேத்கரின் செயல்பாடுகள்**

இந்துத்துவ வாதிகளின் கட்டுக் கதையின் அடிப்படையில் பார்த்தால் இந்த உலகம் தோன்றிய போதே சூத்திரர்கள் தோன்றிவிட்டார்கள் எனக்கூறுகிறது. ஏறத்தாழ 3000 ஆண்டுகளுக்கும் மேலாக அடிமைப்பட்டுக் கிடந்த இனத்தை மீட்டெடுத்து அவர்களுக்கு சமத்துவம் பெற்றுக் கொடுப்பது முடியுமா? என்பது கேள்வியாக இருந்தது. அம்பேத்கர் அந்த பெருமுயற்சியில் இறங்கினார். அவர் செயல்பாடுகள் ஓரளவு வெற்றியே பெற்று தந்தது.

1. தலித் மக்களுக்குக் கல்வி வழங்குவது
2. அரசியல் அதிகாரம் பெறுவது

இந்த இரண்டு கொள்கைகளையும் அம்பேத்கர் கையில் எடுத்தார்.

**தலித் மக்களுக்குக் கல்வி வழங்குவது**

சூத்திரர்களுக்கான பிராமண சட்டங்கள் மிகவும் கொடுமையானது. அந்த சட்டங்களில் மிக முக்கியமானது. 'சூத்திரத்தின் அறிவைப் பெறக் கூடாது, அனைவருக்கும் கல்வி போதிப்பது ஒரு பாவம், ஒரு குற்றச் செயலாகும்' என்கிறது மனு முதலான நூல்கள். இதில் இருந்து அம்பேத்கார் தமது செயல்பாட்டைத் தொடங்குகிறார். சூத்திரனுக்குக் கல்வி வழங்கக் கூடாது என்னும் கருத்தியலை அவர் எதிர்த்து சூத்திரம் கல்வி பயில வேண்டும் என்கிறார்.

'நெடுங்காலமாய் ஷெட்யூல்ட் வகுப்பினர் தன்மான மற்ற ஓர் அறியாமைக் கூட்டத்தினராகவே இருந்து வந்தனர். அச்சமயம் அவர்கள் இந்து சமூகத்தினர் தமக்கு அளித்த சமுதாய படித்தரத்தை அப்படியே ஏற்றுக் கொண்டிருக்கலாம். ஆனால் கல்வியறிவு பெறப் பெற அவர்கள் இந்திய சமுதாயச் சட்டங்களால் தாங்கள் துன்புறுவதை உணரத் தொடங்குவார்கள். அதன் விளைவாக அவர்கள் இந்து சமுதாயத்தினின்றே பிரிந்து செல்லும் அபாயமும் நேரிடக் கூடும் என்று இந்துக்களுக்கு நான் எச்சரிக்கை விடுக்கின்றேன்' என்கிறார். கல்வியறிவு பெற்று விட்டால் தாழ்த்தப்பட்டவர்கள் சட்டங்களைப் புரிந்து கொள்வார்கள் அதன் மூலம் விடுதலை பெற முடியும் என்று அம்பேத்கர் நம்பினார். மேலும் அம்பேத்கர் 1924 ல் ''பகிஷ்கார ஒழிப்பு சபை'' மாநாட்டில் சில கருத்துக்களை தீர்மானமாகக் கொண்டிருந்தார்.

1. தாழ்த்தப்பட்டவர்கள் கல்வி பெற வேண்டும், இதற்கான விடுதிகள் ஏற்படுத்துவது, மற்ற வசதிகளையும் ஏற்படுத்துவது.

2. தாழ்த்தப்பட்ட வகுப்பினர் பொருளாதார முன்னேற்றம் அடைவதற்கு தொழிலியல் பள்ளிகளையும், விவசாயப் பள்ளிகளையும் துவக்குதல்.

இவற்றை அம்பேத்கர் பேசியதோடு மட்டும் இருக்கவில்லை. அவற்றை செயல் வடிவம் காட்டிச் செய்தார்.

1. 4.1.1925 - ஷோலாப்பூரில் தாழ்த்தப்பட்ட உயர்தரப் பள்ளி மாணவர்களுக்கு ஓர் விடுதி நிறுவப்பட்டு, உடை, புத்தகங்கள், உணவு இலவசமாக வழங்கப்பட்டன.
2. 1928 - தாழ்த்தப்பட்டோர் கல்விக் கழகம் துவக்கப்பட்டது.
3. 1946 - பம்பாய் மாநகரில் சித்தார்த்தா கல்லூரி தாழ்த்தப்பட்ட மக்கள் பட்டம் பெற நிறுவப்பட்டது.

இவைகளை அம்பேத்கர் தாழ்த்தப்பட்ட மக்களுக்காகச் செய்தார். ஒரு சமூகம் விடுதலை பெற வேண்டுமானால் கல்வி பெற வேண்டும். கல்வி நிலையில் முன்னேற்றம் அடைந்தால் மற்ற நிலைகளில் மாற்றம் அடைந்து விடலாம் என்று அம்பேத்கர் நம்பினார். எனவே தான் மாணவர்கள் தங்களுக்குத் தேவையான விதத்தில்

பல்கலைக்கழகத்தின் கல்வியைப் பெறுதல் வேண்டும். அறிவைப் பெருக்கிக் கொள்ள வேண்டிய இடமாகப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். எழுத்தாளர்கள் வேலைக்குப் பயிற்சி பெறும் நிலையமாக ஆக்கிக் கொள்ளக் கூடாது என்கிறார். மேலும் பெற்ற அறிவைக் கொண்டு ஏதாவதொரு வகையில் தனது சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காகப் பாடுபட்டு சமுதாயத்தை முன்னேற்ற வேண்டும் என்கிறார். அறிவானது மனிதனுடைய வாழ்வின் அஸ்திவாரம் ஆகும். ஆதலால் மாணவர்கள் தங்களது முயற்சிகள் அனைத்தையும் பகுத்தறிவின் சக்தியைக் கொண்டு நிர்வகிக்கக் கூடியவைகளாக அமைத்துக் கொள்ள வேண்டும். மேலும் அறிவையும் சிந்தான சக்தியையும் இந்த நாட்டின் சமூகத்தில் நசிந்து நலிவுற்றுள்ள நமது ஷெட்யூல்ட் வகுப்பினர் முன்னேற்றத்திற்காகவும் பயன்படுத்த வேண்டும் என்கிறார். *(உலக சிந்தனையாளர் ப.25)*

இவரின் கல்விச் சிந்தனை தான் உண்மையான தலித் மக்களுக்கான கல்விச் சிந்தனை, இது தவிர மற்றவர்களின் குறிப்பாக தலித் அல்லாதவர்கள் கூறிய கல்விச் சிந்தனை எல்லாம் தலித் மக்களுக்கான கல்விச் சிந்தனையாக இருக்கவில்லை, மாறாக இச்சமுதாயத்தில் தாழ்த்தப்பட்ட மக்களைப் பற்றி பேசி தனது பெயரைத் தக்க வைத்துக் கொண்டவர்கள்.

பொய்யான சிந்தனையாளர்கள் இன்றளவும் தலித் மக்களுக்காகக் குரல் கொடுப்பதாகச் சொல்லிக் கொண்டு தங்களது பெயர்களை பிரபலப்படுத்திக் கொண்டிருப்பவர்கள் பலர் உள்ளனர். அவர்களைப் பட்டியலிட்டால் எண்ணிக்கையில் அடங்க மாட்டார்கள். ஆனால் அம்பேத்கர் தலித் மக்களாக பிறந்து அவர்களுக்காகவே வாழ்ந்து இறந்தவர். அவரின் கல்விக் கொள்கைதான் தலித் மக்களின் உண்மையான கல்விக் கொள்கை.

### அரசியல் அதிகாரம் பெறுவது

ஒரு சமுதாயம் முழுமையான விடுதலை பெற வேண்டுமானால் அரசியல் ஈடுபாடும் உரிமையும் பெற வேண்டும். அரசியல் என்பது சட்டங்களை இயற்றுவதற்கான அதிகாரம் படைத்த அமைப்பு. எனவே தான் அம்பேத்கர் அரசியல் அதிகாரத்தை தாழ்த்தப்பட்டவர்களுக்காகப் பெற்றுத் தர முயற்சி செய்தார். அம்பேத்கர் தாழ்த்தப்பட்டவர்களுக்காக அரசியல் களத்தை உருவாக்க பிரிட்டிஷ் அரசாங்கத்திடம் முறையிட்டார். முதல் வட்டமேசை மாநாட்டில் அம்பேத்கார் அரசியல் நிலைப்பாடு குறித்து மிக விரிவாகப் பேசியுள்ளார்.

*அதாவது நாட்டின் சமூக, பொருளாதார வாழ்க்கை கோட்பாடுகளை மாற்றியமைப்பதற்குத் தயங்காததுமான ஓர் அரசு நமக்கு வேண்டும். இத்தகையோர் அரும்பணியைப் பிரிட்டிஷ் அரசால் என்றைக்கும் செய்ய இயலாது. மக்களின் மக்களுக்காக மக்களால் நடத்தப்படும் ஓர் ஆட்சியினால் மட்டுமே இதை நிறைவேற்றிக் காட்ட முடியும். (டாக்டர் அம்பேத்கர் நூல் தொகுப்புத் தொகுதி - 56)*

இவ்வாறாகப் பேசிய தலைவர் அம்பேத்கர் ஆனால் அந்த மக்களாட்சி என்பது வெறுமனே இருந்து விடக்கூடாது. அது தலித் மக்களை முன்வைத்து தேசிய விடுதலை என்று வெளிப்படையாகவே பேசியுள்ளார். *முதலில் பிரிட்டிஷ் அரசாங்கத்தில் தலித் மக்களுக்கு கிடைக்காதவற்றைப் பற்றி இந்திய அரசாங்கத்தை நடத்தி வரும் அதிகார வர்க்கத்தினர் எவ்வளவு தான் நல்ல நோக்கம் உடையவர்களாக இருந்த போதிலும் எங்களுடைய குறிப்பிடத்தக்க குறைகளைப் போக்கி மாற்றத்தை உண்டாக்க கூடிய அளவுக்கு அதிகார மற்றவர்களாகவே இருப்பார்கள் அரசியல் அதிகாரம் எங்கள் கைகளுக்கு வந்தால் தவிர இவர்களால் மட்டுமல்ல பிறர் எவராலும் கூட எங்கள் குறைகளைத் தீர்க்க முடியாது* என்று கூறியுள்ளார்.

டாக்டர் அம்பேத்கார் அரசியல் அதிகாரத்தை மிக நேர்த்தியாக ஆராய்ந்து எப்படி அது சமூக விடுதலையைப் பெற்று தர ஏதுவாக இருக்கும் என்று அந்தத் தளத்தில் இயங்கினார் அம்பேத்கர் தலித் மக்களுக்கான அரசியல் உரிமையைப் பெற்றுத் தர பல வகைகளில் போராடினார். குறிப்பாக வட்டமேசை மாநாட்டில் அவர், *'ஒடுக்கப்பட்ட மக்களின் சிக்கல் ஒரு சமூகச் சிக்கல், அதற்குரிய தீர்வு அரசியலில் இல்லை வேறு இடத்தில் உள்ளது என அடிக்கடி கூறப்படுகிறது. இந்தக் கருத்தை வன்மையாக மறுக்கின்றோம். அரசியல் ஆதிக்க உரிமை கிடைத்தாலன்றி ஒடுக்கப்பட்ட வகுப்பாரின் சிக்கல் தீராது. இது உண்மையாயின் இதற்கு மாறுபட்ட கருத்து இருக்க முடியாது என்பது தான் என் எண்ணம் - ஒடுக்கப்பட்ட வகுப்பாரின் சிக்கல் முதன்மையாக ஓர் அரசியல் சிக்கலே அன்றிச் சமூகச் சிக்கல் அன்று, அது அவ்வாறு தான் கருதப்பட வேண்டும். என்று தெரிவித்துக் கொள்கிறேன். அரசியல் அதிகாரம் பிரிட்டிஷாரிடமிருந்து பொருளாதாரம் சமூகம், சமயம் ஆகியவற்றால் எங்களை அடக்கி ஆதிக்கம் செலுத்துவோர் கைகளுக்கு மாறிச் செல்கிறது என்பதை அறிவோம், சுயராஜ்யம் என்ற கருத்தினை கேட்கும் போதெல்லாம் எங்களுக்கு இழைக்கப்பட்டு வந்துள்ள கொடுமைகள், அடக்கு முறைகள், அநீதிகள் ஆகியவை எங்கள் நினைவுக்கு வந்து சுயராஜ்ய ஆட்சியில் அவை மீண்டும் தலைதூக்கும் என்ற பயம் ஏற்படுகின்ற போதிலும் அந்த 'சுயராஜ்யம்' கிடைப்பதற்கும் நாங்கள் தடையாக இருக்க விரும்பவில்லை - அரசியல் ஆதிக்கப் பதவிகளில் எங்கள் நாட்டு மக்களோடு நாங்களும் எங்கள் சமுதாய மக்களின் விகிதத்திற்கு தக்கவாறு அமர்த்தப்படுவோம் என்னும் நம்பிக்கையில் தற்போது நிலவும் தவிர்க்க முடியாத இடர்பாடுகளை ஏற்கக் தயாராக இருக்கின்றோம். எங்கள் சிக்கல்கள் காலப்போக்கில் தீர்த்து விடும் என்ற நிலையில் விடப்படக் கூடாது என்ற ஒரு நிபந்தனையுடன் சுயராஜ்யம் அளிப்பதற்கு உடன்படுகிறோம். (ப.8)*

என்று மிகவும் நீளமான உரையை சிந்தித்து வெளிப்படுத்தியுள்ளார். அம்பேத்கரைப் பொருத்த வரையில் இந்தியா சுதந்திரம் அடைய வேண்டும் என்பதை விட தலித் மக்கள் அரசியல் அதிகாரம் பெற்ற சுதந்திரம் வேண்டும் என்றார். தலித் மக்களின் அரசியல் அதிகாரம் மூலம் தான் தலித் சமூகம் விடுதலை பெற முடியும் என்று ஆழமாக நம்பினார். எனவே தான் இந்தியா சுதந்திரத்தைப் பற்றி இந்துத்துவ வாதிகள் பேசிய போதெல்லாம் அம்பேத்கர் தலித்திய சுதந்திரத்தை முன்னெடுத்துச் சென்றார்.

1946 ஏப்ரல் 5 ஃபீல்ட் மார்ஷல் வைகவுண்ட் வேவலுக்கும் டாக்டர் அம்பேத்கருக்கும் இடையே நடைபெற்ற கூட்டத்தில் அம்பேத்கர் கூறிய கருத்து முக்கியத்துவம் பெற்றது. இந்தியா சுதந்திரமடைந்தால் அது மிகப் பெரிய விபத்தாக இருக்கும் என்று டாக்டர் அம்பேத்கர் கருதினார், காரணம் இந்தியாவில் உள்ள இந்துத்துவ வாதிகள் தலித் மக்களை அடிமையாக வைத்துக் கொள்வார்கள் என்பது தான். எனவே பிரிட்டிஷ்காரர்கள் வெளியேறுவதற்கு முன்னால் புதிய அரசியல் சட்டம் தாழ்த்தப்பட்ட சாதியினருக்கு வாழ்க்கையின் அடிப்படையான மனித உரிமைகள், சுதந்திரம், மகிழ்ச்சியான வாழ்க்கை முதலியவற்றை உத்தரவாதம் செய்வதை உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும். அது அவர்களின் தனித் தொகுதிகளை மீண்டும் ஏற்படுத்த வேண்டும்'' *(தொகுதி.19.ப.109)* என்று கூறியுள்ளார். அம்பேத்கரைப் பொறுத்த வரையில் இந்தியா சுதந்திரம் பெறுவதால் தலித் மக்களுக்கு எந்த விதமான பயனும் ஏற்படப் போவதில்லை என்று கருதியுள்ளார் எனவே தான் 'நாட்டின் சுதந்திரத்தைக் காட்டிலும் என்னுடைய சமூகத்தின் முன்னேற்றதிற்கு உழைப்பதையே நான் விரும்புகிறேன். நானும் அதில் ஒருவன் என்று நான் பெருமைப் பட்டு வரும் தாழ்த்தப்பட்ட சாதியினரின் நலன்களை முன்னேற்றுவதற்கும் வளர்ப்பதற்குமான பொறுப்பை நான் ஏற்றுக் கொள்வதாக எந்த தலைவராவது என்னிடம் உறுதியளிப்பாரேயானால் நான் அந்தக் கருத்தை மறுபரிசீலனை செய்வேன். சாதி வேறுபாட்டை அங்கீகரிக்கும் எவனையும் ஒரு தலைவனாக அங்கீகரிக்க நான் மறுக்கிறேன் என்கிறார். *(தொகுப்பு - 1 ப.79)*

இவ்வாறாக தலித் மக்களுக்காக அரசியல் அதிகாரம் பெற்றுத் தந்த அம்பேத்கர் மிகப் பெரிய சாதனையாளர் தான். கி.பி 400 களில் இருந்து அடிமைப்பட்டுக் கொண்டிருக்கும் தாழ்த்தப்பட்ட சமுதாயத்திற்கு அரசியல் அதிகாரம் பெற்றுத் தருவது என்பது மிகப் பெரிய சவாலானதாகும். அதனைப் போராடி பெற்றுத் தந்துள்ளார். தாழ்த்தப்பட்ட மக்களுக்காகக் கல்வி, பொருளாதாரம், அரசியலில் போதுமான அளவு உரிமைகளையும் விடுதலையையும் பெற்றுத் தந்த அம்பேத்கர் தலை சாய்ந்து குறுகிப் போய் கிடந்த தாழ்த்தப்பட்ட மக்களை இன்று பல அடி உயரத்துக்குக் கொண்டு வந்து நிறுத்தியுள்ளார்.

**இன்றைய நிலை**

டாக்டர். அம்பேத்கர் போராடிப் பெற்றுத் தந்த தலித் மக்களின் சுதந்திரம் இன்று எந்த அளவில் இருக்கின்றது என்பதை ஆராய வேண்டியுள்ளது. அம்பேத்கர் எந்த நோக்கத்திற்காக அரசியல் அதிகாரம் பெற்றுத் தந்தாரோ அந்த நோக்கம் இன்று தலித் மக்களிடம் இருக்கிறதா? என்பது ஆராயப்பட வேண்டிய ஒன்றாக இருக்கிறது. அம்பேத்கர் கூறினார் ''எதிர்கால இந்திய அரசியலமைப்பில் பெரும்பான்மையோர் ஆட்சி ஏற்படின் அது நிச்சயமாய் சாதி இந்துக்களின் ஆட்சியாகத் தான் இருக்கும் என்பதில் எனக்குச் சிறிதும் சந்தேகமில்லை. இந்த சாதி இந்துக்களின் விருப்பு வெறுப்புகளுக்கு நியாயம் நீதி, சமத்துவம், மனசாட்சி, ஆகியவை அனைத்தும் பலியிடப்படும். சட்ட ரீதியாகவும், நிர்வாக ரீதியாகவும், சிறுபாண்மை வகுப்பினரின் நலன் புறக்கணிக்கப்படும் அவர்களின் குடியுரிமைகள் காற்றிலே பறக்க விடப்படும் என்பதில் ஐயமில்லை. ஆகவே இத்தகைய அபாயகரமான நிலை ஏற்படாதவாறு ஷெட்யூல்ட் வகுப்பினருடைய நலன் பாதுகாக்கப்பட வேண்டியது அவசியம்'' என்றார் ஆனால் இன்று அம்பேத்கரின் கூற்றுப் போலவே அரசியல் நிலை உள்ளது. இட ஒதுக்கீட்டால் அரசியல் அதிகாரம் தலித்களுக்கு கிடைத்தது. இருந்த போதிலும் தலித் மக்களின் வாழ்க்கை நிலை மாறவில்லை எனலாம். இதற்கான காரணம், அரசியல் கட்சிகள் அம்பேத்கர் பெற்றுத் தந்த இட ஒதுக்கீட்டை தமதாக்கிக் கொள்ளவே போட்டி போட்டுக் கொண்டிருக்கின்றன. தலித் இட ஒதுக்கீட்டை தமதாக்கிக் கொண்டு தலித் உறுப்பினர்களை தமது கட்சியின் பண்ணையாட்களாகவே வைத்திருக்கின்றன. அம்பேத்கர் தமது மக்கள் அரசியலில் இடம் பிடிக்க வேண்டும், இடம் பிடித்தால் மக்களின் குறைகள் சட்டமன்ற நாடாளுமன்றத்தில் முழங்கப்படும். அதனால் தலித்களுக்கு ஓர் விடிவு காலம் பொறக்கும் என்று நம்பினார். ஆனால் சட்டமன்றத்திற்கும், நாடாளுமன்றத்திற்கும் செல்கின்ற தலித் உறுப்பினர்கள் தாங்கள் தலித் மக்களின் பிரதிநிதி என்பதையும், தலித் மக்களுக்கான தொகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட உறுப்பினர் என்பதையும், அம்பேத்கர் பெற்றுத் தந்த அரசியல் களம் என்பதையும் மறந்து போய் விட்டனர்.

மாறாக தலித் உறுப்பினர்கள் எல்லாம் எந்த பெரும்பான்மைக் கட்சியைச் சார்ந்திருக்கின்றார்களோ அந்த கட்சித் தலைவர் கூறுகின்றவற்றை மட்டுமே கேட்கின்றனர் அவர்களுக்கு மட்டுமே ஜால்ரா போடுகின்றனர். இதனால் அம்பேத்கரின் உழைப்பு அர்த்தமற்றதாகிப் போனது. இதற்கான காரணம் என்ன என்று பார்த்தால் அதற்கும் அம்பேத்கர் கூறியுள்ள கருத்தினையே இங்கு சுட்டிக் காட்டலாம். 'அரசியலை ஒரு பிழைப்பாய்க் கருதி வாழ்கின்ற நேர்மை, நாணயமற்றோரை நான் பெரிதும் வெறுக்கின்றேன் சாதாரண மக்களின் உழைப்பும், தியாகமும் தான்

தலைவர்களின் வெற்றிக்குக் காரணம். கருங்காலிகள், உரிமைகளின் மீது பற்றுடையோர் போன்றும் இன அன்பு கொண்டோர் போன்றும், போர்வை கொண்டு நடிப்பது தங்களின் சொந்தவருமானம், வாழ்வு மற்றும் புகழுக்குமே ஆகும்.' இக்கூற்று அம்பேத்கரின் கூற்று யாருக்காக இதனைச் சொன்னார் என்றால் இந்து தத்துவ அரசியல் வாதிகளுக்காக ஆனால் வெட்கக்கேடு இன்று அது தலித் உறுப்பினர்களுக்குப் பொருந்தி விடுகிறது.

குறிப்பாக கூற வேண்டுமென்றால் இன்று தலித் மக்கள் பிரதிநிதிகள் இந்துத்துவ கட்சிகளின் பண்ணையாட்களாகவே செயல்படுகின்றனர். எதிலும் பதவிகளுக்காக அவர்களிடம் பிச்சையெடுத்துக் கொண்டிருக்கின்றனர். எங்காவது தலித் மக்கள் துன்பப்படுவதைப் பற்றிப் பேசுகின்ற தலித் எம்.எல்.ஏ களைவவிட தனது கட்சித் தலைமைக்காக எதிர்க்கட்சித் தலைவர்களை திட்டிப்பேசி, அதன் மூலமாக தான் சார்ந்திருக்கின்ற கட்சியில் ஒட்டிக் கொள்கிறார்கள். இது போன்றவர்கள் தான் இன்று தலித் அரசியல் அதிகார அடையாளமாக இருக்கின்றனர். இவர்கள் அம்பேத்கர் கூறுவது போல 'கருங்காலிகள்' ஆவார்கள். இது போன்ற நிலைகளில் அம்பேத்கரின் உழைப்பு இன்னமும் எத்தனையோ தலித் மக்களுக்குப் போய்ச் சேரவில்லை.

**இன்றைய கல்வி, அரசு வேலை வாய்ப்பு**

இன்றைய கல்வி நிலையங்களும், அரசு வேலை வாய்ப்பு என்பதும் தலித் மக்களைப் பொறுத்தவரையில் அது ஒரு விவசாயத் தோட்டம் போல அதிகார மையத்தாரிடம் தான் சிக்கியுள்ளன. தலித் மக்களுக்கான நல்ல கல்வி என்பது கிடைப்பது அரிதானதாவே உள்ளது.

பொதுவாக ஒடுக்கப்பட்டவர்களுக்கான கல்வி முறை என்பது மாயத்தோற்றம் கொண்ட கல்விமுறை தான் 'பாப்லோ ஃப்ரையிரே' கூற்றுப்படி பிரிந்து வாழும் நம்பகத் தன்மை அற்ற ஒடுக்கப்பட்ட மக்கள் தங்களுக்கான கல்வி முறை ஒன்றை விடுதலை நோக்கி இட்டுச் செல்லும் கல்வி முறை ஒன்றை விடுதலை நோக்கி இட்டுச் செல்லும் ஒன்றை வளர்த்தெடுப்பதில் எப்படி பங்கேற்க முடியும்? தங்களை அடக்கி ஆளும் அதிகார வர்க்கத்தின் ஆதாரப் பிரபுக்களாக தங்களை கண்டறிந்து கொள்ளும் போது தான் தங்கள் விடுதலை நோக்கி வழிநடத்தும் ஒரு கல்வி முறையைப் பெற்றெடுக்கும் செவிலியின் வேலையை அவர்களால் எப்படி செய்ய முடியும். வாழ்வது என்பதே அவர்களாக இருத்தல். அவர்கள் என்றாலே அது அதிகார வர்க்கம் என அவர்களாக மாறுவதே குறி என்பதை உடைக்கும் வரை அதற்கு சாத்தியமே இல்லை. தாங்களும் தங்களது அதிகார வர்க்கமும் மனிதத் தன்மையை அற்றுப் போக வைத்ததன் விளை பொருட்களே என்பதைக் கண்டறியும் ஒரு கருவியே ஒடுக்கப்பட்டவர்களுக்கான கல்வி முறை ஆகும். என்று தமது ஒடுக்கப்பட்டவர்களின் விடுதலைக்கான கல்விமுறை நூலில் கூறியுள்ளார். (ப.20)

இக்கூற்று இன்று தலித் மக்களுக்குரியதாகவே அமைந்துள்ளது. பொதுவாக அதிகார வர்க்கம், அதிகார சூழல் இவ்விடங்களில் தலித் மாணவர்கள் அம்பேத்கர் வாங்கிக் கொடுத்த கல்வி உரிமையை முன் எடுத்துச் செல்ல முடியாத நிலை உள்ளது. அதனையும் மீறி முன் செல்கின்ற போது பலவிதமான மன உளைச்சலுக்கு ஆளாகின்றனர். தலித் மாணவர்களின் பிரச்சினைகள்

1. அரசு நிறுவனங்களில் தலித் மாணவர்கள் அரசு இட ஒதுக்கீட்டில் சேர்ந்து விடுகின்றனர்.
2. திறமையான மாணவர்கள் கூட ஒதுக்கீட்டின் வழியில் தான் சேர்த்துக் கொள்ளப்படுகின்றனர்.
3. அங்குள்ள அதிகார வர்க்கத்து ஆசிரியர்கள் தலித் மாணவர்களுக்கு மதிப்பெண் வழங்குவதில் ஏற்றத்தாழ்வுகளை கடைபிடிக்கின்றனர். குறிப்பாக தான் சார்ந்துள்ள இனத்து மாணவர்கள் தலித் மாணவர்களுக்கு கீழ் மதிப்பெண் பெற்று விடக் கூடாது என்பதில் கவனமுடன் செயல்பட்டு அவர்களுக்கு மதிப்பெண் அதிகமாக வழங்குகின்றனர். நன்றாகப் படிக்கின்ற தலித் மாணவர்களுக்கு மேல் மதிப்பெண் உள்ளவனாக ஆக்கி விடுகின்றனர்.
4. குறிப்பாக (á¯áÀ) என்ற பாடத்திட்டத்தின் அமைப்பில் தலித் மாணவர்கள் புறக்கணிக்கப்படுகின்றார்கள்.
5. ஏதேனும் உதவித் தொகைக்கு விண்ணப்பிக்கும் போது தலித் மாணவர்களுக்கு இந்துத்துவ ஆசிரியர்கள் முக்கியப் பொறுப்புகளில் உள்ள போது கையெழுத்து இடுவதில்லை.

இது போன்ற பிரச்சினைகளில் மாணவர்கள் இயல்பாகவே தனக்குரிய திறமையை இழக்கிறார்கள். இங்கு அம்பேத்கர் கூறிய எதிர்காலத்தில் தாழ்த்தப்பட்டவர்கள் இந்துத்துவ வாதிகளுக்கு அடிமையாக இருப்பார்கள், என்ற சிந்தனை கல்வி நிலையங்களில் இன்று உருவாகி விட்டது. இது போலவே அரசு நிறுவனங்களில் பணிபுரியும் நிலை இன்றும் உயர்ந்து நிற்கிறது. திறமையுள்ள தலித் ஊழியர்களை ஓரங்கட்டிவிடும் பழக்கமும், அவர்களை மதிக்காத போக்கும் இன்று சுதந்திர இந்தியாவில் சுதந்திரமாக இருக்கிறது. ஆனால் அம்பேத்கர் 'ஷெட்யூல்ட்' பிரிவினர் அரசுப் பணிகளைப் பெறுவதில் இரண்டு விதமான நன்மைகள் உள்ளன. முதலில் சாதி இந்துக்கள் அரசுப் பணிகளைக் கைப்பற்றிக் கொண்டு ஷெட்யூல்ட் வகுப்பினரை நிரந்தரமான கொடுமைகளில் ஆழ்த்தி அவதிப்படுத்துவதை; தடுத்து ஷெட்யூல்ட் பிரிவினருக்கும் சம சந்தர்ப்பம் வழங்கச் செய்கின்றது. இரண்டாவது அரசு விவகாரங்களில் நீதியைப் பெறுவதற்கு அனுகூலமாக

இருப்பதோடன்றி, அவர்களின் பொருளாதார நிலைமைகளையும் உயர்த்துகின்றது? என்றார். (உலகச் சிந்தனையாளர்.ப.26) இங்கு முதலாவது நன்மை என்று கூறிய சம சந்தர்ப்பம் இன்றும் வரவில்லை, ஆனால் இரண்டாவது அம்பேத்கர் கூறிய பொருளாதார நிலைமை உயரும் என்பது மட்டும் நிறைவேறியுள்ளது. சம சந்தர்ப்பம் அடைவது பற்றி ஆராயப்பட வேண்டியுள்ளது.

**தீர்வு**

இவ்வாறாக டாக்டர் அம்பேத்கர் போராடிப் பெற்றுத் தந்த அரசியலும், கல்வியும், இன்றளவும் முழுவதுமாக தலித் மக்களுக்குக் கிடைக்காமல் போனதற்கு என்ன காரணம் என ஆராய்ந்தால் இரண்டு கருத்துக்களைக் கவனிக்கப்பட வேண்டும்.

1. **விவசாயத்துறையில் தலித்துக்கள் ஈடுபடுவது**
2. **கிராமங்கள் அழிய வேண்டும்**

இது கொஞ்சம் அதிர்ச்சியை உண்டுபண்ணும் கருத்தாக இருக்கலாம். ஆனால் அதான் உண்மையான சமத்துவத்துக்கான காரணங்களாக அமையும். இன்றளவும் சாதிய ஏற்றத்தாழ்வு அமைந்துள்ள இடம் 'கிராமம்' சாதியம் கொண்டுள்ள தொழில் வேளாண்மை (விவசாயத் தொழில்) இந்த இரண்டும் அழிக்கப்பட்டு விட்டால் இந்தியாவில் சாதியம் அழியும். தலித்துக்கள் அதிகார வர்க்கத்தினால் ஒதுக்கப்பட மாட்டார்கள்.

**ஏன்**

விவசாயத்தில் தலித்துக்கள் பண்ணையாட்களாகவும், தினந்தோறும் கூலி பெறும் தொழிலாளர்களாகவும் இருந்து வருகின்றனர். அங்கு முதலாளி என்கின்ற இந்துத்துவ வாதிகள் தலித்துக்களை அடிமையாகவே பார்த்துப் போய் விடுகிறான். இங்கு இரண்டு கருத்து முக்கியமானவை.

1. **தலித் மக்கள் தனக்குக் கீழானவர்கள் என்கிற எண்ணம்**
1. **தலித் மக்கள் தன்னிடம் கூலி பெறுகிறான் என்கிற எண்ணம்**

இவை இரண்டும் சேர்ந்து கொண்டு முதலாளியை எல்லா இடங்களிலும் முதலாளியாக வைத்திருக்கின்றது. மற்றொன்று

1. **விவசாயத்தில் தொழிலாளியாக இருக்கும் தலித்மக்கள் எத்தனை ஆண்டுகள் வேலை செய்தாலும் அவர்கள் கூலித் தொழிலாளிகள் தான். வேறு மாற்று கிடையாது. எனவே இத்துறையை விட்டு தொழிற்துறைகளுக்கு வேலையாட்களாகச் செல்லலாம்.**

**இப்போது சில வினாக்கள் எழும்.**

1. **விவசாயம் இல்லையெனில் உணவு தட்டுப்பாடும் ஏற்படுமல்லவா?**

ஆம் ஏற்படும், தலித்துகளுக்கு மட்டுமா உணவுப்பிரச்சினை ஏற்படும் நாட்டில் உள்ள அனைவருக்கும் தானே, அனைவரும் மாற்று வழியைத் தேடும் போது தலித்து மக்களுக்கும் அது கிடைக்கும் அல்லவா.

1. **மாற்றாக என்ன செய்வது**

இன்று தொழிற்துறைகள் பெருகிப் போய்விட்டன. அவற்றில் படித்தவர்கள் படிக்காதவர்கள் அனைவருக்கும் வேலை வழங்கப்படுகிறது. அங்கு வேலையில் சேரலாம்.

1. **வேளாண்துறையில் இருந்து தொழிற்துறை சென்றால் என்ன லாபம்?**

நஷ்டம் இல்லை. லாபம் இல்லை எனில் ஒரு தலித் எத்தனை ஆண்டுகள் விவசாயத் துறையில் கூலியாக இருந்தாலும் அவன் கூலி தான். ஆனால் தொழிற்சாலையில் அவன் 10 ஆண்டுகள் இருந்தால் அனுபவ அடிப்படையில் வேறு பதவிக்குச் செல்கிறான். அவன் ஒரு நாள் நிச்சயமாக 10 நபர்களை வேலை வாங்கும் தலைமைத் துவத்தை அடைவான். அதான் சமத்துவம். இதைத் தான் அம்பேத்கர் விரும்பினார்.

**கிராமங்கள் ஏன் அழிய வேண்டும்**

கிராமம் சாதியத்தின் பிறப்பிடம். அங்கு என்ன தான் தலித் மக்கள் வசதியாக பொருளாதார முன்னேற்றம் பெற்றிருந்தாலும் இந்துத்துவ வாதிகளால் மதிக்கவோ சமமாக நடத்தவோ முடியவில்லை. இங்கிருந்து கல்வி நிலையங்கள் அரசு நிறுவனங்களுக்கு வரும் தலித் மக்களை அங்கு இருந்து வரும் இந்துதத்துவ வாதிகள், கிராமத்தில் பார்க்கும் அணுகுமுறைகளில் தான் பார்க்கின்றனர். இது ஒரு போதும் சமத்துவத்தைக் கொடுக்காது. எனவே கிராமங்களை அழிக்க வேண்டும். தலித் மக்கள் நகரத்தை நோக்கிப் பயணப்பட வேண்டும். அது சமத்துவத்தை வழங்க வழிவகுக்கும். இல்லையெனில் வேளாண்மையில் கூலிகளாக தலித்மக்களைப் பார்த்த இந்துத்துவ வாதிகள் அரசு ஊழியர்களாக ஆன பின்பும் அது போலவே பார்க்க வாய்ப்புள்ளது. இன்றும் அதான் நடந்து கொண்டுள்ளது.

எனவே இந்த மாற்றங்கள் வரவேண்டும். இதனைச் செய்வது கூட தலித் மக்களாகத் தான் இருக்க முடியும். வேளாண்மைத் தொழிலையும், கிராமங்களையும் அழிக்க வேண்டும் என்பது தலித் மக்கள் அதில் இருந்து தன்னை விலக்கிக் கொண்டு மாற்றத்தைத் தேடுவதைக் குறிப்பிடுகிறது இக்கட்டுரை. இது தான் அம்பேத்கரின் தலித் விடுதலையை முன் வைத்து கருத்தியலும் இன்றைய நிலைப்பாடும் அவற்றிற்கான தீர்வும்.

●

உதவிப் பேராசிரியர்,
ஒப்பிலக்கியத்துறை, தமிழியற்புலம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை - 21.

## பதினொன்றாம் உலகத் தமிழ் ஆராய்ச்சி மாநாட்டை முன்னிட்டு


# நியூ செஞ்சுரி புத்தக நிறுவனத்தின்

*வெளியாகவுள்ள*

# 9 புதிய நூல்கள்

### அடிப்படை மாற்றங்களை நோக்கி

“அடிப்படை மாற்றங்களை நோக்கி” என்ற நூல் பேரா.க.பழனித்துரை தன் 30 ஆண்டு கால களச் செயல்பாட்டு அனுபவத்தில் எழுதப்பட்டதாகும். நம் கிராமியச் சமூகத்தில் நடைபெற வேண்டிய அடிப்படை மாற்றங்களை எப்படிக் கொண்டு வருவது, அதற்கான வாய்ப்புக்கள் என்னென்ன இருக்கின்றன, அவைகளை எப்படிக் கையாள்வது, இவைகளுக்குத் தேவையான தலைமை பற்றி விளக்கப்பட்டுள்ளது. இன்றைய சூழலில் மக்களை அதிகாரப்படுத்துவதும், மேம்பாட்டுப் பணிகளில், ஆளுகைச் செயல்பாடுகளில் அவர்களை பங்கேற்க வைப்பதன் அவசியத்தையும் கவனப்படுத்தியுள்ளார்.






இன்றைய சூழலில் சமூகத்தின் அடிப்படை மாற்றங்களுக்கு மாற்றுப்பாதை, மாற்று அரசியல், மாற்றுத் தலைமை என அனைத்திலும் புதுமைகள் தேவை என்பதை சுட்டிக்காட்டி செயல்பாட்டுக்கு இளைஞர்களுக்கு வழிகாட்டியுள்ளார். கிராமியச் செயல்பாட்டில் தங்களை கரைத்துக் கொண்டு களத்தில் நிற்கும் செயல்பாட்டாளர்களுக்கு இது ஒரு அருமையான வழிகாட்டிக் கையேடு.

### தமிழகத்தில் மனிதர்கள் மற்றும் விலங்கினங்களுடனான தொடர்பு அய்ரோப்பியர்களின் விலங்கு அறிவியல் ஆராய்ச்சியும் மருத்துவ விலங்கியல் வளர்ச்சியும் 1639 - 1857

இயற்கை வரலாற்றறிவு, தமிழகக் கடற்கரை மற்றும் அட்லாண்டிக் எல்லைக்குள், 1639-1857, என்ற தலைப்பில் எஸ்.ஜெயசீலஸ்டீபன் எழுதிய ஆங்கில நூல் (9 இயல்கள், 308 பக்கங்கள், 115 ஓவியங்கள்) புதுதில்லி கல்பஸ் வெளியீடு மூலம் 2019இல் வெளி-யிடப்பட்டது. நவீன கால தொடக்கத்தின் தமிழக நிலப்பரப்பில் வரலாற்று விலங்கியல் ஆய்வின் முதல் புத்தகமான இதன் தமிழ் மொழிபெயர்ப்பே தமிழகத்தில் மனிதர்கள் மற்றும் விலங்கினங்களுடனான தொடர்பு அய்ரோப்பியர்களின் விலங்கு அறிவியல் ஆராய்ச்சியும் மருத்துவ விலங்கியல் வளர்ச்சியும் 1639 1857 எனும் தலைப்பிலான இந்நூல். இதனை புதுவை சீனு தமிழ்மணி சிறப்புற மொழிபெயர்த்துள்ளார்.

தமிழகக் கடற்கரையில் வணிகம் செய்ய வந்த ஐரோப்பியர் இங்கு வாழ்ந்த உயிரினங்கள் புதியனவாகவும் ஐரோப்பாவில் இருந்த




விலங்கினங்களைக் காட்டிலும் முற்றிலும் வேறுபட்டு இருப்பதையும் கண்டு வியந்தனர். இதனால் அவற்றைப் பற்றி கடிதங்கள் மற்றும் அறிக்கைகள் மூலம் மேல்நாட்டாருக்கு விளக்கினர். இதுவுமன்றி பெருமளவிலான வண்ணப்படங்கள் வரைந்து அனுப்பினர். இந்த நூலில் ஐரோப்பியர்களின் வருகைக்கு முன் தமிழ் உலகின் விலங்கினங்கள் பற்றியும், வருகைக்குப் பின் பறவைத் தொகுதியும் பறவையியலும் (1701-1807), பூச்சியியல் மற்றும் ஊர்வனவியல், வெளிநாட்டிலிருந்து பெறப்பட்ட ஆய்வு (1690-1853) விவரிக்கப்பட்டுள்ளது. வியப்பிற்குரிய விலங்குகளும் விலங்கியலும் (1639-1857), பாம்புவியல் மற்றும் நச்சுயியலைப் பட்டறிவு மூலம் ஐரோப்பியர்கள் கற்றல் (1701-1853), மீனியல் மற்றும் நீர்வாழ் உயிரினங்களை கூர்ந்துநோக்கல் மற்றும் அடையாளம்காணல் (1779-1853) விரிவாக அலசப்பட்டுள்ளது. ஆவணக்காப்பகங்களிலும், அருங்காட்சியகங்களிலும் - குறிப்பாக இலண்டன், பெர்லின், பாரீஸ், ஹாலே, கோபன்ஹேகன், திஹேக், செண்பகனூர், சென்னையிலுள்ள தமிழ்நாடு ஆவணக்காப்பகம், தஞ்சை சரஸ்வதி மகால், போன்ற இடங்களிலிருந்து சேகரித்து ஆராய்ந்து இந்த நூல் தயாரிக்கப்பட்டுள்ளது.

## அய்ரோப்பியர்கள் தமிழகத்திலிருந்து நடத்திய உலகாளவிய அடிமை வணிகமும் காலனிய அடிச்சுவடுகளும் 1547 - 1857

தமிழகத்திலிருந்து அய்ரோப்பியர்கள் நடத்திய உலகளாவிய அடிமை வணிகமும் காலனிய அடிச்சுவடுகளும், 1547-1792 என்ற தலைப்பில் எஸ்.ஜெயசீல ஸ்டீபன் எழுதி ஆங்கிலத்தில் வெளியான நூலின் தமிழாக்கமே அய்ரோப்பியர்கள் தமிழகத்திலிருந்து நடத்திய உலகாளவிய அடிமை வணிகமும் காலனிய அடிச்சுவடுகளும் 1547 - 1857 எனும் இந்நூல். இதனை கி. இளங்கோவன் (இயல் 1-7) மற்றும் புதுவை சீனு. தமிழ்மணி (இயல் 8-15) ஆகியோர் சிறப்பாக மொழிபெயர்ப்பு செய்துள்ளார்கள்.

இந்த நூலில் போர்ச்சுக்கீசியர்கள் தமிழகக் கடற்கரையிலிருந்து கோவா, கொச்சி, மெலாகா அச்சே மற்றும் மணிலாவிற்கு மேற்கொண்ட அடிமை வணிகம், ஸ்பானிஷ் வணிகர்கள் பசிபிக் கடல் கடந்து மெக்சிகோவிற்கு கப்பல்களில் ஏற்றி அனுப்பி விற்றது விவரிக்கப்பட்டுள்ளது. டச்சுக் கிழக்கிந்திய நிறுவனம் தமிழக அடிமைகளை வாங்கி ஜகார்த்தா, அச்சே, மெலாகா, பான்டன், மியான்மர், கேப்டவுன் மற்றும் கொழும்புக்கு கப்பல்களில் ஏற்றி அனுப்பி வணிகம் மேற்கொண்டதும், அடிமைகளின் சமூக வாழ்வியல் உண்மைகள் பற்றியும் பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது. சென்னையிலிருந்து தென்அட்லாண்டிக்கிலுள்ள புனித ஹெலினா தீவு காலனிக்கும், சுமத்ராவிலுள்ள பெங்குலுவுக்கும் அடிமைகளை ஆங்கிலக் குழுமம் ஏற்றுமதி செய்தது பற்றியும் விளக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரி மற்றும் காரைக்காலிருந்து பிரஞ்சுக்காரர்கள் மொரீஷியஸ், ரீயூனியன், கொமோரஸ் தீவுகளுக்கு நடத்திய அடிமை வணிகம் ஆய்வு செய்யப்படுகிறது. டேனிஷ்காரர்கள் ஆட்சியின் கீழ் தரங்கம்பாடியில் அடிமை முறை, மற்றும் அடிமை வணிகம் பற்றியும் தெளிவாக எடுத்துக்கூறுகிறது. தமிழகம் காலனிய ஆட்சிக்கு மாறுவது மற்றும்

அய்ரோப்பியர்கள் தமிழகத்திலிருந்து நடத்திய உலகளாவிய அடிமை வணிகத் தாக்கம் விரிவாக அலசப்பட்டுள்ளது.

## அருந்ததியர் வாழும் வரலாறு

விருதுநகர் மாவட்டத்தில் அருந்ததியர் இன மக்களோடு பணி புரிவதற்காக சென்ற ஐந்து சேசு சபைப் பணியாளர்களில் ஒருவரான மாற்கு அவர்கள் அவர்களோடு நெருங்கிப் பழகி அவர்களோடு ஆறு ஆண்டுகள் சேர்ந்து வாழ்ந்த அனுபவத்தின் அடிப்படையில் எழுதப்பட்ட நூல்தான் அருந்ததியர் வாழும் வரலாறு.

அருந்ததியர்களைப் பற்றி தமிழில் சில நாவல்கள் வந்திருந்தாலும் இந்நூல் மானுடவியல் நோக்கில் எழுதப்பட்டதாகும். அருந்ததிய மக்களின் ஏழ்மை நிலையினை ஆதிக்க சாதியினர் எவ்வாறு தங்களுக்கு சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டனர் என்பதையும் அருந்ததிய மக்கள் ஏன் துப்புரவுத் தொழிலுக்குத் தள்ளப்படடார்கள் என்பதையும் இந்நூல் கோடிட்டுக் காட்டுகிறது.

தகவலாளிகளிடம் பெற்ற தகவல்கள் அடிப்படையில் அருந்ததியர் வணங்கும் தெய்வங்களின் வாய்மொழிச் சரித்திரங்கள், குலதெய்வங்கள், அம்மன்கள் வழிபாடுகள், அவர்களின் சடங்குமுறைகள், உட்பிரிவுகள், வாழ்க்கைக் கொண்டாட்டங்கள், குலத்தொழில், விருப்பத் தொழில், ஊர் நிர்வாகம் என ஏராளமான தகவல்களை உள்ளடக்கியுள்ளது இந்நூல்.

## ஓ கனடா

என்றென்றுமே கனடா ஒரு காலனிய நாடு என்றுதான் அறியப்பட்டுள்ளது. முதலில் பிரெஞ்சுக் காலனி, பிறகு பிரிட்டிஷ் காலனி, தற்போது அமெரிக்கக் காலனி என்பர். கனடாவின் அதீத குளிரை, நிலவமைப்பை எப்போதுமே எதிர்கொண்டு கனேடியர்கள் போராடும் நிலையுள்ளது. அதுபோன்றே பிரிட்டனையும், அமெரிக்க ஒன்றியத்தையும் எதிர்த்தும் கனேடியர்கள் முதலில் போராடுவர்; காலப் போக்கில் தொலைநோக்குப் பார்வையோடு ஒத்துப்போயிடுவர். இந்தக் கனேடிய இயல்பை இந்நூல் படிப்படியான பரிணாம வளர்ச்சியாகக் காட்டுகிறது.


விரல்விட்டு எண்ணிடக்கூடிய கனேடிய அரசியல் தலைவர்களின் முயற்சியினால் 1867இல் டொமினியர் ஆஃப் கனடா பிறந்தது. அப்பொழுது ஆண்டாரியோ, கொபெக், நோவாஸ்கோசா, நியூபிரன்ஸ்வெக் மட்டுமே இணைந்திருந்தன. பரிணாம வளர்ச்சியின் காரணமாக இனறைக்கு கனடாவின் பரந்த எல்லைகள் என தெற்கே அமெரிக்க ஒன்றியமும்,




கிழக்கே அட்லாண்டிக் பெருங்கடலும், வடக்கே வடமுனையும், மேற்கே பசிபிக் பெருங்கடலும் அமெரிக்க ஒன்றியத்தின் அலாஸ்காவும் உள்ளன. இந்தப் பரிணாம வரலாற்றைத் தொடக்கம் முதல் இந்நூல் எடுத்துரைக்கிறது.

## மேற்குத் தொடர்ச்சி மலைகள்

அகத்தியர் மலை, பொதிகை மலை, மகேந்திர கிரி தொடர்கள் குற்றால மலைத்தொடர்கள், ஸ்ரீவில்லிப்புத்தூர், மேக மலைத்தொடர்கள் ஏல மலைத்தொடர்கள், பழனி மலைத்தொடர்கள் ஆனை மலைத்தொடர்கள், வெள்ளியங்கிரி மலைத்தொடர்கள், நீலகிரி மலைத்தொடர்கள் (நீலகிரி



தெற்கு) நீலகிரி (வடக்கு) மலைத்தொடர்கள் சத்தியமங்கலம் மலைத்தொடர்களில் காணப்படும் தாவரங்கள், விலங்கினங்கள், பறவைகள் குறித்த விரிவான தகவல்களைக் கொண்டுள்ள நூல்.


மேலும் அழிந்து வரும் உயிரினங்கள், முதுமலை தேசியப் பூங்காவில் பழங்குடிகள்

பல்லுயிர்ப் பெருக்கம், தமிழ்நாட்டில் மேற்குத்தொடர்ச்சி மலைகளில் சுற்றுப்புறங்களில் வாழ்ந்துவரும் பழங்குடிகள் குறித்த அரிய தகவல்களின் தொகுப்பாக இந்நூல் அமைந்துள்ளது.

## சோழர்கால நிலவுடைமைப் பின்புலத்தில் கோயில் பொருளியல்

பிற்காலச் சோழர்காலக் கோயில்கள் நிலவுடைமை நிறுவனங்களாகவும், மேலாண்மை அமைப்புகளாகவும் நாட்டின் கருவூலங்களாகவும் கலைக்கூடங்களாகவும் கல்விச் சாலைகளாகவும் மருத்துவமனைகளாகவும் கடன்தரும் வங்கிகளாகவும் வேலை தரும் அமைப்புகளாகவும் மக்களின் அன்றாட வாழ்க்கையோடு இயைந்திருந்தன.

இவ்வாறு ஒரு பெரியசமூகநிறுவனமாகவிளங்கிய சோழர் காலக் கோவில்களின் பொருளியலுக்கும், சோழர்கால நிலவுடைமைக்கும் இடையிலானஉறவை, மிக நுணுக்கமாக இந்நூல் ஆராய்கிறது.





கடினஉழைப்பின் அடிப்படையில் திரட்டப்பட்ட தரவுகளின் அடிப்படையில் இந் நூல் எழுதப்பட்டுள்ளது. அத்துடன் விவாதத்திற்குரியசில கருத்துக்களையும் முன்வைத்துள்ளது.வெற்றுப் பெருமிதம் பேசும் நிலையிலிருந்து விலகி நின்று வழிபாட்டுத்தலமாகமட்டுமின்றிப் பொருளாதாரநிறுவனமாகச் சோழர்காலக் கோவில்கள்விளங்கியதையும், சோழர்கால நிலவுடைமைக்கும் சோழர்காலக் கோவில்களுக்கும் இடையிலான பொருளாதார உறவு நிலையையும் நாம் அறிந்து கொள்ளச் செய்கிறது.

## மார்க்ஸியக் கலைச் சொற்கள்


இந்தக் கலைச்சொற்கள் தொகுப்பு மார்க்ஸ், எங்கெல்ஸ் ஆகியோரின் கருத்தாக்கங்கள், நூல்கள் ஆகியவற்றையும், அவர்களது உற்ற தோழர்களாக விளங்கியவர்கள், அவர்கள் காலத்தில் அவர்களைப் பின்பற்றிய மார்க்ஸியச் சிந்தனையாளர்கள், அவர்களது அரசியல், தத்துவ எதிரிகள் ஆகியோரைப் பற்றிய விளக்கங்கள் ஆகியனவற்றை உள்ளடக்கியுள்ளது.

## மறுவாசிப்பில் தமிழ் நாவல்கள்

தமிழில் காத்திரமான நாவல்கள் படைத்திட்ட நாவலாசிரியர்களின் படைப்புத் திறன் குறித்துப் பல்வேறு காலகட்டங்களில் எழுதப்பட்ட




விமர்சனக் கட்டுரைகள் தொகுக்கப்பட்டு, தற்பொழுது நூல் வடிவம் பெற்றுள்ளன. இந்நூலில் மாயூரம் வேதநாயகம் பிள்ளை எழுதிய பிரதாப முதலியார் சரித்திரம் தொடங்கி பதினைந்து நாவல்கள் மறுவாசிப்பிற்குள்ளாக்கப்பட்டுள்ளன. நாவலாசிரியர்கள் ப.சிங்காரம், தமிழவன், வெ. இறையன்பு, சி.எம்.முத்து, சரவணன் சந்திரன், எம்.ஜி.சுரேஷ் எழுதியுள்ள நாவல்களை முன்வைத்து எழுதப்பட்ட விரிவான கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன.



கட்டுரை

# மரபுவழி நோய்களில் இருந்து தப்பிக்க முடியுமா?

மருத்துவர் ப.வைத்திலிங்கம்

நாம் அவ்வப்போது எங்கள் குடும்பத்தில் அம்மா வழியில் அனைவருக்கும் சர்க்கரை வியாதி என்றோ, அல்லது அப்பா வழியில் எல்லோருக்கும் ஹார்ட் அட்டாக் வந்துவிடுகிறது என்றோ பிறர் சொல்வதைக் கேட்டிருக்கிறோம். மேலும் ஒரு சில பெற்றோர்கள் வித்தியாசமான உடல் அமைப்புடன் குழந்தையை மருத்துவர்களிடம் எடுத்து வந்து இம்மாதிரி ஒரு குழந்தை எங்கள் பரம்பரையில் இது வரையில் பிறந்தது இல்லை என்று சொல்வதையும் பார்க்கிறோம். அப்படியெனில் நோய்களுக்கு பரம்பரையாக வருகின்ற தன்மை இருக்கிறதா? அவைகளைத் தடுக்க முடியுமா? போன்றவை பற்றி இந்தக் கட்டுரையில் பார்ப்போம்.

மனிதன் ஆரோக்கியமாக வாழ்வதற்கும் நோய்வாய்ப்பட்டு வாழ்வதற்கும் முக்கிய காரணங்களாகக் கருதப்படுவது அவன் பெற்ற மரபணுக்களும் வாழும் சூழலும்தான். நோய்வாய்ப்படும் வாய்ப்பை உண்டு பண்ணும் மரபணுக்கள் நம்முள்ளே இருந்து சூழலும் சேரும் போது வியாதி வெளியில் தெரிய ஆரம்பிக்கிறது. இன்றைய நிலையில் சர்க்கரை நோய், இருதய

வியாதிகள், குழந்தையின்மை, உடல் பருமன், மூளை வளர்ச்சிக் குறைவு என பல பிரச்சினைகள் மரபணுக்களும் சூழலும் சேருவதன் காரணமாக வருவதாகக் கூறுகிறார்கள்.

தற்போது வரையிலும் 2300 க்கும் மேலான மரபணு வழியாக வரும் நோய்களை ஆராய்ச்சியாளர்கள் கண்டுபிடித்துள்ளனர். ஒவ்வொரு வருடமும் இது அதிகரித்துக்கொண்டே போகிறது. மனிதனின் ஆயுட்காலம் முழுவதும் வரும் நோய்களில் 25 லிருந்து 40 சதவீதம் மரபணுவோடு சம்பந்தம் உள்ளவைகள் எனக் கூறுகிறார்கள். உலக சுகாதார நிறுவனத்தின் ஒரு மதிப்பீடு வளர்ந்த நாடுகளில் பிறக்கும் குழந்தைகளில் 2 சதவீதமும் வளரும் நாடுகளில் பிறக்கும் குழந்தைகளில் 6 சதவீதமும் மரபணு சம்பந்தப்பட்ட குறைபாடுகளோடு பிறப்பதாகக் கூறுகிறது. முன்னோர்களிடம் இருந்து சொத்து வருவது போல் அவர்களின் மரபணுக்கள் மூலம் நோய்களும் வந்து சேருகின்றன.

**மரபணு, டி.என்.ஏ, குரோமோசோம் என்றால் என்ன?**

மரபணுவை (GENE) ஜீன் என்று சொல்லலாம். ஜீன் என்றால் கிரேக்க மொழியில் ஜெனெரேஷன் என்று பொருள். தமிழில் பரம்பரை என்று கொள்ளலாம். மரபுவழி என்று சொன்னால் அந்த ஜீன் மூலம் ஒருவரின் குணாதிசயங்கள் அடுத்த தலைமுறைக்கு செல்லும் முறை எனலாம்.

மரபணு என்பது ஒரு உயிரினத்தின் குணாதிசயத்தைக் கட்டுப்படுத்தும் முக்கியக் கேந்திரம். ஒவ்வொரு உயிரினத்திற்கும் இலட்சக்கணக்கான மரபணுக்கள் அந்த உயிரினத்தின் ஒவ்வொரு செல்லிலும் இருந்து கொண்டு அவைகளை ஆட்டுவிக்கின்றன. நம்மிடம் உள்ள மரபணுக்கள் அனைத்தும் நம் முன்னோர்கள் நமக்கு அளித்த உயிர்க்கொடை.

கருவில் உருவாகும் குழந்தைக்கு தாயின் கருமுட்டையில் இருந்து 50 சதமும் தகப்பனின் விந்தணுவில் இருந்து 50 சதமும் குரோமோசோம்கள் சென்றடைவதால், அவைகளில் அடங்கியுள்ள ஜீன்களும் அதே விகிதத்தில் சென்றடைகின்றன. ஒவ்வொரு மரபணுவும் புரோட்டீனின் மூலக்கூறான அமினோ அமிலங்களின் கூட்டு சேர்க்கையால் கட்டமைக்கப் பட்டுள்ளது. உடலில் உள்ள ஒவ்வொரு செல்லிலும் 20000-30000 மரபணு ஜோடிகள் உள்ளன. ஒரு ஜோடியில் உள்ள மரபணுவில் பாதி தாய் வழியாகவும், மீதி தந்தை வழியாகவும் வந்தவைகளே. ஒவ்வொரு மரபணுவும் உயிரினத்தின் ஒரு குணாதிசயத்தைக் கட்டுப்படுத்தும். இவைகள் எல்லாம் ஒன்றன் பின் ஒன்றாக சேர்ந்து சுருள் சுருளாக முறுக்கப்பட்ட கயிற்று ஏணி போல் இருக்கும். இம்மாதிரி அமைப்பை டி.என்.ஏ என்பார்கள். பல டி.என்.ஏ முறுக்கு ஏணிகள் ஒன்றாக சேர்ந்து குரோமசோம் என்ற அமைப்பு உண்டாகிறது. அனைத்து உயிரினங்களின் குணங்களுக்கும் அவைகளின் வாழ்வுக்கும் இயக்கத்திற்கும் தேவையான எல்லா சங்கேதக் குறிகளும் இங்கேதான் இருக்கின்றன. பெற்ற மரபணுக்கள் எல்லாம் நார்மல் என்றால் குழந்தையும் நார்மல். அவைகளில் ஏதேனும் மாறிய மரபணு இருந்தால், அதன் வெளிப்பாடாக உடல்நிலை அமைப்புக் கோளாறு அல்லது வியாதிகள் வெளியே தெரியலாம்.

**தன்னிச்சையான மரபணு மாற்றங்கள்**

உயிரினங்களின் உடலில் உள்ள மரபணுக்கள் என்றுமே ஒரே நிலையில் இருந்தது இல்லை. இருக்கவும் முடியாது. வாழும் சூழலுக்கேற்றவாறு எல்லா உயிரினங்களிலும் தொடர்ந்து தன்னிச்சையாகவே மரபணுவில் மாற்றங்கள் நடந்துகொண்டே இருக்கின்றன. இந்த மரபணு மாற்றம்தான் (MUTATION) இயற்கையில் உயிரினங்களின் பரிணாம வளர்ச்சியை நடத்திக்கொண்டு இருக்கிறது.

இது மனித உடலுக்குள்ளும் நடப்பதன் விளைவாகத்தான் அன்று குரங்காக இருந்தவன் இன்று நவீன மனிதன் ஆகி இருக்கிறான். மனிதர்களும் பன்முகத்தன்மையோடு உலகம் முழுவதும் பிறந்து கொண்டே இருக்கிறார்கள். இன்று இருக்கும் அனைத்து உயிரினங்களும், தாவரங்களும் அப்படித் தொடர் மரபணு மாற்றங்களால் பரிணாம வளர்ச்சியடைந்தவைகள்தான்.

மாற்றங்கள் தொடர்ந்து நிகழ்ந்தாலும் அனைத்து மாற்றங்களும் குறைபாடுகளாகவோ அல்லது நோய்களாகவோ பிரதிபலிப்பதில்லை. பரம்பரையாக வரும் மரபணுக்களில் தன்னிச்சையாகவும் சில நேரங்களில் புறச் சூழல்களால் தூண்டப்பட்டும் தன்னைத்தானே சரிசெய்ய முடியாத அளவுக்கு மாற்றங்கள் ஏற்பட்டு விடுகின்றன. அதன் விளைவாக வெளிப்படும் குணாதிசயங்களிலும் மாற்றங்கள் வருவதால் உடல் அமைப்பில் மாற்றங்கள், எளிதில் நோய்வாய்ப்படும் தன்மை போன்றவை வந்து விடுகின்றன. பரிணாம வளர்ச்சியை நடத்தும் அதே மரபணுக்களின் மாற்றம்தான் பிறவிக்கோளாறுகளையும் வியாதிகளையும் உண்டு பண்ணுகின்றன.



### தூண்டப்பட்ட மரபணு மாற்றம்

சில நேரங்களில் மரபணு மாற்றங்கள் தன்னிச்சையாக இல்லாமல் சுற்றுச் சூழலின் தூண்டுதல் காரணங்களாலும் நிகழ்கின்றன. தூண்டும் காரணங்களில் முக்கியமானவை மனிதனால் கண்டுபிடிக்கப்பட்ட கெமிக்கல்களும், உடல் செல்களைத் தாக்கும் கதிர்வீச்சும் ஆகும். கடந்த 30 ஆண்டுகளாக எக்ஸ் கதிர்வீச்சினால் செயல்படும் எக்ஸ்ரே மெஷினும், சி.டி ஸ்கேன் மெஷினும் வந்த பிறகு மரபணு மாற்றங்களினால் பிறவிக் குறைபாடுகளும் நோய்களும் அதிகமாகி விட்டதாக ஒரு ஆய்வறிக்கை சொல்லுகிறது. மாறிய மரபணுக்கள் எல்லாம் பொதுவாக மனிதனுக்கு கேடு விளைவிப்பவைதான். ஆனாலும் அவைகள் பெரும்பாலும் தன்னைத்தானே சரி செய்துகொள்ளும் தன்மையினால் நோயாக வெளிப்படுவதில்லை.

### மாறிய ஜீன்கள் அடுத்த சந்ததிக்கு எப்படிச் செல்கின்றன?

நம் உடலில் உள்ள ஒவ்வொரு செல்லிலும் 23 ஜோடி குரோமோசோம்கள் உள்ளன. அவைகளில் 22 ஜோடிகள் பொதுவான குணாதிசயங்களையும் ஒரு ஜோடி மட்டும் பாலினம் பற்றிய குணாதிசயங்களையும் (ஒரு எக்ஸ்,ஒரு ஒய்) கட்டுப்படுத்துகின்றன.

மாறிய மரபணுக்கள், தங்களின் குணத்தை வெளிப்படுத்தும் வகையைப் பொறுத்து அவைகளை இரண்டு வகையாக பிரிக்கலாம். ஒருவகை மரபணுக்களை AUTOSOMAL DOMINANT GENES அல்லது ஆதிக்கம் செலுத்தும் வகை என்று கூறலாம். இந்த மரபணு தன் இணை இல்லாமலேயே, அதாவது தன்னைப்போன்ற இன்னொரு மரபணுவுடன் (இன்னொரு பெற்றோரிடம் இருந்து வந்தது) இணையாமலேயே தனக்கான குணத்தை வெளிப்படுத்தி விடும். அதனால் பெற்றோர்களில் இருவரில் யாராவது ஒருவரிடம் இருந்து இந்த வகை மரபணு குழந்தைக்கு செல்லும்போது குழந்தை அதற்கான வெளிப்பாட்டோடு பிறக்கும்.

### இவைகளை

இன்னொரு வகையான மரபணு பின்னடங்கிய வகை. AUTOSOMAL RECESSIVE GENES என்பார்கள். இது தன்னைப்போன்ற இன்னொரு மரபணுவுடன் இணைந்தால்தான் அதன் குணத்தை வெளிப்படுத்த முடியும். அதாவது பெற்றோர்கள் இருவரின் மூலமும் இந்த மரபணு குழந்தைக்கு சென்று இருக்க வேண்டும். அப்போதுதான் அந்த மரபணுக்கு உரிய குணம் குழந்தைக்கு வெளிப்படும்.

பிறக்கும் குழந்தைக்கு செல்லும் மரபணு ஆதிக்க மரபணுவாயிருந்தால் 50 சதமும், பின்னடங்கிய மரபணுவா-யிருந்தால் 25 சதமும் அதே பிறவிக் கோளாறுகள் வருவதற்கு வாய்ப்பும் வந்து விடுகிறது. இதுபோல் பாலினம் பற்றிய குணாதிசயங்களைக் குழந்தைக்கு எடுத்துச் செல்லும் எக்ஸ் மற்றும் ஒய் குரோமோசோம்களோடு இனைக்கப்பட்டுள்ள மரபணுக்கள் மூலமும் பிறவிக் கோளாறுகளும் நோய்களும் குழந்தைக்குப் போய்ச் சேருகின்றன.

### தடுப்பதற்கு என்ன செய்யலாம்?

சில மனித வாழ்வின் அடிப்படையே அவன் பெற்ற மரபணுக்களும் வாழும் சூழலுமேதான். சூழலை தனக்கேற்றவாறு மாற்றுவதைவிடவும், சூழலுக்கேற்றவாறு மாறி வாழும்போதுதான் ஆரோக்கியமான மனித இனம்

உருவாகிறதாகச் சொல்லுகிறார்கள். ஆனாலும் இன்றைய நிலையில் வளர்ச்சி, டெக்னாலஜி என்று சொல்லி சூழலை மாற்றி விட்டோம். பிறழ் மரபணுக்களின் தாக்கம் அதிகமாகி விட்டது. அவைகளின் தாக்கம் இல்லாமல் குழந்தை பெற்றுக் கொள்ள வாய்ப்பு உள்ளதா? பிறக்கப்போகும் குழந்தைக்கு இருக்கிறதா இல்லையா என்று பரிசோதிக்க முடியுமா? இருந்தால் என்ன செய்யலாம்? போன்ற கேள்விகளுக்கு விடைகளைப் பார்ப்போம்.

### குழந்தை பெற்றுக்கொள்ளும் முன்

இரத்த சொந்தத்தில் உள்ள வயது வந்த ஆணுக்கும் பெண்ணுக்கும்

திருமணம் பற்றிய பேச்சு வரும்போது, இருவரின் முன்னோர்களின் வம்சத்தில் எவருக்கேனும் பிறவிக்கோளாறுகளோ மரபுவழி நோய்களோ இருக்கும் பட்சத்தில் அவர்களாகவே முன்வந்து தங்களுக்கு பிறழ்மரபணுக்கள் இருக்கிறதா என்று கண்டறியும் கேரியர் ஸ்கிரீனிங்க் பரிசோதனைகள் செய்து கொள்வது மிகவும் அவசியம். அதுவே இரத்த சொந்தம் இல்லாமல் திருமணம் அமையும் போது இந்த வாய்ப்புகள் அறவே இல்லை என்று சொல்லும் அளவிற்குக் குறைந்து விடுகிறது.

தீவிர பிறவிக்கோளாறு உள்ள ஆணும் பெண்ணும் திருமணம் செய்வதற்கு முன்னரே தக்க மரபுவழி ஆலோசனை பெற்ற பிறகு திருமணம் பற்றித் தீர்மானிக்க வேண்டும்.

குறைப்பிரசவம், அபார்ஷன், பிறவி ஊனம், அடிக்கடி குழந்தைகள் இறப்பு, முதல் குழந்தைக்குப் பிறவிக் கோளாறு என இருக்கும்போது அடுத்த குழந்தைக்குத் திட்டமிடும் முன்னரே ஜெனிடிக் கவுன்சலிங் தேவை.

வயதான ஆணும் பெண்ணும் (35 வயதுக்கு மேல்) குழந்தை பெற்றுக்கொள்ளத் தீர்மானிக்கும்போதும் ஜெனிடிக் கவுன்சலிங் அவசியம் தேவைப்படுகிறது. காரணம் வயதானவர்கள் குழந்தை பெற்றுக்கொள்ளும்போது டௌன்ஸ் சிண்ட்ரோம் போன்ற குரோமோசோம் கோளாறுகளுடன் குழந்தை பிறக்கும் வாய்ப்பு அதிகமாகி விடுகிறது.

**கருவுற்றபின்**

சில நேரங்களில் கருத்தரித்த பிறகும் கூட வளரும் சிசுவுக்கு பிறவிக்கோளாறுகளோ அல்லது பரம்பரை நோய்களோ இருப்பதை கண்டறியும் சோதனைகளும் தற்போது வந்து விட்டன.

கருவில் வளரும் குழந்தையின் பிளசண்டாவில் இருந்து சிறு சதையை எடுத்து CHROIONIC VILLUS SAMPLING என்ற பரிசோதனை செய்யலாம். அதுபோல கருப்பையில் உள்ள பனிக்குட நீரை (AMNIOTIC FLUID) எடுத்தும் பரிசோதனை செய்து குழந்தையின் மரபணுக்களும் குரோமோசோம்களும் நார்மலாக இருக்கின்றன என்று ஆரோக்கியம் உறுதி செய்யப்படும்போது அந்த கற்பத்தைத் தொடரலாம். இல்லையேல் தவிர்க்கலாம். குழந்தைக்கு தீங்கு விளைவிக்காத அயனியாக்கும் கதிவீச்சுக்கள் இல்லாத அல்ட்ராசவுண்ட் ஸ்கேன் மூலமும் தற்போது குழந்தையின் உருவ அமைப்பில் உள்ள கோளாறுகளும் கண்டுபிடிக்கப்பட்டு விடுகின்றன.

அயனியாக்கும் கதிர்வீச்சிலிருந்து வரும் மின் காந்த அலைகள் அதிக அளவில் உடலுக்குள் செல்லும்போது அந்த இடத்தில் நிரந்தர மரபணு மாற்றங்கள் ஏற்படுவதால் புற்றுநோய் போன்ற வியாதிகள் வர வழிவகுக்கின்றது. கதிர் வீச்சின் அளவு அதிகமானால், சேதாரமும் அதிகமாகிறது. இம்மாதிரி அயனியாக்கும் கதிர்வீச்சால்தான் எக்ஸ்ரே, சி.டி.ஸ்கேன், எம் ஆர் ஐ போன்றவை வேலை செய்கின்றன. கருவுற்ற தாய்மார்கள் மருத்துவரின் ஆலோசனையின்றி ஸ்கேன், எக்ஸ்ரே போன்றவற்றை எடுத்துக்கொள்ளக் கூடாது.

கற்பம் தரித்த முதல் மூன்று மாதங்களில் சிசுவின் உடல் உறுப்புகள் தோன்றும் காலம். இந்த மூன்று மாத காலமும் எவ்வித வைரஸ் காய்ச்சலும் வராமல் பார்த்துக் கொள்ள வேண்டும். ஃபோலிக் ஆசிட் என்னும் மாத்திரையை தாய் கற்பகாலம் முழுமையும் தினம் 400 மைக்ரோகிராம் உட்கொண்டால், பிறக்கும் குழந்தைக்கு மூளை மற்றும் தண்டுவடம் சார்ந்த பிறவிக்கோளாறுகள் தவிர்க்கப்பட்டு விடும். தங்கள் குடும்பத்தில் இம்மாதிரியான கோளாறுகள் இருக்கும் தாய் கட்டாயம் சாப்பிட வேண்டும்.

தாயின் உணவு சரிவிகித சத்துக்கள் நிறைந்ததாக இருக்க வேண்டும். மருத்துவ ஆலோசனையின்றி எவ்வித மருந்துகளையும் எடுக்கக் கூடாது. வயதுக்கும் உடலுக்கும் ஏற்றவாறு உடற்பயிற்சி செய்ய வேண்டும். மது, புகை, போதை போன்றவைகளும் மரபணு மாற்றங்களை ஏற்படுத்தும்.


**குழந்தை பெற்ற பின்**

பெரும்பாலும் எவ்வித மரபுவழி ஆலோசனையும் இல்லாமல்தான் திருமணங்கள் நடக்கின்றன. குழந்தை பிறந்தவுடன் மரபுவழி கோளாறுகளோ நோயோ தென்பட்ட பிறகுதான் ஜெனிடிக் பரிசோதனைகள் செய்ய வேண்டி உள்ளது. குழந்தை பிறந்தவுடன் இயல்பாக இருந்தால் கூட பச்சிளங் குழந்தை-யிலேயே இரத்த மாதிரிகளைப் பரிசோதித்து மரபு வழி நோய்களைக் கண்டறியும் வாய்ப்புகள் தற்போது உள்ளன. குழந்தைக்கு பிறவிக்கோளாறுகள் ஏதேனும் இருப்பதாக தெரிந்தால் அதற்கான மருத்துவ சிகிச்சையையும் ஆலோசனையையும் தொடங்க வேண்டும். குழந்தையுடன் பெற்றோர்களிருவரும் சேர்ந்து கட்டாயம் மரபணு சோதனைகள் செய்து கொள்ள வேண்டும். சோதனை முடிவுகள் அடுத்த குழந்தை பெற்றுக் கொள்வது பற்றித் தீர்மானிக்க உதவலாம்.

●

கட்டுரையாளர், குழந்தை மருத்துவ நிபுணர்.

கட்டுரை



# தமிழவன்: கதைகளின் மையத்தைத் தகர்த்த கதைஞன்

சுப்பிரமணி இரமேஷ்

தமிழில் கோட்பாட்டு ஆய்வாளர்களில் முக்கியமானவர் தமிழவன். 'அமைப்பியல்' என்ற கோட்பாட்டைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியவர். இவர் புனைகதைகளிலும் தொடர்ந்து இயங்கி வருகிறார். தனித்துவமான நாவல் பிரதிகளைத் தமிழுக்கு அளித்திருக்கிறார். 'தமிழவன் கதைகள் *(1992)*', 'இரட்டைச் சொற்கள் *(2011)*', 'நடனக்காரியான 35 வயது எழுத்தாளர் *(2015)*', 'கருஞ்சிவப்பு ஈசல்கள் *(2022)*' ஆகிய சிறுகதைத் தொகுப்புகளும் வெளியாகியுள்ளன. தற்போதுவரை ஏழு நாவல்களும் நான்கு சிறுகதைத் தொகுப்புகளும் இவரது புனைவிலக்கியப் பங்களிப்புகள். ஆனாலும் தமிழவன் கோட்பாட்டு ஆய்வாளராகவும் அ-புனைவு எழுத்தாளராகவுமே கருதப்படுகிறார். அ-புனைவு சார்ந்த தமிழவனின் நூல்கள், இவரைப் புனைகதையாளர் என்ற மையத்திலிருந்து தகர்த்துக்கொண்டே இருக்கின்றன. சக விமர்சகர்களும் படைப்பாளிகளும்கூட இவரது அ-புனைவு எழுத்துகளுக்கே கூடுதல் கவனம் கொடுத்திருக்கின்றனர். எஸ்.ராமகிருஷ்ணன் தொகுத்த 'நூறு சிறந்த சிறுகதைகள்' என்ற தொகுப்பில் தமிழவன் கதைகளுக்கு இடமளிக்கப்படவில்லை. ஆனால் வீ.அரசு தொகுத்துள்ள 'இருபதாம் நூற்றாண்டுச் சிறுகதைகள் நூறு' என்ற தொகுப்பில் 'காரல் மார்க்சும் தாணு ஆசாரியும்' என்ற இவரது சிறுகதை இடம்பெற்றுள்ளது. இரு தொகுப்பாளருக்குமுள்ள அரசியலைப் புரிந்துகொள்ள இயல்கிறது. இவரது புனைவுகளை விமர்சகர்கள் வாசித்த அளவுக்குக்கூட

படைப்பாளிகள் வாசிக்கவில்லை என்று கருத இடமிருக்கிறது. இவரது கதைகளின் ஒட்டுமொத்தத் தன்மை குறித்தும் புரிந்துகொள்வதிலுள்ள சிக்கல்கள் குறித்தும் இக்கட்டுரை உரையாடுகிறது.

தமிழில் புனைவு, அ-புனைவு என இரு தளங்களிலுமே பல படைப்பாளர்கள் செயல்பட்டுள்ளனர். அந்த வரிசையில் தமிழவனையும் நிறுத்த வேண்டும். மரபான கதை புனையும் தன்மையிலிருந்து இவர் புனைவுகள் வேறுபடுகின்றன. அதனாலாவது இவரது புனைவுகள் தொடர்ந்து வாசிக்கப்பட வேண்டும்; விமர்சிக்கப்பட வேண்டும். நவீன இலக்கியத்தைப் படிப்பவர்களின் எண்ணிக்கை மிகக் குறைவு; அதில், இவரைப்போன்று கோட்பாடு, தத்துவம் சார்ந்த புனைவெழுத்தாளர்களது படைப்புகளை வாசிப்பவர்களின் எண்ணிக்கை வெகு சொற்பம். வெகுசன வாசிப்பில் தமிழவனின் கதைகளைப் புரிந்துகொள்வதில் சில சிக்கல்கள் உள்ளன. ஈராயிரம் ஆண்டுகட்கு முற்பட்ட சங்கச் செய்யுட்களில் பயன்படுத்தப்பட்டுள்ள பல சொற்கள் தற்போது அந்நியமாகிவிட்டன. அதனைப் புரிந்துகொள்ள உரை தேவைப்படுகிறது. உரையின் உதவி இல்லாமல் சங்க கவிதைகளை வாசிப்பவர்களுக்குப் புகைமூட்டமான ஒரு பொருள் பிடிபடுவதை உணரலாம். அதனைப் போன்றதுதான் தமிழவன் கதைகளும்.

தமிழவன் மரபை மீளுருவாக்கம் செய்து புனைவுகளை எழுதுகிறார்; கடந்த கால வரலாற்றின் துணுக்குகளைத் தம் நினைவுகளினூடாகக் கதைகளாக்க முயன்றிருக்கிறார். இந்தப் புரிதல் தமிழவனின் கதைகளை அணுக உதவும் என்று கருதுகிறேன். மேலும், தன்னிருப்பை ஒடுக்கிக்கொண்டு இலக்கியத்தின் புதிய முயற்சிகளுக்குத் தமிழ்ச் சூழலில் இடத்தை உருவாக்கிக் கொடுத்தவர் தமிழவன் எனலாம். அவரால் மிக எளிமையாகவும் வழமையான கதைசொல்லிகளைப் போலவும் எழுத முடியும். அதனூடாகத் தம் புனைவுகளுக்குத் தேவையான அங்கீகாரத்தைப் பெற்றிருக்க முடியும். ஆனால் தமிழவனால் அப்படிச் செய்ய முடியாது. அதனால்தான் தமிழ் இலக்கியத்தின் மாற்றுக் குரலாக இவரது படைப்புகள் அறிஞர்களால் மதிப்பிடப்படுகின்றன. தம் புனைவுகளின் வழியாக உலக இலக்கியத்தின் வாசலைத் திறந்துவிட நினைக்கிறார். இதன் காரணமாகவே‘உலகத் தரத்தில் தமிழ்ச் சிறுகதைகள்’ என்ற அறைகூவலை இவரால் விடமுடிகிறது. முப்பதாண்டுகளுக்கும் மேலாகத் தமிழவன் சிறுகதைகளை எழுதி வருகிறார். இவர் எழுதியது மிகக் குறைவுதான். தமிழவனின் நூற்பட்டியலைப் பார்க்கும்போது இவரே அ-புனைவுக்குத்தான் முக்கியத்துவம் கொடுத்திருக்கிறார் என்பது விளங்கும். இவர் புனைவில் செய்ததெல்லாம் சோதனை முயற்சிகள்தாம். இவரது புனைவுகளின் முக்கியத்துவம் தற்போது உணரப்படாமல் இருக்கலாம்; யதார்த்தவாதச் சிறுகதைகளின்மீது சலிப்புற்று மாய யதார்த்தப் புனைவுகளுக்குத் தமிழ்ச் சமூகம் திரும்பும்போது இவரது கதைகளின் செல்வாக்கு கூடும்; மீள் வாசிப்புக்கு உட்படுத்தப்படும்.

நவீன கோட்பாடுகளில் ஆர்வமும் மொழி மீதான கூர்ந்த அவதானிப்பும் இருப்பவர்களுக்குத் தமிழவன் கதைகள் முக்கியமானதாகப் படலாம். பிறர், இவர் கதைகளை வாசிக்காமலேயே இவரது கதைகள் குறித்துத் தமிழ்ச் சூழலில் ஏற்கனவே உருவாக்கப்பட்டுள்ள கற்பிதங்களின் வழியாகக் கடந்து விடுகின்றனர். நவீன கவிதைகளைப் புரிந்துகொள்ளலுக்குக் கொடுக்கும் மெனக்கெடலை இவரது கதைகளுக்கும் கொடுக்க வேண்டும். தமிழவன் தம் கதைகளில் சில குறியீடுகளை உருவாக்கிக் கொள்கிறார். அந்தக் குறியீடுகள் குறித்துத் தம் நேர்காணல்களில் விரிவாகவே பேசியிருக்கிறார். இவரது கதைகள் அகவயத் தன்மை வாய்ந்தவை. தமிழவனின் வாழ்க்கைப் பயணத்தைத் தொடர்ச்சியாக அவதானிப்பவர்களுக்கு இவர் கதைகள் அணுக்கமாக இருக்கும். தமிழ்த் தேசியம், மார்க்சியம், இந்தி எதிர்ப்பு, காலனிய கால நினைவுகள், ஈழப்போர் ஆகியன பல புனைவுகளில் குறியீடுகளாகப் பதிவாகியிருக்கின்றன. ஈழப்போரின் உச்சம் இவரது கதைகளை வெகுவாக பாதித்திருக்கிறது எனலாம். வார்ஸா நிலப்பரப்பு குறித்து வெளிப்படையாகவும் நிலக்குறியீடாக்கியும் பல புனைவுகளை எழுதியிருக்கிறார். இத்தகைய குறிப்பான்கள் அனைத்தும் இவரது புனைவுகளைப் புரிந்துகொள்ள உதவும் ஊடிழைகள். இந்த நுட்பத்தை வாசகர்கள் கண்டடையும்போது ஒவ்வொரு கதையும் அவர்களது அரசியலுக்கேற்ப மனத்திரையில் புரளுவதை உணரலாம்.

தமிழவன் சிறுகதைகள் எதற்கும் மையமும் இல்லை; கதையும் இல்லை. வெவ்வேறு உதிரி நிகழ்வுகளின் தொகுப்புகள்தாம் இவரது கதைகள். இதனை இவரது கதைகளின் பொதுத்தன்மையாகக் கூறலாம். கதைகளில் வரும் எந்தக் கதாபாத்திரத்தையும் அக்கதையின் மையமாகக் கருத முடியாது. அதேபோன்று கதையையும் வரையறுத்துக் கூற இயலாது. ‘சிறுகதை என்பது ஒரேயொரு பாத்திரத்தின் நடவடிக்கைகளைப் பற்றியோ, ஒரு தனிச்சம்பவத்தைப் பற்றியோ அல்லது ஒரு தனி உணர்ச்சிதரும் விளைவையோ எடுத்துக்கூறும் இலக்கியவடிவம்’ என்று திறனாய்வாளர் பிராண்டர் மாத்தியூஸ் கூறியுள்ளார். ஆனால் மையம் சார்ந்த வாசிப்பைப் பின்நவீனத்துவம் முழுமையாகப் புறக்கணிக்கிறது. தமிழவன் கதைகளையும் இந்தக் கோட்பாட்டின்

அளவீடுகளுக்குள் வைத்துதான் மதிப்பிட வேண்டும். வாசகன் ஒரு கதாபாத்திரத்தை மையம் என்று கருதுவது அவனது வாசிப்பின் சுதந்திரத்துக்கு உட்பட்டது. வேறொரு வாசகர் அந்தக் கதையில் மையமே இல்லை என்று நிறுவுவதற்கும் பிரதி இடமளிக்கும். பிரதியின் மையத்தைச் சிதைத்தலை ஓர் உத்தியாகவே தமிழவன் செய்து பார்த்திருக்கிறார்.

படைப்பிற்கும் படைப்பாளிக்குமான உறவைத் துண்டித்தலில் அமைப்பியல் கோட்பாடு முக்கிய பங்கு வகிக்கிறது. இக்கோட்பாடு தனக்கு முன்பிருந்த மரபிற்கு முக்கியத்துவம் கொடுக்கிறது. இதனைத் தமிழவனின் கதைகளுக்கும் பொருத்திப் பார்க்கலாம். ஏற்கனவே சொற்களுக்கு இருக்கக்கூடிய அர்த்தத்தைத்தான் தமிழவன் தம் கதைகளுக்குப் பயன்படுத்திக் கொள்கிறார். அந்த அர்த்தத்தை நோக்கி வாசகன் நகர வேண்டும். 'எதையும் தொடர்ச்சியாக யோசிப்பதுதான் இந்தச் சமூகத்தில் நடந்துள்ள விபரீதங்களுக்கான அடிப்படைக் காரணம்' என்று (கருஞ்சிவப்பு ஈசல்கள்) ஒரு கதையில் கதைசொல்லி பேசுகிறார். இவரது கதைகளைப் புரிந்துகொள்ள தடையாக இருப்பதும் இதுதான். முழுமை என்கிற கருத்தோட்டத்துடன் தமிழவன் கதைகள் முரண்படுகின்றன. முழுமை என்பது ஒரு கற்பிதம். வெவ்வேறு சிதைவுகளின் ஒருங்கிணைவுதான் முழுமை. இதனைக் கதைகளினூடாக நிறுவுகிறார் தமிழவன்.

தமிழவன் சிறுகதைகளின் தன்மைகளைப் புரிந்துகொள்ள 'கருஞ்சிவப்பு ஈசல்கள்' என்ற கதையை உதாரணமாக எடுத்துக் கொள்வோம். இக்கதை, வெவ்வேறு நினைவுகளின் தொகுப்பாகவே எழுதப்பட்டிருக்கிறது. கதையின் கதாபாத்திரங்கள் எவற்றுக்கும் பெயர்களில்லை. அவன், அவள் என்ற படர்க்கை விளிகள்தாம். கதைக்குத் தொடக்கமும் முடிவுமில்லை. எந்த இடத்தில் தொடங்கியும் இக்கதையை வாசிக்கலாம். பிரதியில் அதற்கு இடமிருக்கிறது. இக்கதையின் ஆண் கதாபாத்திரமொன்று நினைத்துப் பார்க்கும் சம்பவங்கள் உதிரி உதிரியாக இடம்பெற்றுள்ளன. யதார்த்தமும் நினைவும் ஒன்றுக்கொன்று ஊடாடிக்கொள்கின்றன.கதையில் காட்டப்படும் நிலமும் குறிப்புகளாகவே உள்ளன. மொழி தெரியாத நகரம்; ட்ராம் வண்டி. இவைதான் நிலத்திற்கான குறிப்புகள். ஆங்காங்கே பிரதியில் வெளிப்படும் இத்தகைய குறிப்புகளைக் கொண்டே முழு கதையை வாசிப்பவர்கள் கற்பிதம் செய்துகொள்ள வேண்டும். காலம் சார்ந்தும் இக்கதையில் குறிப்புகள் உள்ளன. 'பக்கத்துத் தீவில் தனது மொழிபேசும் மக்களுக்கு ஒரு தனித்தேசம் வேண்டுமென்று கேட்ட பிரபாகரனைக் கொன்றார்கள்' என்றொரு இடம் வருகிறது. இது இக்கதைக்குத் தொடர்பில்லாதது. இந்தக் கதைக்கும் இந்த வரிக்கும் தொடர்பை ஏற்படுத்துவது 'ஆல்பிரட் துரையப்பா' என்ற பெயர். இவர் விடுதலைப் புலிகளால் சுட்டுக் கொல்லப்பட்டவர். இந்த வரலாறு தெரியவில்லையெனில் புனைவு வாசகருக்கு அந்நியப்பட்டு நிற்கும். தமிழவனின் புனைவுகள் கடந்த காலத்தின் வரலாற்றைக் கிடைக்கும் சந்தர்ப்பங்களில் எல்லாம் பேசுகின்றன.

இந்தக் கதையில் இடம்பெற்றுள்ள ஆண் கதாபாத்திரம்பற்றி ஓரளவு குறிப்புகள் உள்ளன. அவன் நிலம் பெயர்ந்ததற்கான காரணம் சொல்லப்படுகிறது. ஆனால் அவனுடன் தங்கியிருக்கும் பெண் பற்றிய விவரங்களைப் புனைவு பகிர்ந்து கொள்ளவில்லை. அவன் அழைத்தவுடன் அவள் வந்துவிடுகிறாள். 'திரும்ப இந்த ஊருக்கு வரக்கூடாது' என்கிறாள். அவளைப் பற்றிப் புனைவு உருவாக்கியிருக்கும் மௌனம் அவனது வாழ்க்கையைவிடப் புதிர் நிரம்பியது. இருவருக்குள்ளும் பிடிப்பும் இல்லை; ஈர்ப்பும் இல்லை. ஆனால் இணைந்திருக்கிறார்கள். இதற்குரிய காரணத்தையெல்லாம் வாசிப்பவர்கள்தாம் அனுமானித்துக்கொள்ள வேண்டும். அதற்கான குறிப்புகள் பிரதியில் உண்டு. இக்கதையில் பல நிகழ்வுகளுக்குத் தொடர்ச்சி இல்லை. 'தலைவர் ஜெயித்து விட்டார். இனி ஏழைகள் என்று இந்த நாட்டில் யாரும் இருக்க மாட்டார்கள்' என்கிறான் ஒருவன். அவன் யார்; அவன் குறிப்பிடும் தலைவர் யார் என்பதெல்லாம் அனுமானங்கள். 'கருஞ் சிவப்பு ஈசல்கள் அவளுடைய இதயப் பூவிலிருந்து பறந்தன' என்ற படிமத்தைப் பயன்படுத்தியிருக்கிறார் தமிழவன். மரபு மற்றும் நவீனக் கவிதைகளுக்குரிய அத்தனை உத்திகளையும் தமிழவன் தம் புனைவுகளில் பயன்படுத்தியிருக்கிறார்.

தமிழில் வெகுசன இதழ்களின் ஆதிக்கம் இன்றுவரை தொடர்கிறது. இவ்விதழ்கள் பெண்களை முன்னிறுத்தியே தங்களுக்கான உள்ளடக்கங்களை அமைத்துக்கொண்டன. அவர்களை அந்த அளவிலேயே வைத்துக்கொள்ள இதழ்களும் விரும்பின. இதனால் காத்திரமான வாசிப்பு மரபு தமிழில் காலதாமதமாகவே உருவானது. சிறுபத்திரிகைகள்தாம் இந்தப் போக்கை மாற்ற முயன்றன. ஆனாலும் இம்முயற்சி முழுவெற்றியில் முடிந்ததாகக் கூற முடியவில்லை. மரபிலிருந்தும் மரபான வாசிப்பிலிருந்தும் தமிழ் வாசகர்களை விடுவிப்பது சவாலாகவே இருக்கிறது. வெகுசன வாசிப்புக்குத் தங்களை ஒப்புக்கொடுத்தவர்களுக்குத் தமிழவன் போன்றவர்களின் கதைகள் பெரிய தொந்தரவாக இருந்ததாகவும் கருதலாம். நவீன

இலக்கியப் புரிதல் இருப்பவர்களுக்குக்கூட தமிழவன் கதைகளை வாசிப்பதிலும் விமர்சிப்பதிலும் ஒரு தயக்கம் இருப்பதாகவே நினைக்கிறேன்.

கதைசொல்லியின் கூற்றுமுறையிலேயே தமிழவன் கதைகளை எழுதியுள்ளார். தொடக்கம், வளர்ச்சி, திருப்பம், வீழ்ச்சி, முடிவு போன்ற வழமையான சிறுகதைகளுக்குரிய தன்மைகள் இவர் கதைகளில் இல்லை. அனுமானிக்க முடியாத அளவுக்கு இவரது புனைவுகள் உள்மடிப்புகளைக் கொண்டிருக்கின்றன. ஒவ்வொரு உரையாடலுக்குப் பின்னும் பெரிய மௌனத்தைப் பிரதி ஏற்படுத்துகிறது. 'எந்த நாணயமும் வாங்காமல் குமார் எழுந்து புறப்பட்டான்' என்றொரு கதை (பழைய நாணய விற்பனை) முடிகிறது. அவன் ஏன் எழுந்துபோனான் என்பதற்கான விவரணைகள் பிரதிக்குள் இல்லை. ஆனால் சில குறிப்பான்கள் உள்ளன. இந்தக் குறிப்பான்களைக் கொண்டுதான் வாசகர்கள் பிரதியின் வெளியை நிரப்பிக்கொள்ள வேண்டும். இவரது கதைகள் ஒவ்வொரு வாசிப்பிலும் தன்னைப் புதுப்பித்துக்கொள்வது இத்தகைய குறிப்பான்கள் மூலம்தான். ஏனெனில், காலம் குறிப்பான்களுக்கு ஒரே அர்த்தத்தைத் தருவதில்லை. ஒவ்வொரு சிறுகதையும் ஒரு கதையைக் கூறுவதைப் போன்ற பாவனையை உண்டாக்கினாலும் அது உண்மையிலேயே கதையல்ல; அதுவொரு ஒழுங்கற்ற வரைபடம்; அல்லது நவீன ஓவியத்தின் வண்ணத் தெறிப்புகள். நவீன ஓவியங்களில் அதனைப் புரிந்துகொள்வதற்கான கூறுகள் ஆங்காங்கே தென்படும். அந்தக் கூறுகளில் இருந்து பார்வையாளர்கள் முழுமையை தருவித்துக் கொள்கின்றனர்.அந்த முழுமைக்கும் படைப்பாளனுக்கும் தொடர்பில்லை. இப்படித்தான் தமிழவனின் சிறுகதைகளைப் புரிந்துகொள்ள வேண்டியுள்ளது.

ஒவ்வொரு வாக்கியத்தின் முடிவிலும் வாசகன் பங்கேற்பதற்கான வெளியைத் தமிழவன் உருவாக்கி வைத்திருக்கிறார். ஒரு சிறந்த இலக்கியப் படைப்பு வெவ்வேறு அர்த்தங்களைத் தொடர்ந்து உருவாக்கிக்கொண்டே இருக்கும் என்று பின் அமைப்பியல் கூறுகிறது. இவரது கதைகள் இதற்குத் தகுதியானவையாகவே உள்ளன. தமிழவனின் சிறுகதைகளை வாசிக்க விரும்புபவர்கள் அவரது 'நடனக்காரியான 35 வயது எழுத்தாளர்' என்ற குறுங்கதைகள் அடங்கிய தொகுப்பிலிருந்து தொடங்கலாம் என்பது என் பரிந்துரை. வெகுசன இதழ்களில் வாசகக் கிளர்ச்சிக்காக எழுதப்பட்ட குறுங்கதைகளைக் காத்திரமான வடிவமாக மாற்றியதில் தமிழவனுக்கும் பங்கிருக்கிறது. இவரது சிறுகதைகள் வாசிப்பில் ஏற்படுத்தும் விகசிப்பைக் குறுங்கதைகளும் ஏற்படுத்துகின்றன. நவீன கவிதைகளுக்குரிய அத்தனை உள்ளாழங்களும் இக்கதைகளும் கொண்டிருக்கின்றன. சமயம், தத்துவம், கோட்பாடு, வரலாறு என ஒவ்வொரு கதையும் உரையாடுவதற்கான வெவ்வேறு உருவங்களைக் கொண்டவை.

'உங்களுக்குப் பாரம்பரியம் இல்லையென்பது உண்மையா?' என்ற குறுங்கதை ஏற்படுத்தும் திறப்பு முக்கியமானது. இக்கதை தொன்மம் குறித்த கதையாடலை மறுபரிசீலனை செய்திருக்கிறது. தமிழரின் தொன்மம் என்பது யாருடைய தொன்மம்; மூன்று தலைமுறைக்குமேல் வரலாற்றுப் பிரக்ஞையில்லாத நாம்தான் ஈராயிரம் ஆண்டுகால தொன்மத்துக்கு உரியவர்கள் என்று உரிமை கொண்டாடிக் கொண்டிருக்கிறோம் என்ற கேள்வியுடன் இக்கதை முடிகிறது.'நீ புரிந்துகொள்வாய் இறுதியாக' என்ற கதையும் இருநாட்டுக் கலாச்சாரத்தின் இடைவெளிகள்மீது ஒரு வாசிப்பை நிகழ்த்தியிருக்கிறது. இக்கதையின் ராஜாவுக்கும் அன்னாவுக்கும் இடையில் இரு நிலத்தின் பண்பாட்டு வேர்கள் இடையீடு செய்கின்றன. இருவருக்குமிடையே என்னவெல்லாம் நடந்திருக்கும் என்பதை வாசிப்பவர்கள்தாம் அனுமானித்துக்கொள்ள வேண்டும். அதாவது அந்தப் பிரதியைத் தங்கள் பிரதியாக வாசித்துக்கொள்ள வேண்டும். 'மூவரும் மௌனமானார்கள்' என்ற கதையின் அர்த்தத்தையும் வாசகர்கள்தாம் உற்பத்தி செய்துகொள்ள வேண்டும். இப்புனைவிற்குள் செயல்படும் ஒழுங்கின்மை அர்த்தத்தைத் தள்ளிப்போடுகிறது. கணவன் - மனைவி, குழந்தை, நண்பர் என்ற நான்கு கதாபாத்திரங்களின் அசைவுகளும் வெவ்வேறு புரிதலுக்கு அழைத்துச் செல்கின்றன. மெய்யப்பனும் செல்வராஜுஂம் ஒரே அலுவலகத்தில் பணிபுரிபவர்கள். மெய்யப்பன் மனைவி ஸ்நேகா. இவளும் அதே அலுவலகத்தில் பணிபுரிய வாய்ப்பிருக்கிறது; செல்வராஜுக்கும் இவளுக்கும் இடையில் தொடர்பிருக்கலாம் போன்ற அனுமானங்களைப் பிரதி ஏற்படுத்துகிறது. பிரதி - வாசகன் - வாசிப்பு என்ற மூன்றுமே பின் அமைப்பியலுக்கு முக்கியமானவை. தமிழவனின் பல சிறுகதைகள் இப்படித்தான் இருக்கின்றன.

தமிழவன் தம் புனைவுகளில் பழைய தொன்மங்கள், நவீனக் கோட்பாடுகள், தத்துவங்கள், வரலாறுகளைத் தொடர்ந்து காலனிய ஆட்சியில் நிகழ்ந்ததாகச் சில கதைகளை எழுதியிருக்கிறார். 'மணிக்கூண்டுகளுக்கிடையில் நடந்த ஒரு வழக்கு', 'கைகள் வெட்டப்பட்ட அனார்க்கிஸ்ட்', 'தூத்துக்குடியில் ஒரு கொலை' உள்ளிட்ட கதைகளை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். ஈழப்போரின் துயரத்தையும் வெவ்வேறு பிரதிகளாக எழுதிப் பார்த்திருக்கிறார். உதிரி உதிரியான உரையாடல்களினூடாக அப்போரின் முழுமையைக் கட்டமைக்க முயன்றிருக்கிறார். 'தலைவன்' என்ற சிறுகதை வெளிப்படையாகவே பிரபாகரனைச் சுட்டுகிறது. தமிழ்த் தேசியம் என்ற கற்பிதம்

ஈழப்போரின்போது துண்டு துண்டாக உடைந்து போனதை நுண்ணுணர்வுடன் எழுதியிருக்கிறார். பிரபாகரன், நவீன காலத்தில் வாழ்ந்து தன் நிலத்திற்காக உயிர்விட்ட தலைவன்; அவனே தொல்குடிச் சமூகத்தின் நீட்சி. அவனையும் அவன் நிலத்தையும் நாம் முற்றாகக் கைவிட்டதன் மூலமாகத் தமிழ்த் தேசியம் என்ற அடையாளத்தைத் துண்டித்துக் கொண்டோம்; அல்லது அரசியல் தேவைகளுக்காக அதனைத் தக்கவைத்துக் கொண்டிருக்கிறோம். மொழி நம் சிந்தனையையும் ஒன்றிணைக்கவில்லை; நிலத்தையும் ஒன்றிணைக்கவில்லை என்ற கேள்வியைத் தமிழவன் தம் புனைவுகளின் வழியாக முன்வைக்கிறார்.

எந்தக் கதையும் நேரடியான கதைசொல்லல் உத்தியில் எழுதப்படவில்லை. இரண்டு முரணான கதாபாத்திரங்களை உருவாக்கி, அவர்களுக்கிடையிலான உரையாடலாகவே கதையை வளர்த்துச் சென்றிருக்கிறார். ‘காந்தி லிபி’ என்ற புனைவும் காந்தி பற்றிய மேலதிக தகவல்களை வாசகர்களிடம் பகிரும் கதையாக உருப்பெற்றிருக்கிறது. இது புனைவு என்பதைக் கடந்து காந்தியின் தன்வரலாற்றுடன் நெருக்கமான உரையாடலை நிகழ்த்துகிறது.பிரபாகரன், காந்தி ஆகிய இருவருக்கிடையிலான இறப்பின் மர்மங்கள் குறித்த தகவல்களை அகவயத் தன்மையுடன் இரு புனைவுகளிலும் எழுதியுள்ளார் தமிழவன். அடுத்து, கிறித்தவ மதத்தின் போதாமைகளையும் கிறித்தவ மிஷனரிகளின் செயல்பாடுகளையும் இவர் கடுமையாக விமர்சனம் செய்திருக்கிறார். ஆங்கிலேயர் ஆட்சியே பரவாயில்லை என்ற குரலும் இவரது புனைவுகளில் ஆங்காங்கே ஒலிக்கின்றன.

தமிழவன் தம் புனைவுகளுக்குள் பல குரல்களைப் பேச விட்டிருக்கிறார். இதனால்தான் பிரதி ஒன்றிலிருந்து பலவாகப் பெருகியிருக்கிறது. தம் கதைகளைத் தாமே விமர்சனம் செய்துகொள்ளும் தன்மையையும் பிரதிகளில் காண முடிகிறது. கனவும் யதார்த்தமும் ஒன்றுடன் ஒன்று மயங்கிக் கிடக்கின்றன. கதையின் முழுமையைத் திட்டமிட்டுச்சிதைக்கிறது இவரது மொழி. முழுமைக்கிடையில் பல்வேறு குறுக்கீடுகளை ஏற்படுத்திச் சிந்தனையைத் திசை திருப்பி விடுகிறார். சிந்தனையை அறுத்தலை இவரது புனைவுகள் ஒரு கலகச் செயல்பாடாகவே செய்கின்றன. புனைவின் அடுத்தடுத்த நகர்வை வாசகன் அனுமானிக்கும்போது, கதைசொல்லி புனைவை அந்த இடத்திலேயே நிறுத்தி விடுகிறார்.

தமிழவன் கதைகள், தமிழ்ப் புனைகதை வரலாற்றில் உணர்ச்சிக்கான இடத்தை மறுத்து அதனை அறிவுக்கான இடமாக மாற்றிக் கொண்டது. மனிதப் பிரக்ஞையின் நுண்ணடுக்குகளை புனைவுகளில் சோதித்துப் பார்க்கும் இத்தன்மை தமிழுக்குப் புதிது. நம்மொழி ஒரே காலகட்டத்தில் வெவ்வேறு தன்மைகளுடன் அறிஞர்களால் கையாளப்பட்டிருக்கிறது. சங்கச் செய்யுட்களில் பதிற்றுப்பத்தும் குறுந்தொகையும் ஒரே காலகட்டத்தைச் சார்ந்தவை என்கின்றனர். ஆனால் மொழி அமைப்பில் இரண்டும் வெவ்வேறு தன்மையில் அமைந்திருப்பதைக் காணலாம். குறுந்தொகையிலுள்ள கபிலரின் பாடல்கள் வாசிப்பதற்கு எளிமையாக உள்ளன. ஆனால் அவரது பதிற்றுப்பத்துப் பாடல்களைப் புரிந்துகொள்ள கடும் முயற்சி செய்ய வேண்டியிருக்கிறது. இதனைப் பரணரின் பாடல்களுடனும் ஒப்பிட்டுப் பார்க்கலாம். இத்தகைய வேறுபாட்டைப் புரிந்துகொண்டவர்களுக்குத் தமிழவனின் கதைகளைப் புரிந்துகொள்வதில் தடையிருக்காது எனக் கருதலாம்.

வாசகருக்குத் தமிழவன் கதைகள் கொஞ்சம் உழைப்பைக் கோருகின்றன. புனைவாசிரியனின் பிரக்ஞையைத் தொட பிரதியுடன் வாசகன் ஊடுருவ வேண்டும். ஆற்றங்கரையில் நின்று நீரை வேடிக்கை பார்ப்பவருக்குத் தமிழவன் சிறுகதைகள் எந்த ஆச்சரியத்தையும் அளிக்காது. வேடிக்கைப் பார்ப்பவர்களால் ஆற்றின் முழுமையை உணர முடியாது. இவரது புனைவுகள் சொல்வதைவிட சொல்லாமல் கடந்து செல்வதே அதிகம். பிரதியின் மௌனம் வாசிப்பவரின் அரசியலுடன் தன்னை இணைத்துக்கொள்கிறது. தமிழவன் சிறுகதைகள், *Non-linear writing* என்று சொல்லப்படும் நேரற்ற விவரணையால் ஆனது. அதனால் தொடர்ச்சி இருக்காது. ‘அமெரிக்க, ஐரோப்பிய இலக்கியத்தோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது தமிழில் போதிய அளவு பின் நவீனக் கதையாடல்கள் எழுதப்படவில்லை என்றே சொல்லவேண்டும். அதற்குக் காரணம் தமிழில் பின் நவீனத்துவம் உரிய வரவேற்பைப் பெறவில்லை என்பதாக இருக்கலாம். தவிரவும், பின் நவீனத்துவம் தமிழில் சரியானபடி புரிந்து கொள்ளப்படாமையே என்று சொல்லத் தோன்றுகிறது’ (பின் நவீனத்துவச் சிறுகதைகள்) என்று எம்.ஜி.சுரேஷ் குறிப்பிடுகிறார். அந்நிலை இன்றும் மாறிவிட்டதாகக் கருதவில்லை.

தமிழவன் கதைகளை வாசிக்கும்போது மனம் அடையும் கிளர்ச்சி முக்கியமானது. இவர், பிரதியிலிருந்து அர்த்தத்தை வெளியேற்றியிருக்கிறார்; அதாவது பிரதியை ஒற்றைத் தன்மையிலிருந்து பன்முகத் தன்மைக்கு நகர்த்தி விட்டிருக்கிறார். இதனால் பிரதி வாசிப்பவருக்குப் பல்வேறு யூகங்களை உருவாக்குகிறது. வாசகருக்குத் தமிழவனின் புனைவுகள் அளிக்கும் சுதந்திரம் முக்கியமானது.சங்கச் செய்யுளைப் போன்றும் நவீனக் கவிதையைப் போன்றும் இவரது கதைகளை எந்தவித எதிர்பார்ப்புமின்றி வாசிக்க வேண்டும்.அப்போதுதான் தமிழ் இலக்கிய வரலாற்றின் தொன்மொழியை இவரது கதைகளில் கேட்க முடியும்.

●

கட்டுரையாளர், எழுத்தாளர் சென்னை பட்டாபிராம் டி.ஆர்.பி.சி.சி.சி. இந்துக் கல்லூரி தமிழ்த்துறை உதவிப்பேராசிரியர்



கட்டுரை

# சாகித்திய அகாதமியின் பாஷா சம்மான் விருது

சாகித்திய அகாதமியில் 1996 ஆம் ஆண்டு பாஷா சம்மான் விருது நிறுவப்பட்டது, இந்த விருது, குறிப்பிட்ட மொழிகளின் பரவல், நவீனமயமாக்கல் அல்லது செழுமைப்படுத்துவதில் நல்ல பங்களிப்பைச் செய்த எழுத்தாளர்கள், அறிஞர்கள், ஆசிரியர்கள், கலைஞர்கள் அல்லது மொழிபெயர்ப்பாளர்களுக்கு வழங்கப்படுகிறது. படைப்பிலக்கியச் சாகித்திய அகாதமி விருது வழங்கப்படுவது போன்று, பாஷா சம்மான் விருதுக்கும் ரூபாய் 1,00,000 விருதுத்தொகையாக வழங்கப்படுகிறது. ஒவ்வொரு ஆண்டும் பல்வேறு மொழிகளைச் சேர்ந்த நான்கு அறிஞர்களுக்கு பாஷா சம்மான் விருது வழங்கப்படுகின்றது. இந்த விருது இரண்டு பெரும் வகைப்பாட்டிற்குரியது. அவை:

1) இந்திய அரசால் அங்கீகரிக்கப்பட்ட 24 மொழிகளின் செம்மொழி மற்றும் இடைக்கால இலக்கியத் துறையில் பங்காற்றிய அறிஞர்களுக்கு இரண்டு பாஷா சம்மான் விருதுகள் வழங்கப்படுகின்றன.
2) அங்கீகரிக்கப்படாத இந்தியமொழிகளின் எழுத்தாளர்கள் அல்லது அறிஞர்களை ஊக்கப்படுத்தும் வகையில் இரண்டு பாஷா சம்மான் விருதுகள் வழங்கப்படுகின்றன.

இந்த நான்கு விருதுகளும் எல்லா மொழிகளைச் சேர்ந்த அறிஞர்களும் பெறுவதற்கு ஏற்ப இந்திய மொழிகள் அனைத்தும் கிழக்குப் பகுதிக்குரியவை, மேற்குப் பகுதிக்குரியவை, வடக்குப் பகுதிக்குரியவை, தெற்குப் பகுதிக்குரியவை எனப் பகுக்கப்பட்டுள்ளன.குறிப்பிட்ட ஓராண்டில் கிழக்கு - மேற்குப் பகுதிகளுக்குரிய மொழிகள் விருதுக்கு உரியனவாகக் கருதப்பட்டால் அடுத்த ஆண்டில் வடக்கு - தெற்குப் பகுதிக்குரிய மொழிகள் விருதுக்கு உரியனவாகக் கருதப்படுகின்றன. இவற்றில் வடக்கு - தெற்குப் பிரிவில் தெற்குப் பகுதிக்குரிய மொழிகளாகத் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் ஆகிய நான்கு மொழிகளும் உள்ளன. ஆக, இந்த தெற்குப் பகுதி மொழிக்குரிய அறிஞர்கள் ஓராண்டு இடைவெளியில் விருதுபெறும் வாய்ப்பைப் பெறுகின்றனர். அதிலும் தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம் எனும் நான்கு மொழிகளுக்கான போட்டியில் சில ஆண்டு இடைவெளியில்தான் தமிழறிஞருக்கு விருது கிடைக்கிறது.

தற்போது, குடியரசுத் தலைவரால் நியமிக்கப்பட்ட மூவர் கொண்ட நடுவர்குழு, தமிழறிஞர் பேராசிரியர் அ.தட்சிணாமூர்த்தி அவர்களை பாஷா சம்மான் விருதுக்குரியவராகத் தெரிவுசெய்துள்ளது.

இந்த விருது, புதுதில்லியில் கடந்த மார்ச்சு மாதம் நிகழ்ந்த சாகித்திய அகாதமி விருதளிப்பு விழாவில் வழங்கப்படுவதாக இருந்தது. ஆனால், பேரா அ.தட்சிணாமூர்த்தி அவர்கள் தம்முடைய உடல்நலக் குறைவால் நேரில் புதுதில்லி வந்து விருதுபெற இயலாத நிலையில், விருதைச் சாகித்திய அகாதமி தமிழ்மொழி ஒருங்கிணைப்பாளர் பேராசிரியர் இரா. தாமோதரன்(அறவேந்தன்) மற்றும் ஆலோசனைக்குழு உறுப்பினர் பேராசிரியர் உ அலிபாவா பேராசிரியரின் மாணவர்கள் அனைவரும் சேர்ந்து 07 மே 2023 அன்று ஐயாவிடம் ஒப்படைத்துப் பாராட்டி மகிழ்ந்தனர். இநத நிகழ்வின்போது சாகித்திய அகடாமியின் செயலர் முனைவர் சீனிவாசராவ் அவர்கள் புதுதில்லியில் இருந்து தொலைபேசிவழிப் பேராசிரியர் அ.தட்சிணாமூர்த்தி அவர்களைத் தொடர்புகொண்டு பாராட்டி மகிழ்ந்தார்கள்.

●

## உங்கள் நூலகம் சந்தாதாரர்களுக்கு ஒரு வேண்டுகோள்!



**உங்கள் நூலகம் சந்தாவினைப் புதுப்பிக்காதவர்கள் தொடர்ந்து உங்கள் நூலகம் இதழினைப் பெற புதுப்பித்துக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்**

**உங்கள் நூலகம்**
**நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட்.,**
**41-பி, சிட்கோ இண்டஸ்டிரியல் எஸ்டேட்,**
**அம்பத்தூர், சென்னை - 600 050.**
**தொலைபேசி எண் : 044-26251968, 26258410**

### ஜூன் மாதத்துடன் முடிவடையும் சந்தாதாரர்களின் ரசீது எண்கள்


| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1869, | 500 | 3935 | 2782 | 2781 | 4394 | 5675 | 528 | 539 | 1875 |
| 1870, | 6802 | 7966 | 2783 | 7652 | 5455 | 4400 | 529 | 540 | 961 |
| 7662 | 2551 | 7653 | 2784 | 7658 | 5454 | 2787 | 530 | 198 | 3832 |
| 7664 | 8806 | 5677 | 2785 | 7659 | 8792 | 2788 | 531 | 1509 | 8797 |
| 2789 | 3931 | 3936 | 194 | 7656 | 4396 | 6801 | 532 | 1510 | 4718 |
| 6803 | 2786 | 1860 | 195 | 7657 | 1859 | 2552 | 533 | 1511 | 8558 |
| 2790 | 5678 | 4398 | 196 | 7660 | 5452 | 2553 | 534 | 5457 | 962 |
| 1871 | 886 | 1121 | 7651 | 7661 | 7407 | 2554 | 535 | 2966 | 2811 |
| 2423 | 1852 | 8851 | 2809 | 7654 | 7408 | 5678 | 536 | 2791 | 1512 |
| 8795 | 7663 | 8852 | 2779 | 7655 | 2810 | 526 | 537 | 2792 | 1513 |
| 8796 | 4397 | 4399 | 2780 | 4395 | 5456 | 527 | 538 | 1874 | |

தனி இதழ் ₹ **45.00**
ஆண்டு சந்தா ₹ **540.00**
மாணவர்களுக்கு ₹ **500.00**,
ஆயுள் சந்தா ₹ **5400.00**
அயல்நாடு (ஆண்டு சந்தா) ₹ **4050.00**
*சந்தாத் தொகையை*
New Century Reader's Sangam
Central Bank of India
Ambattur Branch, Chennai - 600 050
A/c.No. 1035249018
IFSC Code : CBIN0282161
*என்ற வங்கிக் கணக்கில் செலுத்தலாம்.*

### கிளைகள்

அம்பத்தூர் 044 - 2635 9906, ஸ்பென்ஸர் பிளாசா 044-28490027, மதுரை 0452 - 2344106, 4374106, திருநெல்வேலி 0462 - 2323990, 4210990, திண்டுக்கல் 0451-2432172, கோயம்புத்தூர் 0422 2380554, சேலம் 0427-2450817, ஈரோடு 0424-2256667, கிருஷ்ணகிரி 04343-234387, ஓசூர் 04344 - 245726, ஊட்டி 0423 - 2441743 திருச்சி 0431 - 2700885, தஞ்சாவூர் 04362-231371, புதுக்கோட்டை 04322-227773, விழுப்புரம் 04146-227800, பாண்டிச்சேரி 0413 2280101, வேலூர் 0416-2234495, நாகர்கோவில் 04652 - 234990.

## என்.சி.பி.எச் சிறுநூல் வரிசையில்...




₹ 45/-

# இராமலிங்கர்
## ஆழமும் அகலமும்


முனைவர் **இரா.சத்தியமூர்த்தி**


இராமலிங்க வள்ளலார் தமிழ்ச் சமூகத்திற்கும் இவ்வுலகிற்கும் இயற்கை அளித்த அருட்கொடை. அவரது சிந்தனைகள் புரட்சிகரமானவை. சமூக நீதி, சமத்துவம், சகோதரத்துவம், மனிதநேயம், உயிர் ஒருமை முதலியவற்றை மையப்படுத்தி ஒளிர்பவை.

மொழி, வழிபாடு, மருத்துவம், தொண்டு, சமத்துவம், பொதுமை சமூக உணர்வு என வள்ளலாரின் கோட்பாடுகள் மற்றும் செயல் பாடுகளை அடுக்கிக்கொண்டே போகலாம். பெருமானின் உபதேசப் பகுதியும் கடைசி வார்த்தைகளும் நமக்கு இன்றைய சூழலில் மிக அவசியமாகிறது. அதன் விளைவே இச்சிறுநூல்.

கட்டுரை







# நீட்டலும் மழித்தலும்

முனைவர் நா.சுலோசனா

சங்க இலக்கியத்திலுள்ள அணல் எனும் சொல்லுக்குத் 'தாடி' என்று பொருள். மை அணல் என்றால் கருமையான, கருத்த தாடி என்பதாகும். அணல் என்பது சங்க காலத்தில் தாடியைக் குறித்தாலும் இன்றைக்கு இச்சொல் பயன்பாட்டில் இல்லை என்றே கருத முடிகிறது. 'தாடி' என்பதே வழக்கத்தில் இருக்கிறது. இன்று நாம் அழகின் அடையாளமாகவும் வருத்தத்தின், இழப்பின் குறியீடாகவும் தாடியைப் பார்க்க முடிகிறது. ஒவ்வொரு தாடிக்கும் ஒரு கதை உண்டு.

தலையிலும் முகத்திலும் முடிவளர்த்துக் கொள்வதும் மழித்துக் கொள்வதும் வழக்கம் என்பது சங்க காலந்தொட்டே இருக்கிறது.

'மழித்தலும் நீட்டலும்' எனத் திருவள்ளுவர் கூறுவதிலிருந்து அறியமுடிகிறது. மழித்தல் என்னும் வினையினால் தலைமயிர் என்னும் செயப்படுபொருள் உணரப்படும் என்கிறார் தேவநேயப் பாவாணர்.

மழித்தல் என்பதற்கு வழக்கில் சவரம் எனப்படுகிறது. (முகச் சவரம், தலைச் சவரம், சவரத் தொழிலாளி, சவரக் கத்தி) முகம் மழித்தல் என்பதும் வழக்கிலிருக்கிறது. பிளேடை பாவலரேறு பெருஞ்சித்திரனார் 'மழிதகடு' என்றே சொல்கிறார்.

**அணல் என்பதன் பொருள்:**

அணல் என்பதற்கு கழுத்து, மேல்வாய்ப்புறம், கீழ்வாய்ப்புறம், மிடறு, தாடி, அலைதாடி எனப் பல பொருள் படுகிறது.

'அணல்' என்னும் சொல்லைக் குறிக்க மேல்வாய்ப்புறம், உண்மிடறு எனப் பிங்கல நிகண்டு குறிக்கிறது.

'அலைதாடி' என்பது மாட்டுக் கழுத்தின் கீழ்ப்புறம் தொங்கும் தோலைக் குறிக்கிறது. அதாவது தசையைக் குறிக்கிறது.

'கீழ்வாய்ப்புறம்' எனத் திவாகரம் நிகண்டு குறிக்கிறது.

'அணல்' என்பதற்கு 'மிடறு', 'உண்மிடறு' என்று சூடாமணி நிகண்டு, பிங்கல நிகண்டு, கயாதரம் நிகண்டு, நாமதீபம் பொருள் தருகிறது.

**மை அணல்: இளமையும் அடையாளமும்:**

சங்க இலக்கியம் தாடியை 'அணல்' என்று குறிப்பிடுகிறது. சங்கப் பாடல்களில் உடன்போக்கு சென்ற தலைவி, எப்படிப்பட்ட ஆண்மகனுடன் சென்றிருக்கிறாள் என்பதைக் குறிக்கும்போது அவள் வீரமுள்ள ஆண்மகனுடன்தான் சென்றாள் என்பதற்கு 'மை அணல் காளை' என்று தலைவனை அடையாளப்படுத்துகிறது. ஆண்மையின் அடையாளமாகத் தாடி விளங்குகிறது.

**"எருத்து வலிய எறுழ் நோக்கு இரலை**
**மருப்பின் திரிந்து மறிந்து வீழ் தாடி"**

பாலை நிலத்தில் வழிப்பறி செய்வோரின் தாடி இரலை மானின் தாடியைப் போன்று இருந்ததைக் கலித்தொகை 15ஆவது பாடல் சுட்டுகிறது. இப்பாடலில் தாடி என்றே வந்துள்ளது.

"புலி போத்து அன்ன புல் அணல் காளை" (பெரும்பாண்.138) ஆண்புலியைப் போன்ற புல்லென்ற தாடியையுடைய தலைவன் என்பது பொருளாகும். இங்கே அணல் என்பது தாடியைச் சுட்டுகிறது.

**"உள் இறைக் குரீஇக் கார் அணல் சேவல்" (நற்றிணை.181)**

இப்பாடலடியிலுள்ள 'அணல்' என்னும் சொல் கழுத்தைக் குறிப்பிடுகிறது.

''கறைஅணற் குறும்பூழ்'' (பெரும்பாண்.205) இப்பாடலடியிலும் அணல் என்பது கழுத்தைக் குறிப்பிடுகிறது.

**"மனை உறை கோழி அணல் தாழ்பு அன்ன" (அகம்;187)**

என்று கோழியின் தாழ் மயிரையும்

**"வைவால் ஓதி மை அணல்" (அகம்;125)**

என்று ஓந்தியின் தாடியையும் குறிப்பிடுவதை அறியமுடிகிறது.

**"நிலம் தூங்கு அணல் வீங்கு முலைச் செருத்தல்" (குறுந்;344)**

இப்பாடலடி ஆவினத்தின் கழுத்தில் தொங்கும் தோலை 'அணல்' எனும் சொல்லால் குறிப்பிடுகிறது. அதாவது அலை தாடியைக் குறிப்பிடுகிறது.

சங்கப் பாடல்கள் மனிதர்களின் தாடியை மட்டும் குறிப்பிடாமல் கோழி, சேவல், ஓந்தி, குரங்கு ஆகியவற்றின் தாழ் கழுத்து மயிரையும் 'அணல்' என்றே குறிப்பிடுகிறது.

**"திருந்து இழைமுன்கை அணல் அசைத்து ஊன்றி**
**இருந்து அணை மீது பொருந்துழிக் கிடக்கை" (அகம்;351)**

இங்கே அணல் என்பது தாவாயைச் சுட்டுகிறது.

**"மதி உடம்பட்ட மை அணற்காளை**
**வாங்கு சினை மலிந்த திரள் அரை மராஅத்து" (அகம்; 221)**

இளந்தாடி கொண்ட தலைவன் என்பதைச் சுட்டுகிறது.

**"அடிபுனை தொடுகழல் மை அணல் காளைக்கு என்**
**தொடி கழித்திடுதல் யான் யாய் அஞ்சுவலே" (புறம்; 83)**

கழல் அணிந்த கால்களையும் கருநிறத் தாடியையுமுடைய காளைபோன்ற நற்கிள்ளி மேல் நான்கொண்ட காதலால் என் கை வளைகள் கழல்கின்றன. ஆகவே நான் காதல்கொண்ட செய்தி என் தாய்க்குத் தெரிந்துவிடுமோ என்று அஞ்சுகிறேன் என்ற நக்கண்ணையார் பாடலில் கருநிறத் தாடி என்பது இளமையையும் ஆண்மையையும் புலப்படுத்துவதாக அமைகிறது.

முகத்தில் புல் போல தாடி இருக்கிறதே அதை மழிக்க வேண்டியதுதானே என்று இன்று சொல்கிறோமே, அதைப்போல புறநானூற்றுப் பாடலில் ஒரு வீரனுக்குப் புற்களைப்போல தாடி இருந்ததை

**"புலம் புக்கனனே! புல் அணல் காளை"**
**(புறம்; 28)**

என்று இப்பாடலடி சுட்டுகிறது.

**"மை அணற் காளையொடு பைய இயலி"**
**(ஐங்; 389)**

**"மை அணற் காளை பொய் புகலா**
**அருஞ்சுரம் இறந்தனள் என்ப" (நற்.179)**

**"மை அணல் எருத்தின் முன்பின் தடக்கை**

வல்வில் அம்பின் எய்யா வண்மகிழ்த்
தந்தை தண் ஊர் இதுவே" (நற்.198)

'அணல்' என்றால் தாடி. மை அணல் என்றால் கருமையான தாடியைக் குறிக்கிறது. 'மை அணல்' என்று வரும் பாடலடிகள் எல்லாம் தலைவனின் இளமையையும் ஆண்மையையும் உணர்த்துகிறது. கருந்தாடி ஆண்மை, வீரம், வலிமை, பெருமிதம், மகிழ்ச்சி, கம்பீரம், துக்கம் ஆகியவற்றின் அடையாளமாக விளங்குகிறது.

தாடி என்பது வருத்தத்தின் அடையாளமாகவும் குறிக்கப் பெறுகிறது. ஒருவரை அடையாளப்படுத்தும் விடயமாகவும் இருக்கிறது. ஆனால் இன்றைய காலத்தில் தாடியை விரும்பும் ஆண்பிள்ளைகளையும், தாடி வைத்த ஆண்மகனை விரும்பும் பெண்பிள்ளைகளையும் பார்க்கமுடிகிறது. தாடி என்பது இன்று தன் அழகுக்காக வைத்துக்கொள்கிறார்கள். தற்காலத்தில் விதவிதமான தாடிகளை வைத்துக்கொள்கின்றனர். தாடி வைக்க விரும்புவோர் அதிகம் வளரவிடாமல் நேர்த்தியாக அழகை மெருகூட்டிக் கொள்கின்றனர். அதை *'trim'* பண்ணுவது என்கிறார்கள். இந்த வழக்கம் சங்க காலத்திலும் இருந்திருக்கிறது.

"குச்சின் நிரைத்த குரூஉ மயிர் மோவாய்
செவி இறந்த தாழ்தரும் கவுளன்" (புறம்; 257)

தலைவன் குறுந்தாடி வைத்திருந்ததையும் காதுகளை மறைக்கும் அளவு தலைமுடி வளர்ந்திருந்ததையும் இப்பாடலடி குறிப்பிடுகிறது.

"திரை அணல் கொடுங்கவுள் நிறைய முக்கி" (நற்;22)

என்பதில் 'அணல்' எனும் சொல் மோவாயைக் குறிக்கிறது.

ஆக சங்கப் பாடல்களில் 'அணல்' எனும் சொல் தாடி, அலைதாடி, கழுத்து என்னும் பல பொருளைக் குறிக்கும் சொற்களாக உள்ளன.

மனைவி நிறைமாத கர்ப்பிணியாக இருந்தால் ஆண்கள் தாடி வளர்ப்பது வழக்கம், மனைவியை இழந்தவர் தாடி வைப்பது, காதல் நிறைவேறவில்லை என்றால் எனப் பல வகைக் காரணங்களால் ஆண்கள் தாடி வளர்க்கிறார்கள் எனக் கி.ரா.வும் 'கோபல்ல கிராமத்தில்' தாடி குறித்து பதிவு செய்திருக்கிறார்.

**தொண்டு செய்து பழுத்த பழத்தின் தூய தாடி:**

காரல் மார்க்ஸ் -அடர்த்தியான தாடி , இரவீந்தரநாத் தாகூர் - நீண்ட தாடி. இன்னும் பலருடைய தாடிகள் அவர்களை அடையாளப்படுத்தும் விதமாக உள்ளது.

தவக்கோலம் பூண்டவர்கள், சித்தர்கள், ஞானிகள், தத்துவவியலாளர்கள், சிந்தனைவாதிகள், கருத்தியலாளர்கள், அறிவியலாளர்கள் தாடி வைத்திருப்பர். ஆனால் இன்றோ தாடி வைத்துக் கொள்வதற்குப் பல காரணங்கள் இருக்கின்றன.

"தொண்டு செய்து பழுத்த பழம்
தூய தாடி மார்பில் விழும்
மண்டைச் சுரப்பை உலகு தொழும்
மனக் குகையில் சிறுத்தை எழும்
அவர்தாம் பெரியார்"

என்றார் புரட்சிக் கவிஞர் பாரதிதாசன். பெரியார் என்றாலே நினைவுக்கு வருவது அவருடைய தாடியும், கைத்தடியும்தான். நமக்கு வேண்டியவர் யாராவது தாடி வைத்திருந்தால் அவர் எதற்கு வைத்திருக்கிறார் என்று கேட்கத் தோன்றும். அப்படித்தான் பெரியாரின் தாடி குறித்து பெரியாரின் நண்பர்களிடையே விவாதம் எழுந்துள்ளது.

"அய்யா தாடி வளர்ப்பது ஏன்? என்று அவருடைய நண்பர்கள் ஒருவருக்கொருவர் கேட்டுக்கொண்டபொழுது ஒவ்வொருவரிடமும் ஒவ்வொருவிதமாக பெரியார் சொன்னதாகப் பேச்சு வருகிறது.

முக அழகுக்காக தாடி வளர்ப்பதாக என்னிடம் சொன்னார் என்றாராம் மாயவரம் நடராசன் அவர்கள்.

ரஷ்ய அறிஞர்கள் எல்லோரும் தாடி வைத்துள்ளனர். அவர்களைப் பார்த்தபின் வைத்தேன் என்று என்னிடம் கூறினாரே என்றாராம் எஸ்.வி.லிங்கம் அவர்கள்.

சவரச் செலவு தினமும் நாலணா மிச்சமாகிறது என்றாரே என்னிடம் என்றாராம் மூவலூர் இராமாமிர்தம் அம்மையார்.

கொஞ்ச நேரம் என்றாலும் இன்னொருவரிடம் தலைகுனிந்து உட்காருவது தன்மானக் கேடாக உள்ளது என்றாரே என்னிடம். இது பட்டுக்கோட்டை அழகிரி அவர்கள்.

மேடைஏறி பலரைத் தாக்கித் திட்டும்போது, போனால் போகிறான் கிழவன், வயதானவன் என்று விட்டுவிடுவார்கள் என்று சொன்னாரே என்னிடம். இது பூவாளூர் பொன்னம்பலனார்.

ஆளுக்கு ஒன்றாக பெரியாரின் தாடியைப் பற்றி விவாதிக்கும்பொழுது முத்தமிழ்க் காவலர் கி.ஆ.பெ. விசுவநாதம் அவர்கள் தூங்குங்கள் நாளை உங்களுக்கு உண்மையான காரணத்தை பெரியாரிடமே கேட்டுச் சொல்கிறேன் என்றாராம்.

உள்ளபடியே தந்தை பெரியார், தினமும் பத்து நிமிடம் வீதம் மாதம் 300 நிமிடங்கள் வீணாகிறதே. பல நல்ல காரியங்களை இந்த நேரத்தில் செய்யலாமே என்று நினைத்து விட்டேன். வேறெதும் காரணமில்லை என்று கூறியதாக அனைவரிடமும் கூறினாராம். அதைக்கேட்டு அனைவரும் சிரித்திருக்கிறார்கள்.

ஒருமுறை ரயில் நிலையத்திலிருந்து வந்தபோது எதிரில் வந்த ஒருவர் பெரியாரைப் பார்த்து நீங்கள் ஏன் தாடி வைத்துள்ளீர்கள் என்று கேட்டபோது, 'எனக்கு பிளேடு செலவு மிச்சம், உனக்கு என்ன நஷ்டம்' என்று கூறினாராம். இது தந்தை பெரியாரின் தாடி குறித்த நிலைப்பாடு.

**நாவிதர்களின் அடையாளங்களும் வழக்காறுகளும்**

நடைமுறையில் முடிவெட்டவும், சவரம் செய்தலையும் செய்யும் நாவிதர்கள் 16 ஆம் நூற்றாண்டில் பல்கலைக் கழகத்தில் அறுவை மருத்துவர்களாகவும், அறுவை மருத்துவர்களுக்கு முன்னோடிகளாகவும் இருந்தனர் எனும்போது வியப்பே மிஞ்சுகிறது. காலங்காலமாகச் சிற்றூர்களில் காடு கரைகளில் வேலை செய்யும் உழைப்பாளிகள் என யாராக இருந்தாலும் காலில் முள் குத்திவிட்டால் அதை எடுக்க முடியாத நிலையில் நாவிதரை நாடுவது வழக்கம். அவர் எளிதாக எடுத்துவிடுவார். இது நாவிதர்கள் அறுவை மருத்துவத்தின் முன்னோடிகள் என்பதைக் காட்டுகிறது.

தமிழர்களின் வாழ்வியலோடு கூடிய சடங்கு முறைகளில் முக்கிய பங்கும் அங்கமும் வகிப்பவர்கள் அருந்ததியர், வண்ணார், நாவிதர் சமூகத்தினர் ஆவர். தமிழில் அம்பட்டையர், அம்பட்டர், நாவிதர், நாசுவர், பண்டிதர், பண்டுவர், மருத்துவர், பரியாரி, குடிமகன், சவரக்காரர், முடி ஒப்பனையாளர், கிராமணி, ஏனாதி எனப் பல பெயர்கள் உண்டு. தெலுங்கு பேசும் நாவிதர்கள் மங்களா என்றும் மலையாளத்தில் வேலக்கட்டல நாயர் என்றும் அழைக்கப்படுகின்றனர். இதையே பார்பர் என அழைக்கும் வழக்கும் உள்ளது. ஆனால், சமூகம் இவர்களைப் பார்வையிலிருந்துகூட தள்ளியே வைத்திருப்பது சமூக அவலம். நகரமயமாதல், நாகரீகமயமாதல், உலகமயமாதல் சூழலில் நாவிதர்கள் தங்களின் அடையாளங்களை இழந்து வருகின்றனர். இன்றைய சூழலில் நகர்ப்புறங்களில் முடிதிருத்தகம்(சலூன் கடை), சிகை அலங்கார நிலையம்(பார்பர் ஷாப்) வைத்திருப்போர் நாவிதர்களின் அடையாளங்களாக இருக்கின்றனர். இது சாதிய பிம்பத்தை உடைத்துவிடுகிறது. குலத்தொழில் மாறி எத்தொழிலையும் செய்யும் நிலை உருவாகியிருப்பது வரவேற்கத்தக்கது.

முடி வெட்டப் போகிறேன், சவரம் செய்யப் போகிறேன், சேவிங் பண்ணப் போகிறேன் என்றவர்கள் இன்று 'ஹேர் டிரஸ்சிங்' செய்யப் போகிறேன்' என்று சொல்வதுதான் நாகரிக மொழி என்று சொல்லிக் கொள்கிறார்கள்.

மனிதன் உயிரோடு இருக்கும்வரைதான் இந்தச் சாதியப் பாகுபாடு. எவ்வளவு பெரிய ஆண்ட பரம்பரையாக இருந்தாலும் இறந்தபின் சாம்பலாகும் வரை உடனிருப்பது உறவுகளைவிட இவர்கள்தான். கத்தி, கத்தரிக்கோல், சீப்பு, சிறு கிண்ணம் இவற்றை மூலதனமாகவும், கம்மாக்கரை மேட்டுப்பகுதி, ஆல மரத்தடி, புளிய மரத்தடி இவற்றை முகவரியாகவும், காதில் கத்தி, அல்லது சீப்பையும் கையில் ஒரு பையையும் வைத்திருப்பதை அடையாளமாகவும் கொண்ட நாவிதர்கள் இன்னும் நகரமயமாதலைக் காணாத கிராமங்களில் தங்களைத் தக்க வைத்துக்கொண்டுதான் இருக்கிறார்கள் என்றாலும் வாழ்வாதாரம் தேடி வேறு வேலைக்கும் செல்கின்றனர்.

"திருப்பதி அம்பட்டன் சிரைத்த மாதிரி"

"செரைக்கிற வேலைக்குப் போறவன் கத்திய மறந்திட்டுப் போன கதையா"

என்று நாவிதர்களைத் தொடர்புபடுத்தி பேச்சு வழக்கில் ஒருசில வழக்காறுகளை அறியமுடிகிறது.

வீட்டைவிட்டு வெளியே போகும்போது நாவிதர்கள் வந்தால் கெட்ட சகுனமாகப் பார்க்கும் சமூகத்தை என்ன சொல்லி திருத்துவது. எப்போதும் அக்கம் பக்கத்தாரிடம் சண்டை சச்சரவோடு நல்ல உறவுநிலை இல்லாத சூழலுக்கு "எதுத்த வீடு ஏகாலி (வண்ணார்) வீடு, அடுத்த வீடு அம்பட்டையன் (நாவிதர்) வீடு " என்று சொல்லுவார்கள். இவர்களை மனிதர்களாகப் பார்க்க விரும்பாத சமூகம். நம்மைப் பார்த்து நாமே முகம் சுழிக்கும் மனநிலையிலும்கூட எந்தவொரு முகச் சலனமும் காட்டாமல் நம்மை அழகாக்கிக் காட்டுவதோடு மட்டுமில்லாமல் நம் வாழ்வியலோடு பிணைந்த இம்மக்களின் வரலாற்றை அறியாத சமூகம்தான் தீண்டத்தகாத கீழ்ச்சமூகமாகும்.

எழுத்தாளர் முத்துநாகுவின் 'சுளுந்தீ' நாவல் நாவிதர்களின் சமூக நிலையைப் பிரதிபலிக்கிறது. 'ஆதி மருத்துவர் சவரத் தொழிலாளராக்கப்பட்ட வரலாறு', க.வீரபாண்டியனின் 'சலூன்' நாவல், தேவி பாரதியின் 'நீர்வழிப்படூஉம்' நாவல், நாவிதர்கள் குறித்த கட்டுரைகள் விளிம்புநிலை மக்களின் பாடுகள், அவர்களின் சமூக நிலைப்பாடு, அவர்களின் வாழ்வியல், வாழ்வியல் சிக்கல்களைத் தீர்க்கும் வழிகள் என அனைத்தையும் பொதிந்த படைப்புகள் அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தமிழ் படைப்புச் சூழலில் வெளிவந்த வண்ணமிருக்கின்றன. மனித வாழ்வியலை அழகாக்கும் நாவிதர்கள் குறித்து ஆராய்வதற்கு வரலாற்றில் நிறைய களங்கள் உண்டு என்பது தெளிவாகிறது.

●

கட்டுரையாளர், உதவிப் பேராசிரியர்,

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை - 113.

கட்டுரை



# தொல்காப்பியமும் வரருசி இலக்கணமும்:
## ஓர் அறிமுகம்

ஆ.கார்த்திகேயன்

தொல்காப்பியரும் வரருசியும் இந்திய மரபில் புகழ்பெற்ற இலக்கண ஆசிரியர்கள். தொல்காப்பியர் படைத்த நூல் அவரது பெயராலே தொல்காப்பியம் என வழங்குகிறது. வரருசி பிராகிருத மொழிக்கு இலக்கணம் எழுதினார். அ வரது இலக்கணம் பிராகிருதப் பிரகாசிகை என்று அறியப்படுகிறது. மேலும் வரருசியின் சூத்திரங்கள் *(Sutras of Vararuchi)* என்றும் பிராகிருத சூத்திரங்கள் *(Sutras of Prakrit)* என்றும் அறியப்படுகின்றது. அவர்கள் படைத்த இலக்கணங்கள் இன்று வரை அந்தந்த மொழிகளுக்கு முதன்மையான, பழமையான நூல்களாகத் திகழ்கின்றன. பலராலும் பலகாலும் கற்பிக்கப்பட்டும் கற்கப்பட்டும் வருகின்றன. இரு இலக்கணங்களுக்கும் உரைகள் உள்ளன. வரருசிக்குப் பாமகர் எழுதிய மனோரமா என்ற உரை பிரசித்தி பெற்றது. பிராகிருத இலக்கணங்கள் அனைத்தும் சமஸ்கிருதத்தில் இயற்றப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. தொல். இலக்கணத்தின் தாக்கம் பிற்கால இலக்கணங்களில் இருந்தது போலவே வரருசி இலக்கணத்தின் தாக்கம் பிற்காலத்தில் எழுதப்பட்ட இலக்கணங்களில் இருந்தது. இரு நூல்களும் அரசர்களின் ஆதரவில் *(Royal patronage)*

எழுந்தவை.தொல்காப்பியம் நிலதரு திருவின் பாண்டியன் அவைக்களத்து அரங்கேறியதென்றால் வரருசி விக்ரமாதித்தன் அரசவையை அலங்கரித்த நவரத்தினங்களில் ஒருவராகத் திகழ்ந்தார்.அச்சபையில் பிராகிருதப் பிகாசிகை அரங்கேறியது. வரருசியின் இலக்கணம் கி.பி நான்காம் நூற்றாண்டில் தோன்றியதாகவும் அந்நூலுள் தென்னிந்தியாவைப் பற்றிய குறிப்பு இருப்பதாகவும் தெ.பொ.மீ. குறிப்பிடுவார். தொல்காப்பியரின் காலம் கிமு ஐந்தாம் நூற்றாண்டு என்றும் கிபி ஐந்தாம் நூற்றாண்டு என்றும் கூறுவர்.மேலும் சிலர் இடைப்பட்ட காலத்தில் வளர்ந்த இலக்கணம் என்றும் உரைப்பர்.

**அதிகார, இயல் அமைப்பு:**

தொல். இலக்கணம் மூன்று அதிகாரங்களைக் கொண்டது. அவையாவன: எழுத்து, சொல், பொருள் என்பன. அதிகாரத்தின் உட்பிரிவாக இயல் அமைந்தது. ஒவ்வொரு அதிகாரத்துக்கும் ஒன்பதொன்பது இயல்கள் என 27 இயல்கள் உள்ளன. அதிகாரம் மூன்று; ஒரு அதிகாரத்திற்கு ஒன்பது இயல் (3⋆3) மொத்த இயல்கள் 27 (3*9) என்று யாவும் மூன்றின் மடங்காக (multiple of three) இருப்பதைக் கவனிக்கலாம். இது சமஸ்கிருத மரபுக்கு மாறாக உள்ளது.சமஸ்கிருத இலக்கண மரபு அஷ்டாத்யாயி (4*2) நான்கின் மடங்காக இருக்கும்.வரருசியின் இலக்கணத்தில் 12 பரிசேதங்கள் உள்ளன.இவற்றுள் முதல் ஒன்பது பரிசேதங்கள் மட்டுமே வரருசியால் எழுதப்பட்டன என்றும் மீதமுள்ள 4 பரிசேதங்கள் உரையாசிரியர்களால் சேர்க்கப்பட்டன என்றும் பிற்சேர்க்கை என்றும் கருதப்படுகின்றன.முதல் ஒன்பது பரிசேதங்கள் வரருசியால் எழுதப்பட்டன என்று கொண்டால் தமிழ் மரபு போலவே வரருசி இலக்கணமும் மூன்றின் மடங்காக இருக்கிறது எனக்கொள்ளலாம். திரிவர்க்கத்திற்கு (முப்பால்) எதிராக சதுர்வர்க்கம் (நாற்பால்) இருப்பதை இங்குச் சுட்டலாம்.சிலப்பதிகாரமும் மூன்று காண்டங்களைக் கொண்டதல்லவா? சமஸ்கிருத மொழியில் எழுதப்பட்ட மலையாள இலக்கணமான லீலா திலகம் எட்டு சில்பங்கள் கொண்டு நான்கின் மடங்காக உள்ளது. தொல்.இலக்கணத்தில் அதிகாரம்,இயல்களுக்கு அடுத்த நிலையில் சூத்திரங்கள் உள்ளன. பிராகிருதப் பிரகாசையில் பரிசேதங்களின் கீழே சூத்திரங்கள் உள்ளன.பொதுவாக வரருசியின் இலக்கணம் உட்பட வடமொழி இலக்கணச் சூத்திரங்கள் சுருக்கத்திற்கு (Brevity) பெயர் பெற்றவை. பெரும்பாலும் சூத்திரங்கள் ஒரு வரிக்குள் அடங்கிவிடும். ஆனால் தொல்காப்பியத்தில் இந்நிலை இல்லை. "தொல்காப்பியம் ஏனைய இலக்கணங்களைப் போலச் சொற்சுருக்கமுடையதன்று.பல சூத்திரங்கள் பத்து வரியுடையன. இருபது வரிக்கு மேல் செல்லும் சூத்திரங்களும் உண்டு.ஒரே பொருளைப் பல இடங்களில் கூறுவதும் உண்டு"

**ஒருங்கிணைந்த இலக்கணம்:**

தொல்காப்பியத்தை ஓர் ஒருங்கிணைந்த (integrated) இலக்கணம் என்பர் (தெ.பொ.மீ.,2002; அகத்தியலிங்கம், 2006) எழுத்து, சொல், பொருள் ஆகிய மூன்று பிரிவுகளைக் கொண்டு வாழ்க்கைக்கும் பொருள் இலக்கணம் கூறுவதால் இதனை ஒருங்கிணைந்த இலக்கணம் என்று அழைப்பர். மேலும் உலக வழக்கு செய்யுள் வழக்கு என இரு வழக்குகளையும் ஒன்றிணைத்து விளக்குவதாலும் ஒருங்கிணைந்த இலக்கணம் என்று கொள்வர்.எழுத்தும் சொல்லும் மொழி சார்ந்த விதிகளையும் பொருளதிகாரம் அகத்திணை, புறத்திணை, மெய்ப்பாடு, உவமை, செய்யுள் இயற்றும் விதிகள், மரபியல் ஆகியவற்றுக்கு இலக்கண விதிகளயும் தருகிறது. "தொல். இலக்கியம் எவ்வாறு அமையவேண்டும் என்ற பொருளை முக்கியமாகக் கணக்கில் எடுத்து இலக்கணம் செய்துள்ளது என்று கூற இயலும்". (வ.அய்.சுப்ரமணியம், 2007,

பக்:45) மேலும் தொல்காப்பிய அதிகாரங்களுக்குள்ளே பொருளதிகாரம் முக்கியமானது சொல்லும் பொருளதிகாரத்துக்குத் என்றும் எழுத்தும் துணையாக அமைவது என்பதும் இறையனார் களவியல் கருத்தாகும் (வ.அய்.சு,2007; பக்:45). வரருசியின் இலக்கணத்தை ஒருங்கிணைந்த இலக்கணம் என்று கூறமுடியாது.பொருளுக்கு இலக்கணம் சொல்லும் நோக்கில் விதிகளோ விளக்கங்களோ ஏதும் அமையவில்லை. பிராகிருத இலக்கியங்களின் பாடுபொருள் குறித்த பாகுபாடோ (அகம்,புறம்

எனப் பிரிப்பது) காதாக்களை இயற்றுவது, காதாக்களின் உறுப்புகள் (செய்யுளியல் போல) குறித்தோ எந்த விளக்கமும் வரருசி இலக்கணத்தில் இல்லை. மொழிக்குரிய எழுத்து சொல் குறித்த விதிகளே முதன்மையாக அமைந்துள்ளது. இவ்விடத்தில் மலையாள லீலாதிலக இலக்கணப் பொருண்மை குறித்துக் குறிப்பிடலாம். எட்டு சில்பங்கள் கொண்ட லீலாதிலகத்தில் முதல் சில்பம் மணிப்பிரவாள நடை பற்றியும் இரண்டாம் சில்பம் சொல்லியல் பற்றியும் மூன்றாம் சில்பம் சந்தி விதிகளையும் விவரிக்கின்றன. நான்கு, ஐந்து ஆகிய இரு சில்பங்களும் மணிப்பிரவாள நூல்களின் குணத்தையும் குற்றத்தையும் பேசுகின்றன. சில்பங்கள் ஆறும் ஏழும் அலங்காரங்கள் குறித்தும் இறுதியில் வரும் எட்டாவது சில்பம் இரசங்களைக் குறித்தும் பேசுகின்றன.லீலாதிலக ஆசிரியருக்கு வடமொழி நெறியும் தமிழ் நெறியும் தெரியும் என்று கூறுவர். (வ.அய்.சு 2007; பக்:43) லீலா திலக இலக்கணத்தையும் ஒருங்கிணைந்த இலக்கணம் என்று கொள்ளலாம். வரருசி இலக்கணத்தில் அலங்காரம், இரசக் கோட்பாடுகளுக்கு இடம் இல்லை.மொழி



வளர்ச்சி, மாற்றம் குறித்து மட்டுமே விதிகளைத் தந்து செல்கிறது.

**வரருசி வரலாற்று இலக்கணமா?**

*தொல்காப்பியத்தை ஒரு விளக்கமுறை இலக்கணம் (Descriptive Grammar) என்றால் வரருசியின் நூலை ஒரு வரலாற்று இலக்கணம் (Historical Grammar) என்று கூறலாம். மொழியியலார் இரண்டு விதமான இலக்கணங்களைப் பற்றிப் பேசுவர். ஒன்று விளக்கமுறை இலக்கணம் மற்றொன்று வரலாற்று இலக்கணம். விளக்கமுறை இலக்கணம் சமகால மொழிக்கு எழுதப்படுவது. வரலாற்றில் ஏதாவதொரு காலகட்ட (language spoken at a point of time) மொழிக்கு இலக்கணம் வகுப்பது. மாறாக வரலாற்று இலக்கணம் இரு காலகட்டத்தில் பேசப்பட்ட மொழியைத் தொடர்புபடுத்தி மொழி வளர்ச்சியை விளக்குவது. வரலாற்று இலக்கணம் எழுத விளக்கமுறை இலக்கணம் முன் தேவையாக இருக்கிறது. தொல்காப்பியம் விளக்கமுறை இலக்கணம் என்று மேலே குறிப்பிட்டோம்.அதாவது அவர் காலத்தில் வழக்கில் இருந்த தமிழ் மொழியை மட்டும் பெரும் பகுதி விவரித்துள்ளார். பெரும்பகுதி என்பது கவனிக்கத்தக்கது. தொல்காப்பித்துக்கு முன்பே வழக்கொழிந்த சில மொழிக்கூறுகளையும் அவர் விளக்குகிறார். வரருசியின் இலக்கணத்தை வரலாற்று இலக்கணம் என்றோம். இதையும் சற்று விளங்கிக்கொள்வோம். சமஸ்கிருத பண்டிதர்கள் பிராகிருத மொழி சமஸ்கிருத மொழியிலிருந்து வந்தது என்று கருதினர் (Assumed). "Sanskrit is perfected, Prakrit is derived" சமஸ்கிருதமே பழையது எனக் கொண்டு பிராகிருதம் அதிலிருந்து வந்தது என்று விதிகள் வகுத்தனர். பிராகிருத பிரகாசையில் ஒன்பது பரிசேதங்கள் உள்ளன. அவை:*

1) அஜ விதிகள்
2) அயுக்த விதிகள்
3) யுக்த விதிகள்
4) சங்கீர்ண விதிகள்
5) லிங்க விபக்தி விதிகள்
6) சர்வநாமம்
7) திங் விதிகள்
8) தாத்வா தேசம்
9) நிபாத சஞ்ஞா விதிகள்

*ஒன்பது பரிசேதங்களைக் குறித்து வேறொரு கட்டுரையில் விளக்கலாம்.*

**எச்சவியலும் சங்கீர்ண விதிகளும்:**

*தொல்காப்பியச் சொல்லதிகாரத்தின் இறுதியில்' எச்சவியல்' (எஞ்சி நின்ற அல்லது சொல்லாமல் விடுபட்ட இலக்கணம்) அமைந்துள்ளது.பிராகிருத பிரகாசையின் நான்காம் பரிச்சேதம் சங்கீர்ண விதிகள் (miscellaneous rules) என்ற பெயரில் இடம்பெற்றுள்ளது. எச்சவியல் என்றால் என்ன? "முற்கூறிய எண்வகை ஓத்தினுள்ளும் உணர்த்துதற்கு இடமின்றி எஞ்சி நின்ற இலக்கணங்களைத் தொகுத்து உணர்த்துதலின், இஃது எச்சவியல் என்னும் பெயர்த்தாயிற்று" என்பார் நச்சினார்க்கினியர் (தொல்.சொல்-பக் - 222) இந்த இயலுள் செய்யுள்ஈட்டுதற்குரிய நால்வகைச் சொற்கள் குறித்தும் செய்யுளில் வரும் விகாரங்கள் குறித்தும் செய்யுள் பொருள்கோள் குறித்தும் உணர்த்துகிறார். மேலும் அறுவகைத் தொகைமொழிகள் குறித்தும் விவரிக்கிறார். ஒரு சில வழுவமைதிக்கு விதிகள் தருகிறார். சொல்லதிகாரத்தில் முதற்கண் வரும் கிளவியாக்கம், வேற்றுமை, வேற்றுமை மயங்கியல், விளிவேற்றுமை, பெயரியல், வினையிய இடையியல்,உரியியல் ஆகிய இயல்களில் சேர்க்க முடியாத இலக்கணங்களை எச்சவியலில் அடக்கியுள்ளார். வரருசியின் நான்காவது பரிச்சேதம் சங்கீர்ண விதிகளைத் தருகிறது. சங்கீர்ண விதிகள் எச்சவியல் போலத்தான். பிராகிருதப்பிரகாசையில் முதல் மூன்று பரிச்சேதங்களில் சொல்லாமல் விடப்பட்ட செய்திகள் இங்கே விளக்கப்படுகின்றன. முதல் பரிச்சேதம் உயிர் எழுத்துக்கள் அடையும் மாற்றங்களையும் (vowel changes) இரண்டாம் பரிச்சேதம் தனிமெய்கள் அடையும் மாற்றங்களையும் (changes in single consonants) மூன்றாம் பரிச்சேதம் மெய் மயக்கங்கள் அடையும் மாற்றங்களையும் (dissimilar consonant clusters) விவரிக்கின்றன. மேற்கண்ட மூன்று பரிச்சேதங்களிலும் விடுபட்ட ஒலி மாற்றங்களை இப்பரிச்சேதம் விளக்குகிறது. சொல்லுக்கு இறுதியில் வரும் மகரம் திரிந்து அனுஸ்வரமாக ஒலிக்கும். சில சொற்களில் ஒலி இடம் பெயரல் (metathesis) ஏற்படும்.சமாசங்களில் (தொகை) தோன்றும் சந்தி விதிகள் இவையாவும் சங்கீர்ண விதி என்ற நான்காம் பரிச்சேதத்தில் சுருக்கமாக விளக்கப்படுகின்றன. அதாவது எச்சவியல் என்ற தலைப்பு இரு இலக்கணகளுக்கும் பொதுவாக உள்ளது. எஞ்சி நின்ற இலக்கணத்தை விவரிக்கிறது .இது குறிப்பிடத்தக்கது.*

**கலைச்சொற்கள்:**

இலக்கண விவரணையில் கலைச்சொற்கள் இன்றியமையாத இடத்தைப் பெறுகின்றன. கலைச்சொற்களில் காணப்படும் ஒற்றுமை வேற்றுமைகளைக் கொண்டு ஓர் இலக்கணம் எந்த மரபை (School of thought) சார்ந்தது என்று கண்டறியலாம் என்பர். தொல்காப்பியத்தில் பயின்று வந்துள்ள கலைச்சொற்களை நான்கு விதமாகப் பிரித்துக் காணலாம்.1) மொழியில் இயல்பாகப் பயன்படுத்தும் சொற்களைக் கலைச்சொற்களாகப் படுத்தல், (எகா : உயிர், மெய், வினை, பெயர், இடை, ஈறு, வல், மெல் போன்றவை) 2) ஆக்கப்பெயர்களைப் பயன்படுத்திக் கலைச்சொற்கள் உருவாக்குதல் (எ-கா: நெடில், குறில், இயைபு, இழைபு, ஈற்று, இயல்பு, புணர்ச்சி போன்றவை) தொகைப் சொற்களைப் பயன்படுத்துதல் (எ-கா: அளபெடை,உடம்படு மெய்,பெயரெஞ்சு கிளவி, ஓரெழுத்து ஒரு மொழி, ஆற்றுப்படை, போன்றவை) வடசொற்களாக வரும் ஒரு சில கலைச்சொற்கள் (அந்தம்,அதிகாரம் ஆசிரியம் போன்றவை). ஙகரம், ஙஃகான், போன்றவை எழுத்துக்களைச் சுட்டும் கலைச்சொற்கள். பிராகிருத பிரகாசையில் அருவமான (abstract) உருபன்கள் அமைக்கப்பட்டு மாற்றுருபுகள் தரப்பட்டுள்ளன. இயல்பான கலைச் சொற்களும் இடம் பெற்றுள்ளன. பாணினி இலக்கணத்தில் கலைச்சொற்களை கிருத்திரும என்றும் அகிருத்திரும என்று பிரிப்பர் (க.பாலசுப்பிரமணியன், (2007). கிருத்திரும என்றால் செயற்கையான கலைச்சொல் எனப்படும். அகிருத்திரும என்றால் இயல்பான சொல்லைக் கலைச் சொல்லாக பயன்படுத்துதல் ஆகும். வரருசி இலக்கணத்திலும் இத்தகைய. வகைப்பாட்டைக் காணலாம். 'அச்' என்பது உயிரெழுத்துக்களைக் குறிக்கும் கிருத்துரும கலைச்சொல்.' சு' (Su) என்பது எழுவாய் உருபன் (abstract morpheme) ஒருமைப் பெயர்களுடன் மட்டுமே வரும். இதுவும் கிருத்திரும (Abstract) கலைச்சொல் ஆகும். எ.கா:

ஆண்பால் : சிவ + *Su*-சிவோ
பெண்பால் : மால + *Su*-மாலா
அலிப்பால் : வன + *Su* = வனம்.

அடுத்து, அகிருத்திரும கலைச்சொல் 'ஸ்வர' என்பது உயிரெழுத்துகளையும் குறிக்கும்; இராகங்களையும் குறிக்கும்.

**முடிவுரை**

வரருசியின் இலக்கணமும் தொல்காப்பியமும் அறிமுகமாக ஒப்பிட்டுப் காட்டப்பட்டன.எச்சவியல் என்ற இயல் இரண்டு இலக்கணங்களிலும் காணப்படுகிறது.இயல்கள் மூன்றின் மடங்காக உள்ளன.தொல். பெரும்பகுதி விளக்கமுறை இலக்கணமாய் இருக்க, பிரகாசை (பீமீகூீவீஸ்மீபீ) இலக்கணமாய்த் திகழ்கிறது.கலைச்சொற்களை மேலும் ஆராய வேண்டிய திருக்கிறது.

**துணை நூல்கள்**


1. சண்முகம்,செ.வை, 1994, இலக்கண உருவாக்கம், அடையாளம் பதிப்பகம்: புத்தாநத்தம், திருச்சி மாவட்டம்.
2. பாலசுப்பிரமணியன்,க. 2017.தொல்காப்பிய இலக்கண மரபு அரிமா நோக்கு பதிப்பு: பெருங்குடி, சென்னை.
3. வ.அய்.சுப்ரமணியம் கட்டுரைகள், 2007, ஜெயா அரிகரன் தொகுப்பு: அடையாளம் பதிப்பு, புத்தாநத்தம், திருச்சி.
4. வ.அய்.சுப்ரமணியம், 2007. இலக்கணமும் ஆளுமைகளும் கட்டுரைத் தொகுப்பு, அருண் சுப்ரமணியம்.அடையாளம் பதிப்பு: புத்தாநத்தம், திருச்சி
5. *Prakrita Prakshai, Vararuci, (edited,D.C. Sircar: Motilal Banarsidas :New Delhi*
6. *Niti Dolshi, Prakrit Grammarians. Motilal Banarsidas:New Delhi.*


- தமிழ்ப்பல்கலைக்கழகத்தில் மொழியியல் துறையில்
- பேரா.கி.அரங்கனார் நிறுவிய அறக்கட்டளைச் சார்பில் வாசிக்கப்பட்ட கட்டுரை.

●

கட்டுரையாளர், எழுத்தாளர், ஓய்வுபெற்ற பேராசிரியர்.


புத்தகங்கள் அச்சிட
அற்புதத் தீர்வு
குறைந்த செலவு
அதிகபட்ச தரம்
அதிகபட்ச தரத்தில் மிகக்குறைந்த செலவில் புத்தகங்கள் அச்சிடுவதற்கு ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் (PRINT ON DEMAND) முறை ஒரு வரப்பிரசாதமாகும். ப்ரிண்ட் ஆன் டிமாண்ட் முறையில் நேர்த்தியான தாள், அச்சு மற்றும் பைண்டிங்குடன் மிகக்குறைந்த விலையில், தரமாக அச்சிட்டுத் தருவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம்.
REAL IMPACT SOLUTIONS, CHENNAI
தொடர்பு கொள்ள
98412 93503



Article

# DECODING OF WOMEN
## *IN CHITRA BANERJEE'S THE MISTRESS OF SPICES*

**Dr. M. Premavathy**

Women are seen as the heart of society. So, in all sectors, their talents and achievements should be recognized as well as appreciated. Several writers of literature portray their female protagonists as courageous, tough, and powerful individuals who defy social expectations in order to pursue their aspirations. The Mistress of Spices, Chitra Banerjee's debut novel, was published in 1997, and it was turned into movie in 2005. It successfully uses magical realism to present a story of South Asian immigrants' experiences in the United States. Tilo, the main character, narrates the story. Although Tilo's story plays a major role, during the course of the narrative, Tilo seeks to assist other supporting characters. She is regarded as a "Mistress" with the specific magic power associated with spices since she is a master in the ancient art of spices. Each female character rises to the challenge by claiming her uniqueness, making the decision to live her own life, and overcoming obstacles along the way to eventually succeeding. This paper sets out to analyse how the female characters are presented in The Mistress of Spices.


**Keywords: Identity, Immigrants, Love and Women.**

The study of images of women in art has been a significant area in the twenty-first century. Women are actually facing a lot of problems in their day- to- day life. They're seen as being domestic, pious, moral, pure, gentle, kind, graceful, simple and beautiful.

In all over the world, women have been deprived of their fundamental rights by a patriarchal society. Every now and then, Indian women are affected by forced marriages, inequalities, the dowry system, and sexual abuses. They are treated like puppets; the ends of the strings are always in the hands of patriarchal society. Like other woman writer, Chita Banerjee Divakaruni takes these kinds of problems to be argued in her novels. She portrays educated, resolute, psychologically tough, and rebellious female protagonists in her books and short stories who don't hesitate to free themselves from male chauvinism. In the patriarchal society of twenty first century, it is important for women's rights activists to break free from the shackles of male chauvinism and fight for their own liberation. It is the author's hope that her novels will inspire other women to break free from the shackles of male chauvinism and fight for their own liberation. Several researchers, critics, authors, journalists and publications regarded Divakaruni's female characters as most captivating portion of her work.

Chita Banerjee Divakaruni is an acclaimed Indian American novelist, poet and short story writer. Her famous works are The Mistress of Spices, Sister of My Heart, The Vine of Desire, The Last Queen and Queen of Dreams. She received American Book Award, Pen Josephine Miles Literary Award and Bay Area Book Reviewers' Award in 1996 for her debut collection of stories Arranged Marriage. It was well received by foreign readers, so she became famous among international readers. Many of her literary works were made into films and Television series by famous production houses. Her first novel The Mistress of Spices was turned into film of the same name in 2005. Sister of My Heart also was released as a Television series and it was directed by famous Indian Actress Suhasini Manirathnam in Tamil as Anbulla Snegithiye (Loving Friend). The producers N.R. Pachisia and Dipankar JojoChaki secured the rights to a film adaptation of her novel The Palace of Illusions in 2018. Joe Disabantino turned the book into the stage drama Fire and Ice: Draupadi's Story, which was staged in India under his direction. Director Samir Banerjee turned the short tale "The Word Love" from the anthology Arranged Marriage into a multilingual short film he titled Ammar Maa. Another tale from Arranged Marriage, "Clothes," was transformed into a dance play. In 2013, Divakaruni penned down the libretto for the opera River of Light performed by the Houston Grand Opera and Festival Opera with Jack Perla's original compositions, it had its world debut in 2014.

The Mistress of Spices (1997) is the novel which portrays the themes of cultural conflicts, feminist ideas, a sense of alienation and search for identity. Gurinder Chadha has written the script for Paul Mayeda Berges' 2005 adaptation of the book for the silver screen. In the American romantic film, Hollywood superstar Dylan McDermott portrays the character of Raven, while the prominent Indian actress and Miss World 1994 winner, Tilottama,



plays the lead character. Film reviewers have given the movie a variety of reviews. One of the trickiest subjects to master is magic realism. The fact that neither the director nor the writing of this movie knows how to bring that element to the screen is another factor to consider. As a result, the movie is pompous from beginning to end. The movie is detached from the original text. In order to make it a financial success, the director and writer undoubtedly have left out some crucial passages.

The protagonist of the novel is Tilo, short for Tilottama. She is named after the sun burnished sesame seed which is the spice for nourishment. She is one of the mistresses of spices. She has been trained by the First mother in the island along with other mistresses of spices. The new name and identity are actually given by the First mother. "Daughters it is time for me to give you your new names. For when you came to this island you left your old names behind, and have remained nameless since." (40) The old lady always mention that Tilo is the chosen one and serving the spices for the needed one is her ultimate destiny of her life. In the island Tilo is given proper knowledge about the origin, nature and uses of the spices. This novel is presented with mixed of magic and realism. The mysterious woman runs spice bazaar in Oakland, California. She is trying to give solution to all the problems of her customers with her magical spices. She has the special power to find past and future of a person by reading the heart and mind of that person.


Nayan Tara is the real name of the Tilo. She was born as a second daughter to the poor parents. Her parents are not happy about her arrival. She is not given proper care and love by her parents. "Wrap her in old cloth, lay her face down on the floor. What does she bring to the family except a dowry debt." (7) The dowry system is worst social menace. The bride groom family demands cash, jewellery and expensive items and other valuables during a marriage in certain parts of India. The sacred event of marriage is shattered and converted into a business arrangement as a result of the dowry system. The most heinous aspect of this system is that the more the demand, the wealthier the bridegroom's family is. Bride's parents are put under inhumane pressure to provide a significant dowry in any kind. This approach can be seen in both wealthy and impoverished communities. Tender, young girls are treated like products made keeping in mind the prospective in-laws. The dowry system is the burden for bride's family which cause the fear and agitation in the minds of Tilo's father. Tilo was growing like wild tree without the constant care of parents.

Tilo has wandered the village unattended; she has the magical ability to gain information about the object and the subject. She has found the way to earn money and fame with her secret talent. The merchant and sailors have carried tales of her power across the sea to every land. The bandits have also learned about her and have come to her village in search of her. They have abducted her for finding the quick way to get the riches. In the course of action, they have killed her parents and have destroyed the whole village. Which severely affects her mind; she couldn't even forgive her for the consequences she made. She leaps from the boat to get away from the thieves, and the waves carry her to the island of spices. Instead of the pirates described in the original book, bandits are used in the movie screenplay. The sea serpent's entrance and its role in saving her from the grave peril are even disregarded in the movie.

Tilo must follow certain rules that are drawn by the First mother. The mistress must always consider the other's desires and never use the spices for personal use. This is the first

and most important guideline. Second, she shouldn't abandon the shop. Hence, there is no risk in her avoiding the spices. Thirdly, she never touches her customers' skin. She eventually violates all the laws and guidelines. She falls in love with Raven, an attractive American customer. She first assumes he is Caucasian but later learns he is Native American. She is conflicted since spending time with him might cause her to lose her magical abilities, yet she cannot resist his magnetism. When they gaze into one other's eyes over the spice racks of her shop, they fall in love. In the end, Tilo makes the choice to spend the night with Raven despite the fact that she is aware the spices would be angry and that as a result, trouble will be caused in the lives of the people she loves about. Tilo resolves to prepare for the punishment that the spices could inflict through Shampati's fire in the novel after giving in to her sexual and mental cravings in her connection with Raven and therefore defying the orders of the First mother. The novel supports women's empowerment by expressing their aspirations. Decisions about her life are made by the new lady, and accept the resulting consequences. She is not yet poised to disregard or ignore what her heart desires or what she hopes to discover in life. Tilo, who has come to terms with her sexuality, can no longer predict the future or ease the suffering of others; she can only embrace the present moment.

Geeta is a member of the traditional diasporic family, where conflicts among South Asians of different generations are unavoidable. Geeta's grandfather is a traditional man. He values family and cultural traditions and often shares stories of his ancestors and their way of life. He can't accept the American way of life led by his granddaughter. He has always complained that Geeta has worked late at night in the office with other men and has come home only after dark in their car. He



thinks that her activity will bring a bad name to his family. Geeta's grandfather has believed that make-up is a sign of vanity and has gone against their family's values. “That Geeta, how much make-up she is using all the time. Uff, in my days only the Englishwomen and prostitutes are doing that. Good Indian girls are not ashamed of the face God is giving them. You cannot think what all she is taking with her even to work.” (86) Her grandfather is a conservative and retired army man. He is unable to comprehend how things have evolved over an extended period of time. He frequently complains to Tilo about Geeta. Nonetheless, Geeta is raised in American society, where she was born. She has embraced the cultural shift and has come to terms with her new identity.

However, Geeta's parents insist that because she is trustworthy, they can't enforce artificial restrictions on her based on Indian customs and beliefs because she understands their values. The entire family is shocked when her grandfather tries to set up her wedding. Even though Geeta’s parents have granted her complete independence, they cannot accept her lover. Another example of the Indian parental perspective is shown in the fact that although females are given the majority of opportunity and independence, most Indian parents still find it difficult to accept their

daughters' choice of a life partner. They are actually frightened by her decision to spend her life with a Mexican-American Chicano man and have become completely estranged from herself. The identity debate is framed differently for second generation Indians like Geeta. She contests her continued adherence to patriarchal customs that she identifies with her grandfather. Tilo understands Geeta's suffering, attempts to ease it, and, according to the novel, is successful in bringing the family back to harmony and serenity.

Raven’s mother Celestina belongs to the Native American community. She isolates herself and her family from her society. She pretends to be white because she believes it would enhance her happiness and self-esteem. She despises her own community. For this reason, Raven dislikes his mother. After starting to work, he leaves her alone. He begins to lead an existence without purpose. He works and gives his mother some money, but he never even responds to her letters. Then one day, when he goes looking for his mother, he discovers that she has passed away.

Mistress of Spices is a courageous endeavour; however, Gurinder Chadha changes numerous crucial subjects and concerns throughout the adaptation. There are numerous major and significant issues, particularly racial discrimination and related problems faced by the Indian immigrants in USA. Which while being explicitly acknowledged in the novel, receive little attention in the movie. In the book, the spice bazaar is a dilapidated establishment, but in the movie, it resembles a cultural boutique with remarkable decorations. The love story that reunited and unified the east-west cultural divide is the sole aspect of the movie that is highlighted. In the film, Tilo is the natural beauty and she attracts the attention of Raven. But in the novel after walking through the magical fire to accept the new identity as a spice mistress, the youthful Tilo is transformed to her old lady form. She has a twisted figure and skin the colour of weathered sand. The film also omits the problems that faced by Indian immigrants in the foreign land.

Divakaruni’s female characters are nuanced, masterfully written characters that transcend gender norms and shatter the moulds of conventional gender roles. The many backgrounds and cultures of the female characters in Divakaruni's works highlight the varied experiences of women across the world. The female characters of Divakaruni struggle with problems including marital abuse, cultural expectations, and gender discrimination. The female protagonists in Divakaruni frequently find themselves at odds with social conventions and expectations, battling patriarchal frameworks that limit women's autonomy. The female characters in Divakaruni are not passive bystanders to their circumstances; instead, they take charge of their lives and the lives of those around them. The strong and uplifting female characters in Divakaruni are an inspiration to other women who deal with similar difficulties in their life.

**Works Cited:**


- Chakraborty Bose, Sayantika and Das, Saptorshi. “The Cinematic Adaptation of Chitra Banerjee Divakaruni’s The Mistress of Spices”. International Journal of Recent in Social Sciences and Humanities (IJRRSSH), Vol.3, Issue 3, Month: July- September 2016:1-5.
- Cinematic Text: The Mistress of Spices. Directed by Paul Mayeda Berges. Screenplay: Gurinder Chadha. Cast: Aishwarya Rai, Dylan McDermott and Anupam Kher. Entertainment Films, 2005.
- Divakaruni, Chitra Banerjee. The Mistress of Spices. London: Black Swan, 1997.Print.


●


*Coloumnist, Associate Professor of English, CDOE, Bharathidasan University, Tiruchirappalli -24*